# கத்தோலிக்க திருமறை

## தரம் - 6

# ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி

TG 460

நம்பிக்கை
வாழ்வு



சமயக் கல்வித் துறை
மொழிகள், மானுடவியல், சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

அச்சிடலும் விநியோகமும் - கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

# கத்தோலிக்க திருமறை

## ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி

## தரம் - 6

சமயக் கல்வித் துறை
மொழிகள், மானுடவியல், சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை
2007

அச்சிடலும் விநியோகமும் - கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

கத்தோலிக்க திருமறை
தரம் - 6
ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி

முதற்பதிப்பு - 2007
மீள்பதிப்பு - 2009

© தேசிய கல்வி நிறுவகம்

எல்லா உரிமையும் இலங்கை அரசினருக்கே

சமயக் கல்வித்துறை
மொழிகள், மானுடவியல், சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

வெளியீடு
கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திற்காக கிரபிக்டெக் தனியார் நிறுவனத்தினால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

# பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

தற்போதைய ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியானது ஆசிரியர்கள் தமது பாடங்களைக் கற்பிப்பதற்குப் பின்பற்ற வேண்டிய அவசியமான கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகளை மேற்கொள்வதற்கு சிறந்த ஒரு வழியாட்டியாகும்.

இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியானது நீங்கள், உங்கள் வகுப்பறைச் செயற்பாடுகளை மாணவர் - மையக் கற்றலுக்கு ஏற்ற வகையில் ஒழுங்கமைப்பதற்கான வழிகாட்டலை வழங்குகின்றது. இன்றைய வகுப்பறைக் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டை மாணவர் மையமாக ஒழுங்கமைப்பதென்பது எமது இலங்கை ஆசிரியருக்கும் வகுப்பறைக்கும் ஒரு புதிய அனுபவமன்று. எவ்வாறாயினும் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி மூலம் மாணவர் மையக் கற்றல் - கற்பித்தல் முறைமையியலுக்கு ஒரு புதிய பண்புக் கூறு கிடைக்கிறது.

இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியானது மாணவர்களின் பங்குபற்றுதலை உறுதிப்படுத்தும் வகையில் பாடத்தைத் திட்டமிடுவதற்கு அவசியமான பாதையை வழங்குவதோடு மட்டுமல்லாது அதற்கு அவசியமான சூழலை மதிநுட்பத்துடன் கட்டியெழுப்பவும் உதவுகிறது.

ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியின் உள்ளார்ந்த அடிப்படையானது ஆசிரியர் என்பவர் வெறுமனே அறிவை ஊடுகடத்துபவராக அல்லாது அறிவில் மாற்றத்தை ஏற்படுத்துபவராகவும் இருக்க வேண்டும் என்னும் தத்துவத்தைக் கொண்டுள்ளது. இச்செயற்பாடானது மாணவரை கற்பவர் என்னும் நிலையிலிருந்து அறிவைத் தேடுபவர் என்னும் நிலையை அடைவதற்கும், இதன் மூலம் புதிய அறிவை உருவாக்கவும் உதவுகின்றது. ஆகவே, ஆசிரியர் என்பவர் மாணவருக்கு புதிய அறிவை ஆய்ந்தறிந்து கண்டுபிடிப்பதற்கான வழிகாட்டியாகவும் தூண்டியாகவும் செயற்பட வேண்டும்.

ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியின் உள்ளார்ந்த தத்துவமும் செயற்பாட்டு வடிவமைப்பும் பழமையான கற்பித்தல் முறைமையியலையும் சிந்தனைகளால் உண்டாகும் தடைகளையும் தகர்த்தெறிய ஆசிரியர்களைத் தூண்டும் என நம்பப்படுகின்றது. எனவே, ஆசிரியர்கள் புதிய கற்பித்தல் அணுகுமுறைகளையும் கற்பித்தல் முறைகளையும் அவசியம் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். புதிய ஆயிரமாம் ஆண்டானது மிகப் பரந்த எல்லையற்ற புதிய அறிவின் தோற்றத்தையும் உருவாக்கத்தையும் கண்டுள்ளது. ஆகவே, ஒவ்வொருவரும் தமது புதிய செயற்பாடுகளை ஒரு முகப்படுத்தித் திட்டமிடுவதற்குப் பழைய முறைகளை மாற்றியமைக்க வேண்டிய தேவையுள்ளது.

ஆசிரியர் தனது கற்பித்தல் பணியில் பயன்படுத்தக்கூடிய அடிப்படையான அறிவுறுத்தல்களை வழங்குவதுடன் உயர் அணுகுமுறைகளை நோக்கி அவரை வழிநடத்துவதும் இவ்வகையான ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகளில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்களின் ஊடாக எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன் ஆசிரியர், இவ் அறிவுரைப்பு வழிகாட்டியை உரிய முறையில் கற்று அதனுடைய நோக்கங்களைக் கொண்டு வகுப்பறையில் உச்ச பயனைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் மூலம், வகுப்பறையை வினைத்திறன் மிக்கதும் தரமானதுமாக்குவதுடன் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை உயர்வடையச் செய்வதற்கும் ஆசிரியர் பெரும் முயற்சி மேற்கொள்ளுவார் என்பது எனது நம்பிக்கையாகும்.

இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியைத் திறம்படத் தயாரித்து வெளியிடுவதற்கு தமது நேரத்தையும் சிறப்புத் திறமைகளையும் பங்களிப்பு செய்த தேசிய கல்வி நிறுவகத்தைச் சேர்ந்த பாட நிபுணத்துவர்களுக்கும் வெளி வளவாளர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

பேராசிரியர் லால் பெரேரா
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம

# கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகத்தின் செய்தி

யாவருக்கும் கல்வி என்னும் நோக்கத்தை மையமாகக் கொண்டு எமது அரசு நாட்டிலுள்ள சகல பாடசாலை மாணவர்களுக்கும் இலவசமாகப் பாடநூல்களை வழங்கி வருகின்றது. அத்துடன் ஆசிரியர்களுக்கு ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகளை ஆக்கி வழங்குவதானது கற்றல் - கற்பித்தல் செயன்முறையில் பண்புத்தர விருத்தியை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வகுப்பறைக்குள்ளும் அதற்கு வெளியேயும் மாணவர்களின் அறிவுவிருத்திச் செயற்பாட்டுக்கு வழிகாட்டுவோர் ஆசிரியர்களே. மேலும், பாடத்திட்டத்தால் எதிர்பார்க்கப்படும் தேர்ச்சி மட்டங்களை நோக்கி மாணவர்களை வழிநடாத்தும் முக்கிய நபரும் ஆசிரியரேயாவார். இந் நோக்கத்தை அடைவதற்கு இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி உங்களுக்குக் கைகொடுக்கும். இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டல்களைக் கற்றுப் பின்பற்றுவதன் மூலம் கற்றல் - கற்பித்தல் செயன்முறையை அதிக பயனுறுதியுடையதாக மாணவர்களுக்கு வழங்கும் பொறுப்பு ஆசிரியர்களாகிய உங்களைச் சார்ந்ததாகும். இப் பொறுப்பை உணர்ந்து செயற்படும் நீங்கள் பெறுமதிமிக்க ஒரு வளம் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

அறிவு, திறன்கள், மனப்பாங்குகள், தேர்ச்சிகள் என்பவற்றையும் வலிமையான சமூக மற்றும் உள்ளார்ந்த திறன்களையும் கொண்ட முழுமையான பிரசைகளை சமூகத்திற்கு வழங்கும் பொறுப்பு உங்களுடையதே. தற்கால உலகின் சவால்களுக்கு முகங்கொடுக்கக்கூடிய எதிர்கால சந்ததியை நீங்கள் உருவாக்குவீர்கள் என்பதே என் எதிர்பார்ப்பாகும். உங்கள் ஆற்றலை உறுதியாக்குவதன் மூலம் அவ் எதிர்பார்ப்பை வெற்றிகரமாக்குவதற்கு இவ் அறிவுரைப்பு வழிகாட்டி உங்களுக்கு உதவும் என உறுதியாக நம்புகின்றேன்.

டபிள்யு.எம்.என்.ஜே புஸ்பகுமார
கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்
'இசுருபாய'
பத்தரமுல்ல

# ஆலோசகர் குழுவும் எழுத்தாளர் குழுவும்

**பணிப்பு:**

பேராசிரியர் . ஜே. டபிள்யூ. விக்கிரமசிங்க
பணிப்பாளர் நாயம், தேசிய கல்வி நிறுவகம்

**ஆலோசனை:**

திரு. விமல் சியம்பலாகொட
உதவிப் பணிப்பாளர் நாயகம்
மொழிகள், மானிடவியல், சமூக விஞ்ஞானப் பிரிவு

**ஆலோசனைக் குழு:**

அதிமேதகு பிராங்க் மாக்கஸ் பெர்னாந்து
வணக்கத்துக்குரிய ஐவன் பெரேரா
வணக்கத்துக்குரிய சிறில் பெரேரா
அருட்தந்தை கலாநிதி. மர்வின் பெர்னாந்து
அருட்தந்தை ஜே. ஜே. மவ்லிஸ்
அருட்தந்தை ஜூட் ஜோன்ஸன்
அருட்சகோதரர் ஜோசப் காந்தன்
அருட்சகோதரர் ஜோசப் பீரிஸ்
கலாநிதி. சேர்லி விஜேசிங்க

**மொழிபெயர்ப்பு:**

திருமதி. லூசில்டர் பெர்ணாந்து
செல்வி. பிரான்சிஸ்கா இராஜயோகினி
திருமதி. சரோஜினி செல்வரெத்தினம்

**செயற்றிட்டத் தலைவர்:**

அருட்தந்தை கலாநிதி. ஜயலத் பலகெல்ல

**அட்டைப்படம்:**

செல்வி. தெரேஸ் லியோனி பெரேரா

# உள்ளடக்கம்

**பக்கம்**

**விடயம்**


| | | |
|---|---|---|
| பணிப்பாளர் நாயகத்தின் செய்தி | | iii |
| முன்னுரை | | iv |
| எழுத்தாளர் குழு | | vi |
| உள்ளடக்கம் | | |
| **6.1.0** | **பாடத்திட்டம்** | |
| 6.1.1 | அறிமுகம் | 1 |
| 6.1.2 | பாடக்குறிக்கோள்கள் | 3 |
| 6.1.3 | வகுப்புக்குரிய தேர்ச்சி | 4 |
| 6.1.4 | கற்றல் - கற்பித்தல் முறை | 5 |
| 6.1.5 | பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டமும் | 6 |
| 6.1.6 | கணிப்பீடும் மதிப்பீடும் | 7 |
| 6.1.7 | பாடத்திட்டம் | 8 |
| | தேர்ச்சி | |
| | தேர்ச்சி மட்டம் | |
| | விடய உள்ளடக்கம் | |
| **6.2.0** | **பாடத்திட்டத்தின் தொடரகம்** | |
| 6.2.1 | கற்றல் - கற்பித்தல் முறை விளக்கம் | 12 |
| 6.2.2 | தரவிருத்தி உள்ளீடு | 16 |
| 6.2.3 | செயற்பாட்டுத் தொடரகம் | 17 |
| **6.3.0** | **கணிப்பீடும் மதிப்பீடும்** | |
| 6.3.1 | கணிப்பீடும் மதிப்பீடும் - விளக்கம் | 79 |
| 6.3.2 | கற்றல் - கற்பித்தலை மேலும் விரிவுபடுத்துவதற்கான கருவிகள் | 81 |

## 6.1.1 அறிமுகம்

நற்பண்புள்ள, நன்றிமிக்க சமூகத்தை படைப்பதற்கு அனைவரும் மறையறிவினால் ஊட்டம் பெறுவது அவசியம். எவ்வாறாயினும் மறையறிவு, அறிவுக்கு மாத்திரம் வரையறுக்க முடியாது. அதனால் மாத்திரம் மேற்குறிப்பிட்ட நோக்கை அடைய முடியாது. அதற்காக பெற்ற அறிவினை வாழ்வில் இணைத்து நடைமுறைப்படுத்த வேண்டும். சமயக் கல்வி ஒவ்வொரு நபரை போன்றே, சகல சமூகத்தினதும் கோட்பாட்டை ஒழுங்கமைப்பதில் முக்கிய பங்கை வகிக்கின்றது.

புதிய கலைத்திட்டம் தேர்ச்சிகளை மையமாகக் கொண்டுள்ளமை மேற்குறிப்பிட்டதை அடைவதற்கு தேவையான வழியை வகுக்கும். தேர்ச்சி என்பது, அறிவு, திறன், மனப்பாங்கு ஆகியவைகளை ஒன்றோடொன்று இணைத்து, அவற்றை வாழ்வின் வழக்கமாக கொள்வது என எளிதாக குறிப்பிடலாம். தேர்ச்சியை அடையும் வழியாக ஒவ்வொரு பாடப்பகுதிக்கும் அல்லது ஒவ்வொரு செயற்பாட்டிற்கும் இணைத்து தேர்ச்சி மட்டம் கொடுக்கப்பட்டுள்ளது. ஆசிரியரின் செயலாவது மாணவன் இத்தேர்ச்சிமட்டத்தை அடைவதற்காக வளவாளராக (ஆதாரம் வழங்குபவராக) (Resource Person) வழிகாட்டுவது.

சமய பாடத்தை கவனத்தில் கொள்ளும்போது மாணவனை ஒழுங்காக ஓர் தேர்ச்சி மட்டத்தை நோக்கி இட்டுச் செல்லும் போது, மிக பொறுமையுடன் செயலாற்ற வேண்டும். ஏனெனில் மாணவனின் சமய ரீதியான, நற்பண்பு வளர்ச்சியை, அப்பியாசங்கள் அல்லது செயற்பாடுகளால் இலகுவாக கணிப்பிட முடியாது. அவ்வாறான வளர்ச்சி உடனே நடைபெறும் ஒன்றல்ல. அதனால் ஆசிரியர்: மாணவருடன் மிக பொறுமையுடன் செயலாற்றுவதுடன் மாணவனுக்கு தனது வாழ்வு ஓர் முன்மாதிரி யாவதும் அவசியம்.

அநேகமாக மாணவனை நற்பண்புள்ள வாழ்விற்கு இட்டுச்செல்ல முடிவதும், அவருள் மறை விழுமியங்களை வளர்க்கவும் இயலுவது முதலில் ஆசிரியர் நற்பண்புள்ள வாழ்வை வாழும் மறை விழுமியங்களை தம்முள் வளர்த்துக் கொண்டவர் என்பதை மாணவன் புரிந்து கொண்ட பின்பே.

10ம், 11ம் வகுப்பு மாணவர்களை நோக்கும் போது ஆசிரியருக்குரிய பங்கு மிக முக்கிய இடத்தை வகுக்கும். பலவேளைகளில் மாணவனின் சமயம் கற்றல் 11ம் வகுப்புடன் முடிவடையும். ஆகையால் 6ம் வகுப்பில் இருந்து பெற்றுக்கொள்ள முயற்சித்த தேர்ச்சி, இப்பொழுது அவர்களின் திறமான வாழ்க்கை எண்ணக்கருக்களாக்கி, பரிபூரணமான கிறிஸ்தவ வாழ்வை வாழ அவர்களுக்கு முடியும் வகையில் அவர்களை சமூகத்திற்கு அனுப்ப ஆசிரியர் திறமையுள்ளவராக வேண்டும்.

ஆறாம் வகுப்பில் இருந்து பதினோராம் வகுப்பு வரை கத்தோலிக்க பாடநெறியின் அனைத்து பாடங்களும்.

- மூவொரு இறைவன்
- விசுவாச வாழ்வினை செயல்படுத்தல்
- விசுவாச வாழ்விற்கு ஊட்டம்
- செப வாழ்வு

ஆகிய நான்கு ஆய்வுப் பொருளின் கீழ் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. அவ்வாறே ஒவ்வொரு வகுப்பிலும் அவ் ஆய்வுப் பொருள்களை ஆழமாக கற்பதற்கு இடமளிக்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட அனைத்தும் இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் எனும் பாப்பாண்டவரால் குறிப்பிட்ட விஷேட கமிட்டி ஒன்றின் மூலம் எழுதப்பட்ட "கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி" (Cathechism of the Catholic Church) எனும் நூலில் வரும் ஆய்வுப் பொருள்களுக்கமைய ஒழுங்கமைத்துள்ளது.

புதிய கலைத் திட்டத்துக்கு ஏற்ப எதிர்பார்ப்பது மாணவனின் கைக்கெட்டும் பாடநூல்களை வகுப்பில் வாசித்து அதனைக் கற்பிப்பதல்ல, ஆராய்ச்சியை குறிக்கோளாகக் கொண்டு மாணவனை செயற்பாடுகளில் ஈடுபடுத்தல், அதனூடாக இறுதியில் மாணவனை ஓர் தேர்ச்சி மட்டத்திற்கு இட்டுச் செல்வதே. கத்தோலிக்க மறையறிவினை மிகவும் அர்த்தமுள்ளதாகவும் மனங்கவரும் வகையிலும் மாணவரிடம் கொண்டு செல்ல இப்புதிய ஆசிரியர் வழிகாட்டி உதவும் என்பது எமது எதிர்பார்ப்பாகும்.

## 6.1.2 பாடக் குறிக்கோள்கள்

1. படைப்பின் உயரிய படைப்பாகிய மனிதன் தன் படைப்பாளரை அறிந்து அவரிடம் உள்ள விசுவாசத்தை உறுதி செய்து கொள்ளல்.

2. யேசு கிறிஸ்துவின் பணியையும் உயிர்ப்பின் அனுபவத்தையும் ஏற்று, வளர்ந்த முதிர்ச்சி பெற்ற கிறிஸ்தவ வாழ்வினை எடுத்துக்காட்ட வழிவகுத்தல்.

3. இறைவார்த்தை, திருவருட் சாதனங்களும் திருவழிபாட்டினால் ஊட்டம் பெற்று கிறிஸ்தவ வாழ்விற்கு சமுதாயத்தில் சான்றுபகர வழிவகுத்தல்.

4. அடிப்படை கிறிஸ்தவ கலாச்சாரத்தை வளர்க்கும் தேவ கட்டளைகளும் மழைப் பொழிவினால் மறையறிவை கற்றலும் வாழ்தலும் ஒரே செயற்பாடு என்பதை விளக்குதல்.

5. செபத்தினால் வலிமை பெற்று சமூகத்தை ஒளிரச் செய்யும் ஒளியாக செயல்படல்.

6. கிறிஸ்துவின் அளவற்ற அன்பினால் வளர்ச்சி பெற்று அவ்வன்பை எம் சமூகத்தினுள் பரம்பச் செய்தல்.

7. எம்மைச் சூழ உள்ள இயற்கைச் சூழல் இறைவனால் எமக்களிக்கப்பட்ட கொடை என எண்ணி, அதனைப் பாதுகாக்கவும், அபிவிருத்தி செய்யவும் தேவையான திறமையையும் அறிவையும் வளர்த்தல்.

8. சமுதாய விழுமியங்களைப் பாதுகாத்து மானிட ஒற்றுமையை (உறவை) வளர்ப்பதுடன், கிறிஸ்தவ தனித்துவத்தினுள் விழிப்புடனான சமூகத்தை உருவாக்க உதவுதல். (கை கொடுத்தல்)

## 6.1.3 வகுப்புக்குரிய தேர்ச்சி

1. இறைவனை அறிந்து கொள்வதனூடாக விசுவாச வாழ்வு வாழ்வர்.

2. இறைவாழ்வு வாழ்வதற்கு பத்துக் கட்டளைகள் மூலம் வழிநடத்தப்படுவர்.

3. கிறிஸ்தவ வாழ்வை வளப்படுத்திக் கொள்வதற்கு திருவருட் சாதனங்களைப் பெற்றுக் கொள்ளுதல்.

4. இறை குமாரனாக மாற்றிக்கொள்ள இறைவழிபாட்டை ஒரு சக்தியாக ஆக்கிக் கொள்வார்.

## 6.1.4 கற்றல் - கற்பித்தல் செயன்முறை

சமயம் பற்றிய அறிவு வாழ்க்கைக்கு இன்றியமையாததாகும். எனினும், சமய அறிவு மாத்திரம் வாழ்க்கைக்குப் பயனளிப்பதில்லை. மாறாக, அவ்வறிவு நடைமுறை வாழ்வில் பின்பற்றப்படல் வேண்டும். இதனை எவ்வாறு செய்தல் வேண்டும்? பல்வேறு வழிமுறைகள் மூலம் இதனை மேற்கொள்ளலாம். வகுப்பறையில் கற்கின்றவைகளும், வழிமுறைகளும் ஒன்றிணைய வேண்டுமெனில், கற்றவற்றை வாழ்க்கையில் பயிற்சிப்படுத்தல் வேண்டும். அப்போதுதான் சமயத்தின் மீதான பற்று ஏற்படும். உதாரணமாக

- திருப்பலி ஒன்றை ஏற்பாடு செய்து, அதில் பங்கேற்றல்.
- பல்வேறு சந்தர்ப்பங்களில் நிறைவேற்றும் திருவழிபாடுகளுக்குச் சமூகமளித்தல்.
  (உதாரணமாக, நத்தார், பெரிய வெள்ளி, பெரிய வியாழன், பாஸ்கு ஞாயிறு)
- பங்கின் இறை இரக்கச் சேவைகளில் ஈடுபடுதல்.
- நோயாளி ஒருவரைத் தரிசிக்கச் சென்று, அவரை ஆறுதல்படுத்தல்.
- ஏழைப் பிள்ளைகளுக்கு அன்பளிப்புகளை வழங்குதல்.
- முதியோர் இல்லங்களைத் தரிசிக்கச் செல்லுதல், அவ்விடங்களைச் சுத்தம் செய்தல்.
- முதியோருக்கு அன்புடன் உபகாரம் செய்தல்.
- தரிசிப்பதற்குரிய புனித ஸ்தலங்களுக்குச் சென்று, அங்கு இடம்பெறும் சமயக் கிரியை களில் பங்கேற்றல்.
- செபம், தியானங்களில் ஈடுபடல்.

இவ்வாறான வழிமுறைகள் மூலம் வகுப்பறையில் கற்கின்றவற்றை வாழ்வில் பரீட்சித்து, அதன் ஊடாக, வாழ்வுக்கும் சமயத்துக்கும் தொடர்புண்டு என்பதை மாணவன் கற்றுக் கொள்கின்றான். மேற்குறிப்பிட்டவை தவிர்ந்த பல்வேறு வழிமுறைகளை ஆசிரியர் கையாண்டு, அதனூடாக மாணவர்களுக்கு பல சந்தர்ப்பங்களை ஏற்பாடு செய்து கொடுப்பதற்குரிய சந்தர்ப்பம் இப்புதிய பாடத்திட்டத்தில் ஆசிரியருக்குண்டு.

## 6.1.5 பாடசாலைக் கொள்கையும் [illegible]

1. பாடசாலை வாரத்தினுள் குறைந்தது ஒரு முறையாவது ஒரே வகுப்பாக மாணவர்கள் திருப்பலியில் பங்கேற்க வழிவகுத்தல்.

2. மாணவர்களின் ஆன்மீக வளர்ச்சிக்காக பங்குத்தந்தையின் வழிகாட்டலைப் பெறல்.

3. திருவழிபாட்டு ஆண்டினுள் ஒவ்வொரு காலத்திற்குமேற்ற திருவழிபாடுகளிலும் பக்தி முயற்சிகளிலும் ஈடுபட மாணவர்களை பழக்குதல் அதற்காக அருட் தந்தையினரின் உதவியைப் பெறுதல்.

4. ஒன்றிப்பு, சாதாரணத்துவம், பிற கருத்துக்களை பொறுமையுடன் ஏற்றல் போன்ற சமய குணாதிசயங்களை வளர்ப்பதற்கான செயல்திட்டங்களை பாடசாலையில் ஒழுங்கு செய்தல்.

5. கிறிஸ்தவ மாணவ, சிறுவர் அமைப்புக்களை உருவாக்கி பரிபூரண கிறஸ்தவ வாழ்வை வாழ மாணவர்களுக்கு பயிற்சியளித்தல்.

6. பங்கின் இரக்கச் சேவை அமைப்புகளில் மாணவர்களை ஈடுபடுத்துவதற்காகப் பெற்றோரை அறிவுறுத்தல்.

## 6.1.6 கணிப்பீடும் மதிப்பீடும்

கீழே தரப்படும் முறையில் மதிப்பீடு செய்க.

01. ஒவ்வொரு பாடம் முடிவிலும் எழுத்துப் பரீட்சையும் ஒப்படையும் கொடுத்தல்.

02. தவணை முடிவிலும் வருடக் கடைசியிலும் முறைசார் பரீட்சை நடாத்துதல்.

03. குறுகிய கால செயற்றிட்டங்களைக் கொடுத்தல்.

04. வாசித்தல், எழுதுதல், செவிமடுத்தல் ஆகியவை மூலம் மறை அறிவை மதிப்பீடு செய்தல்.

05. மறைசார் செயற்பாடுகளின் போதும் பொதுநல வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போதும் அவதானித்தல்.

06. பங்கில் இரக்கச் சேவை சபைகளில் சேர்ந்து செய்யும் சேவைகளைக் கேட்டறிதல்.

07. பாடசாலையில் நிறுவப்படும் சமய, கலாசார சங்கங்களில் சேர்ந்து செய்யும் சேவைகளை அவதானித்தல்.

08. வகுப்பில் தலைமைத்துவம் வகித்து பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ளும் விதத்தையும் கடமைகளை நிறைவேற்றும் முறையையும் மதிப்பீடு செய்தல்.

09. தரம் 10, 11 முடிவில் பரீட்சைத் திணைக்களத்தின் மூலம் நடாத்தப்படும் பரீட்சை மூலம் மதிப்பீடு செய்தல்.

10. பாடசாலை மட்டக் கணிப்பீட்டின் மூலம் மதிப்பீடு செய்தல்.

## 6.1.7 பாடத்திட்டம்

# தரம் 6

| தேர்ச்சியும் தேர்ச்சி மட்டமும் | விடய உள்ளடக்கம் | பாடவேளைகள் | கற்றல் வளங்கள் |
|---|---|---|---|
| 1.0 இறைவனை அறிந்து கொள் வதனூடாக விசுவாச வாழ்வு வாழ்வர். | | | |
| 1.1 சிறப்புத் தகைமை | 1.1 உலக படைப்புச் செய்தி<br>• கதை சொல்லும் முறை<br>• பாடல் முறை<br>• சித்திர முறை | 3 | திரு விவிலியம்.<br>தொடக்க நூல்<br>அதிகாரம் 1, 2<br>திருப்பாடல் அதிகாரம் 8, 104 கட்புல செவிப்புலச் சாதனம்.<br>• சலனமற்ற உருவங்கள்<br>• ஒலிப்பதிவு நாடா<br>• CD படக்காட்சி<br>• VCD படக்காட்சி |
| | 1.2 படைப்பின் மேன்மை<br>• வரைதல் முறை<br>• குழுக் கலந்துரையாடல்<br>• ஒப்படை | 2 | |
| | 1.3 புதுமையான இறைத்திட்டம்<br>• கதை சொல்லும் முறை<br>• குழுக் கலந்துரையாடல் முறை<br>• நிகழ்வுகளை விபரித்தல் முறை<br>• வரைதல் முறை | 2 | |
| | 1.4 படைப்பின் பலதரப்பட்ட தன்மைகள்<br>• கதை சொல்லும் முறை<br>• விரிவுரை முறை<br>• வரைதல் முறை<br>• குழுக் கலந்துரையாடல் முறை<br>• புகைப்படப் பாவனை முறை | 3 | |
| | 1.5 இறைவனின் சாயலாகப் படைக்கப் பட்ட மனிதன்<br>• கதை சொல்லும் முறை<br>• குழுக் கலந்துரையாடல் முறை<br>• நாடகம் நடித்துக் காட்டல்<br>• புகைப்படப் பாவனை முறை | 2 | |
| 2.0 இறைவாழ்வு வாழ் வதற்கு பத்துக் கட்டளைகள மூலம் வழிநடத் தப்படுவர். | | | |
| 2.1 சிறப்புத் தகைமை இஸ்ராயேலை இறைவாழ்வு வாழ அழைத்த இறை வனின் சித்தத்தின் படி வாழ்வர். | 2.1 குல முதுவர்கள்<br>• கதை கூறல் முறை<br>• அபிநய முறை, சிந்தனைக் கிளர்வு முறை | 3 | திரு விவிலியம்<br>தொடக்க நூல் 12:1-4<br>தொடக்க நூல் 15 / 1-21<br>தொடக்க நூல் 21 / 1-8<br>தொடக்க நூல் 28 / 10-22 |

| தேர்ச்சியும் தேர்ச்சி மட்டமும் | விடய உள்ளடக்கம் | பாடவேளைகள் | கற்றல் வளங்கள் |
|---|---|---|---|
| | 2.2 மோசேயின் அழைப்பு<br>• கதை சொல்லும் முறை<br>• வரைதல் முறை - குழுக் கலந்துரையாடல்<br>• புகைப்படப் பாவனை முறை<br><br>2.3 சீனாய் உடன்படிக்கை<br>• கதை சொல்லும் முறை<br>• குழுக் கலந்துரையாடல் முறை<br>• வரைதல் முறை<br>• சுவரொட்டி முறை<br><br>2.4 இறை ஆராதனை<br>• கதை சொல்லும் முறை<br>• குழுக் கலந்துரையாடல் முறை<br>• புகைப்படப் பாவனை முறை<br>• விரிவுரை முறை<br>• செயற்றிட்ட முறை<br><br>2.5 இறை மதிப்பு<br>• கதை சொல்லும் முறை<br>• விரிவுரையாற்றல் முறை<br>• சித்திரம் வரைதல் முறை<br>• உரையாடல் முறை<br><br>2.6 இறை பணி<br>• விரிவுரையாற்றல் முறை<br>• கதை சொல்லும் முறை<br>• சித்திரம் வரைதல் முறை<br>• செயற்றிட்ட முறை<br><br>2.7 சகோதர அன்பு<br>• குழுக் கலந்துரையாடல் முறை<br>• சந்தர்ப்பங்களை வகுத்துக் கூறல் முறை<br>• பாடல் முறை<br>• சிந்தனைக் கிளர்வு முறை<br>• உரையாடல் முறை | 2<br><br>3<br><br>2<br><br>2<br><br>2 | விடுதலைப்பயணம் 5 / 15-20<br>விடுதலைப்பயணம் 2 / 19-20<br>விடுதலைப்பயணம் 19 / 3-6. 1, 2, 3<br>கற்பனைகள் எழுதப்பட்ட சட்டம்<br>விடுதலைப்பயணம் 20 / 1<br>விடுதலைப்பயணம் 20 / 4<br>விடுதலைப்பயணம் 20 / 8<br>பிலிப்பி 2 / 4<br>மத்தேயு 22 / 39<br>மனித இரக்கச் செயல் களைக் காட்டும் படங்கள். |
| 3.0 விசுவாச வாழ்விற்கு வலு. (சக்தி)<br><br>3.1 கிறிஸ்தவ வாழ்வை வளப் படுத்திக் கொள் வதற்கு திருவருட் வாதனங்களைப் பெற்றுக் கொள்ளுதல். | 3.1 திருவருட் சாதனங்களை அறிந்து கொள்வர்.<br>• விரிவுரை முறை<br>• தியான முறை<br>• புகைப்படமும் சித்திரமும் காட்சிப்படுத்தும் முறை<br>• செயற்றிட்ட முறை | 4 | • பயண முறை<br><br>• விரிவுரை முறை |

| தேர்ச்சியும் தேர்ச்சி மட்டமும் | விடய உள்ளடக்கம் | பாடவேளைகள் | கற்றல் வளங்கள் |
|---|---|---|---|
| சிறப்புத் தகைமை<br><br>3.2 திருமுழுக்கின் மூலம் பெற்றுக் கொண்ட புதிய வாழ்வை வளர்த்துக் கொள்வர். | 3.2 திருமுழுக்கின் மூலம் உரிமையாகும் அருட்கொடைகளை அறிந்து கொள்ளுதல்.<br>• குழுக் கலந்துரையாடல் முறை<br>• அறிவை மதிப்பீடு செய்யும் முறை<br>• விரிவுரை முறை<br>• ஒப்படை முறை<br><br>3.3 அருள் வாழ்வைப் பாதுகாத்துக் கொள்வதற்குப் பாவத்திலிருந்து விடுபடுவது அவசியம் என்பதை அறிந்து கொள்வர்.<br>• விரிவுரை முறை<br>• உரையாடல் முறை<br>• கதை சொல்லும் முறை<br>• சிந்தனைக் கிளர்வு முறை | 3<br><br>3 | • நிகழ்வுகளை விபரித்தல் முறை<br><br>• நேர்முகக் கலந்துரையாடல் முறை<br><br>• புகைப்படப் பாவனை முறை |
| 4.0 இறை மகனாக மாற்றிக் கொள்ள இறைவழிபாட்டை ஒரு சக்தியாக ஆக்கிக் கொள்வார்.<br><br>4.1 இறைவழிபாட்டின் அவசியத்தை அறிந்து அதனை எப்போதும் நிறைவேற்றி வருவார். | 4.1 இறைவழிபாடு என்றால் என்ன என்பதை இனங்காணுதல்.<br><br>4.2 இறைவழிபாட்டின் அவசியத்தை அறிந்து கொள்ளல்.<br><br>4.3 நாளாந்த வாழ்வில் இறைவழிபாட்டின் மூலம் கடவுளுக்கு அர்ப்பணமாதல்.<br><br>4.4 குடும்ப செப வழிபாடுகளை ஏற்பாடு செய்தல்.<br><br>4.5 பொதுவழிபாடுகளை வழக்கப் படுத்தல்.<br><br>4.6 இறைவழிபாட்டுக்குப் பொருத்தமான சிறந்த வழிமுறைகள். | 2<br><br>2<br><br>2<br><br>2<br><br>2<br><br>2 | • பரலோக செபம் எழுதப்பட்ட ஒரு பதாகை<br><br>• இறைவழிபாட்டின் பிரதான பகுதிகள் உள்ளடங்கிய அட்டவணை.<br><br>• இறைவழிபாடு தியானம் உள்ளடங்கிய ஒலிநாடா, ஒளி, ஒலி நாடா.<br><br>• அச்சிடப்பட்ட செப வழிபாட்டுப் புத்தகம்.<br><br>• இறைவழிபாட்டுடன் சம்பந்தப்பட்ட படங்களைக் காட்டும் புத்தகம்.<br><br>• திருவழிபாட்டுக் கீதங்கள்<br><br>• துதிப் பாடல்கள் |

# 6.2.0 செயற்பாடுகளின் தொடரகம்

## 6.2.1 கற்றல் கற்பித்தல் முறை

இக்கற்கைக் நெறிக்குரிய கற்றல் - கற்பித்தல் முறையியலைத் தீர்மானிக்கையில், தேடியாய்தலை அடிப்படையாகக் கொண்டு, மாணவரது தேர்ச்சிகளை உருவாக்கத்தக்க வகையில் கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகளைத் திட்டமிடுவது குறித்துக் கவனஞ் செலுத்தப்பட்டுள்ளது. இவ்வாறாகத் தேர்ச்சிசார் கல்விக்காக ஆயத்தமாகும் போது, ஆசிரியரது வகிபாகத்திலும் தெளிவான மாற்றம் எதிர்பார்க்கப்படுகின்றது.

பண்டைக் காலந்தொட்டு பரவலாக நடைமுறையில் இருந்த மரபு ரீதியான கடத்தல் வகிபாகமும் (Transmission Role) பிற்காலத்தில் அறிமுகஞ் செய்யப்பட்ட கொடுக்கல் - வாங்கல் வகிபாகமும் (Transaction Role) எமது வகுப்பறைகளில் தற்போதும் கூட அரசோச்சுவதைக் காணமுடிகின்றது. இன்று பாடசாலையை விட்டுச் செல்லும் பிள்ளைகளின் கற்பனைத் திறன்கள், தனிப்பட்ட திறன்கள், சமூகத் திறன்கள் போன்றவையெல்லாம் சீரகுலைந்துள்ள நிலையில், கற்றல் - கற்பித்தல் முறையியல் அபிவிருத்தி செய்ய வேண்டியதன் அவசியத்தையும் அதனை எவ்வாறு செய்வது என்பதையும் இனங்காணல் கடினமாகவுள்ளது.

கடத்தல் வகிபாகத்தில், தாம் கற்க வேண்டிய அனைத்தையும் அறிந்தவர் ஆசிரியரே என மாணவர் ஏற்றுக் கொள்வர். மாணவருக்கு எதுவுமே தெரியாது எனக் கருதும் ஆசிரியர் தமது அறிவை மாணவருக்கு கடத்துபவராகச் செயற்படுகின்றார். ஆசிரியரிடத்தே இருந்து மாணவருக்கு அறிவு கடத்தப்படுதல் மாத்திரம் இடம்பெறும். இவ்வகிபாகம் விரிவுரை போன்றதாகவே அமையும். இக்கற்றல் - கற்பித்தற் செயன்முறை மாணவரது சிந்தனையை - கற்பனையைத் தட்டியெழுப்பு வதிலோ அவர்களது ஆளிடை மற்றும் சமூகத் திறன்களை விருத்தி செய்வதிலோ கணிசமான பங்களிப்பைச் செய்வதில்லை.

ஆசிரியர் வகுப்பறையில் நடத்தும் கலந்துரையாடல் கொடுக்கல் - வாங்கல், வகிபாகத்தின் தொடக்கமாகும். ஆசிரியர்களுக்கும் மாணவருக்கும், பின் மாணவருக்கும் ஆசிரியருக்கும் இடையிலான கருத்துப் பரிமாற்றமும், அதனைத் தொடர்ந்து உருவாகும் மாணவருக்கும் மாணவருக்கும் இடையிலான இடைத்தொடர்புகளும் படிப்படியாக ஓர் உரையாடலாக மாற்றம் பெறும். அறிந்தவற்றில் இருந்து அறியாதவற்றுக்கும், எளிமையானவற்றில் இருந்து சிக்கலானவற்றுக்கும் வரும்படி (தூல) நிலையில் இருந்து கருத்து நிலைக்கும் மாணவரை இட்டுச் செல்வதற்காக ஆசிரியர் தொடர்ந்து வினாக்களை விடுப்பார்.

தேர்ச்சிசார் கல்வியில் மாணவரது பணிகள் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. வகுப்பில் ஒவ்வொரு மாணவனும் மாணவியும் அந்தந்தத் தேர்ச்சியில் குறைந்தபட்சம் அண்ணளவு பாண்டித்திய மட்டத்தையேனும் அடையத்தக்க வகையில் தலையிட்டு வளவாளராக (Resource Person) ஆசிரியர் செயற்படுவார். கற்றலுக்குத் தேவையான உபகரணங்களையும் மாணவரது இயலுமைகளையும் இயலாமைகளையும் இனங்காணல், தேவையான முன்னூட்டலும் பின்னூட்டலும் வழங்கி மாணவரது

கற்றலை மேம்படுத்தல், வகுப்பறைக்கு அப்பாலும் கற்றல் - கற்பித்தலை இட்டுச் செல்வதற்காகப் பொருத்தமான உபகரணங்களைத் தயார்ப்படுத்தல் போன்றவை ஆசிரியரால் ஆற்றப்பட வேண்டிய அடிப்படைப் பணிகளாகும். மேற்போன்றவாறான பணிகளை உள்ளடக்கிய ஆசிரியர் வகிபாகமே நிலைமாற்ற வகிபாகம் (Trans formation) எனப்படுகின்றது.

இதன் முதலாம் பகுதியில் பாடத்திட்டம் அறிமுகஞ் செய்யப்பட்டுள்ளது. இப்பாடத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காகப் பயன்படுத்தத்தக்க செயற்பாட்டுத்தொடர் இரண்டாம் பகுதியில் அடக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு செயற்பாடும் குறைந்தபட்சம் மூன்று படிமுறைகள் அடங்கும் வண்ணம் தயாரிக்கப்பட்டுள்ளது. மாணவரைக் கற்றலின்பால் ஈர்ப்பதே செயற்பாட்டின் முதலாவது படிமுறையினால் தொடர்புறுத்தும் படிமுறை. (Engagement step) எனப்படுகிறது. இதன் தொடக்கத்தில் ஆசிரியர் கொடுக்கல் வாங்கல் வகிபாகத்தின் பண்புகளை வெளிக்காட்டியவாறு மாணவருடன் சம்பாசிப்பார். இச்சம்பாசணையின் பின்னர் விருத்தி செய்து கொள்ள வேண்டிய அடிப்படைத் தேர்ச்சிகளுடன் தொடர்புடைய முன்னறிவு நினைவுகூரப்படும். மேலும் செயற்பாடுகள் குறித்த கோடிகாட்டல்களும் வழங்கப்படும். இவ்வாறான கருத்துப் பரிமாற்றத்துக்காக ஆசிரியர் பல்வேறு உத்திகளைக் கையாளலாம். வினாக்கள் கேட்டல், படங்களைக் காட்சிப்படுத்தல், புதினத்தாள் நறுக்குகளை முன்வைத்தல், காட்டி மறைக்கும் அட்டைகளைக் (Flash cards) காட்டுதல் போன்ற தூண்டல் முறைகளைக் கையாளல், பிரச்சினைகள், புதிர்கள், விவகார ஆய்வு (Case study) போன்றவற்றை முன்வைத்தல், சம்பாசணைகள், போலச் செய்தல், படங்கள், செய்து காட்டல்கள் (Demonstration) போன்றவற்றை முன்வைத்தல்; ஒலிநாடாக்கள், ஒலி- ஒளி நாடாக்கள் போன்றவற்றைப் பயன்படுத்தல் போன்ற பல்வேறு உத்திகளை இதற்காக ஆசிரியர் பயன்படுத்தலாம். சுருக்கமாகக் கூறுவதெனின், பின்வரும் மூன்று நோக்கங்களையும் அடைய இவர்களைக் கொண்டே செயற்பாட்டின் முதலாவது படிமுறை நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

- வகுப்பின் கவனத்தைக் கவர்தல்.
- தேவையான முன்னறிவை நினைவுகூர்வதற்கு மாணவர்க்கு வாய்ப்பளித்தல்.
- செயற்பாட்டின் இரண்டாம் படிமுறையின் போது மாணவரை ஈடுபடுத்த எதிர்பார்க்கும் தேடியாய்வின் அடிப்படை அம்சங்களை அம்மாணவர்க்கு அறிமுகஞ் செய்தல்.

மாணவருக்கு கண்டறியும் வாய்ப்பை வழங்குவதற்காகவே செயற்பாட்டின் இரண்டாம் படிமுறை திட்டமிடப்பட்டுள்ளது. கண்டறிதலுக்கென விசேடமாகத் தயாரிக்கப்பட்ட அறிவுறுத்தற்படிவத்தை அடிப்படையாகக் கொண்டே மாணவர் கண்டறிகையில் ஈடுபடுவர்.

பிரச்சினையின் வெவ்வேறு அம்சங்களைக் குழுநிலையில் கண்டறிந்து ஒத்துழைத்துக் கற்கத்தக்க வகையில் இக்கண்டறிகையை ஆசிரியர் திட்டமிடல் வேண்டும். தரப்பட்டுள்ள மூல வளங்களைப் பயன்படுத்தி விழிப்புணர்வுடன் குழுக் கலந்துரையாடலை நடத்தியவாறு மாணவர்கள் கண்டறிகையில் ஈடுபடுவதால் இப்படிமுறையின் சிறப்பியல்பாகும். தொடர்ந்தும் இவ்வாறான குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுவதனால் தன்னடக்கம், ஏனையோரின் கருத்துக்களுக்குச் செவிமடுத்தல்,

ஏனையோருடன் ஒற்றுமையாகச் செயற்படல், ஏனையோருக்கு உதவி புரிதல், நேர முகாமை, உயரிய தரமுடைய உற்பத்திகளைப் பெறல், நேர்மை போன்ற அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான முக்கியமான பல தேர்ச்சிகளை விருத்தி செய்து கொள்வதற்கு இப்படிமுறையூடாக மாணவர்களுக்கு வாய்ப்புக் கிடைக்கும்.

கண்டறிக்கைக்காக மாணவரை வழிப்படுத்துகையில் மாணவர் குழுக்களின் தலைமைத்துவம் குறித்து ஆசிரியர் முடிவெடுத்தலாகாது. மாறாக மாணவர் குழுவில் ஒருவர் தலைவராக உருவெடுப்பதற்கான சூழ்நிலையை உருவாக்குதல் ஆசிரியரின் பொறுப்பாகும். இலைமறை காயாகக் காணப்படும் ஆற்றல்கள் வெளிக்கொணரப்பட்டு தருணத்திற்கு ஏற்ப தலைமைத்துவத்தை ஏற்கும் வாய்ப்பு மாணவருக்குக் கிடைக்க இது வழிகோலும்.

செயற்பாட்டின் மூன்றாம் படிமுறையின் போது, ஒவ்வொரு குழுவுக்கும் தாம் கண்டறிந்தவற்றை அதாவது தமது கண்டறிகையின் பெறுபேறுகளை ஏனையோரும் அறிந்து கொள்ளும் பொருட்டு முன்வைப்புக்கான வாய்ப்பு வழங்கப்படும். அடிப்படையான முன்வைப்புக்களை மாணவருக்குத் தூண்டுவதே இங்கு ஆசிரியரின் பணியாகும்.

ஒவ்வொரு மாணவனுக்கும் மாணவிக்கும் பொறுப்புக்களை ஆற்றும் வாய்ப்புக் கிடைக்கும் வகையில் முன்வைப்பைத் திட்டமிட்டுக் கொள்ளுமாறு மாணவரை வழிப்படுத்தல் பயனுடையதாகும். வழக்கமாக ஆசிரியரின் குரல் ஒலிக்கும் வகுப்பறையில் மாணவ மாணவியரின் குரல் ஓங்கி ஒலிப்பதற்கு வாய்ப்புக் கிடைத்தல், மாணவர் தாம் கண்டறிந்தவற்றுக்கு விளக்கமளித்தலுடன் (Extenction) வகுப்பின் கவனத்தைக் கவர்தல். தொடர்புடைய இப்படிமுறையின் சிறப்பியல்பாகும்.

இரண்டாம் படிமுறையில் கண்டறிந்தவற்றை விரிவுபடுத்தலுக்கான (Elaboration) வாய்ப்பு மூன்றாம் படிமுறையின் போது வழங்கப்படும். ஒவ்வொரு குழுவும் தத்தமது முன்வைப்பை நிறைவு செய்த பின்னர், அது தொடர்பாக ஆக்கபூர்வமாக கருத்துக்களைத் தெரிவிக்குமாறு முதலில் அந்தந்தக் குழுவின் அங்கத்தவர்களுக்கும் பின்னர் ஏனைய குழுக்களுக்கும் வாய்ப்பளிக்கப்படும். இறுதியில் முழுவதையும் மீட்டல் (Review) பொறுப்பு ஆசிரியரையே சாரும். மாணவரது கண்டறிகையில் அடக்கும் முக்கியமான சகல விடயங்களுக்கும் தெளிவுபடுத்தப்படும் வகையிலும் எண்ணக்கருக்களும் கொள்கைகள் கோட்பாடுகளும் மாணவரது மனதில் தெளிவாகப் பதியும் வகையிலும் மீட்டாய்வை முன்வைத்தல் ஆசிரியரின் பொறுப்பாகும்.

கற்றல் - கற்பித்தற் செயன்முறை எதிர்பார்க்கப்பட்ட வகையில் வெற்றிகரமாக நிகழுகின்றது என்பதை இடையறாது தேடியறிதல் இச்செயன்முறையை நடைமுறைப்படுத்தும் ஆசிரியரின் பிரதான பொறுப்பாகும். இதற்காக கணிப்பீட்டையும் மதிப்பீட்டையும் பயன்படுத்த வேண்டும். திட்டமிடப்பட்ட செயற்பாடு தொடர்பாக கற்றர் - கற்பித்தல் செயற்பாட்டின் போது இதற்காக போதிய அவகாசத்தைப் பெறுவதற்கான வாய்ப்பு ஆசிரியருக்கு வழங்கப்பட்டுள்ளது. செயற்பாட்டின் இரண்டாவது படிமுறையின் போது மாணவர்கள் கண்டறிகையில் ஈடுபட்டிருக்கையில் கணிப்பீட்டையும் (Assessment) செயற் பாட்டின் மூன்றாவது படிமுறையின் போது மாணவர் தாம் கண்டறிந்தவற்றை விளக்குகையில்

மதிப்பீட்டையும் (Evaluation) நடத்துவதற்கு ஆசிரியருக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. கணிப்பீடு, மதிப்பீடு ஆகியன பற்றிய விரிவான விளக்கம் இவ்வாவணத்தில் பிறிதொரு இடத்தில் தரப்பட்டுள்ளது.

மேலே விபரிக்கப்பட்ட கற்றல் - கற்பித்தல் முறையியல், நிலைமாற்ற வகிபாகத்தை நடைமுறைப் படுத்தும் வாய்ப்பை ஆசிரியருக்கு வழங்குகின்றது. இச்செயன்முறையின் போது குழுநிலைக் கண்டறிகை முதலிடம் பெறுகின்றது. கொடுக்கல் வாங்கல், உரையாடல், சிற்றுரை போன்றவற்றில் ஈடுபடுவதற்கு ஆசிரியருக்கு வாய்ப்புக் கிடைக்கின்றது. முதலாவது படிமுறையின் போது கொடுக்கல் வாங்கலுக்கும் உரையாடலுக்கும் வாய்ப்புக் கிடைக்கின்றது. இறுதிப் படிமுறையின் போது மீட்டாய்வை நடத்துகையில் சிற்றுரை நடத்துதல் எண்ணக்கருக்களை வலியுறுத்திப் பதித்தல் ஆகியவற்றுக்கு வாய்ப்புக் கிடைக்கின்றது. புத்தாயிரமாம் ஆண்டின் முதலாவது கல்வி மறுசீரமைப்பிற்கு அமைவாக முன்வைக்கப்படும் இக்கலைத்திட்டத்துடன் தொடர்புடைய கற்றல் - கற்பித்தல் முறையியலை அபிவிருத்தி செய்யும் போது ஆசிரியரின் நிலைமாற்ற வகிபாகம் தொடர்பாக மட்டுமன்றி, கடத்தல் வகிபாகம், கொடுக்கல் வாங்கல் வகிபாகம் ஆகியவற்றின் நாயம்சங்களும் கவனத்திற் கொள்ளப் பட்டன என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கதாகும்.

## 6.2.2 நரவிருத்தி உள்ளீடு

- திருவிவிலியம்
- இரண்டாம் வத்திக்கான் சபையின் வெளியீடு
- கத்தோலிக்க சபையின் போதனைகள்
- பெரிய குறிப்பிடம்
- புனிதர்களின் வாழ்க்கைச் சரிதம்
- பூசைப் புத்தகம்
- திருப்பலிக் கீதங்கள்
- வேதாகம அகராதி
- துதிக் கீதங்கள்.
- புனித பிரதேசத்தைக் காட்டும் வரைபடங்கள்
- கிறிஸ்தவ ஆலயங்கள், யாத்திரைக்குரிய இடங்களைக் குறிக்கும் படங்கள்
- சமுதாயத்தின் பல்வேறு நிலைகளைக் குறிக்கும் படங்கள்
- அருட்சாதனங்கள், செபம் எழுதப்பட்ட பதாதைகள்
- இறை கற்பனைகள் (பத்துக் கட்டளைகள்) எழுதப்பட்ட பதாதைகள்
- பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட அட்டைகள்
- தொலைக்காட்சிப் பெட்டி
- வீடியோ
- ஒலிப்பதிவுக் கருவி (பதியி)
- அருட்சாதனங்கள், செபம் ஆகியவற்றைக் காட்டக் கூடிய ஒலி, ஒளி நாடா
- புனிதர்களது வாழ்க்கையைக் குறிக்கும் ஒலி, ஒளி நாடாக்கள்
- பாடல்கள் உள்ளடக்கப்பட்ட ஒலி நாடாக்கள்
- பூக்கள், பூச்சாடி
- மெழுகுவர்த்தி
- ஊதுபத்தியும் வாசனைப்புகையும் (சாம்பிராணி)
- சாம்பிராணித்தட்டு
- பாத்திரம், கோப்பை
- டிமை கடதாசி, வார்ணிஷ் கடதாசி
- நிறப்பேனை
- நிறப் பென்சில்
- பசைப் போத்தல்
- கத்தரிக்கோல்

**தேர்ச்சி 1.0** :- இறைவனை அறிந்து கொள்வதனூடாக விசுவாச வாழ்வு வாழ்வர்.

**தேர்ச்சி மட்டம் 1.1** :- உலகம் விந்தையானது வியப்புக்குரியது என்பதை உணர்ந்து கொள்வர்.

**செயற்பாடு 1.1** :- உலகம் அதிசயிக்கத்தக்கது என்பதை உணர்ந்து கொள்வர்.

**நேரம்** :- 80 நிமிடங்கள்

**தர உள்ளீடு** :-
- திருவிவிலியம்
- குழு ஆய்விற்காக கரும்பலகையில் எழுதக்கூடிய மாணவர்களின் கருத்துக்கள்
- டிமை. கடதாசி, பெஸ்டல் / நிறப்பென்சில்
- சூழலில் பெற்றுக் கொள்ளக்கூடிய பூ, கிளை, இலை

**கற்றல் கற்பித்தல் படிமுறைகள்**

**படிமுறை 1.1.1** :-
- நீர் சுற்றாடலில் விரும்புகின்ற இடங்களுக்கு மாணவர்களை அழைத்துச் சென்று, சுற்றியுள்ள சூழலை சிறப்பாக அழகுபடுத்திக் கொள்வதற்கு அறிவுரை வழங்குங்கள். தமது சூழலிலே கண்டு கொண்டவற்றை குறித்துக் கொண்டு சுலபமான உரையாடல், (3 நிமிடம் வரை) ஒன்றை வகுப்பிலே நடாத்த உதவுங்கள். அக்கருத்துக்களை மனதில் பதித்துக் கொண்டு செயற்பாட்டில் ஈடுபடத் தூண்டுங்கள்.

- இறைவன் படைப்பவர் என்பதையும்
- இறைவன் படைத்துள்ள படைப்பு பலதரப்பட்டது என்பதையும்
- அவற்றில் உயிருள்ள, உயிரற்ற பகுதிகளை கண்டுகொள்ள முடியும் என்பதையும்
- இவ்விரு பகுதிகளுமே சூழலை அழகுபடுத்துகின்றன என்பதையும்

**படிமுறை 1.1.2** :-
- வகுப்பு மாணவர்களை மூன்று சிறிய குழுக்களாக பிரியுங்கள்.
- குழு ஆய்விற்காக டிமை கடதாசி, பெஸ்டல், நிறப்பென்சில் குழுக்களுக்கு கொடுங்கள்.
- சிறிய குழுக்களை செயல்களிலே ஈடுபடுத்துங்கள்.

**படிமுறை 1.1.3** :-
- சிறிய குழுக்களை சுவரொட்டி ஒன்றின் மூலம் செய்தியை வெளிப் படுத்தச் செய்யுங்கள்.
- கீழ்க் குறிப்பிட்டுள்ள கருத்துக்களை உள்வாங்கிக் கொண்டு உரையாடலில் ஈடுபடுங்கள்.

- இறைவன் ஆறு நாட்களுக்குள் உலகைப் படைத்தார் என்பதையும்
- அது வெறுமையானது என்பதைக் கண்டார் என்பதையும்
- அதனை விருத்தி செய்வதற்காக மனிதனிடம் ஒப்படைத்தார் என்பதையும்
- மனிதன் சூழலைப் பயன்படுத்திக் கொள்ளுதல் அவசியம் என்பதையும்
- எதிர்கால சந்ததியினருக்கு அதை ஒப்படைக்க வேண்டும் என்பதையும்

### கணிப்பீட்டு, மதிப்பீட்டு நியதிகள்

- சூழலில் உள்ள உம்மைக் கவர்ந்த இடங்களைப் பெயரிடுங்கள்.
- இறைவன் உலகைப் படைத்தார் என்பதை ஏற்றுக்கொள்வர்.
- எழுதப்பட்ட சுவரொட்டியில் உலகம் வெறுமையானது என்பதை உள்வாங்கிக் கொள்வர்.
- வெறுமையான சூழலைப் பாதுகாத்துக் கொள்வதற்கும் விருத்தி செய்து கொள்வதற்கும்

### குழு ஆய்விற்கான அறிவுறுத்தல்கள்

- சூழல் பற்றிய மாணவர்கள் வெளிப்படுத்தியவற்றைக் கரும்பலகையில் ஒன்று சேர்த்து அட்டவணைப்படுத்தி அதில் அவதானத்தைத் திருப்புங்கள்.
- அந்தக் கருத்துக்களில் வெளிப்படுகின்ற குறிப்புக்களை உறுதி செய்து கொள்ளுங்கள்.
- அந்தக் கருத்துக்களின் உருவாக்கத்தில் சுவரொட்டியொன்றை எழுதச் செய்யுங்கள்.
- அதை நிறப்பென்சில் / பெஸ்டல் அல்லது சூழலில் பெற்றுக்கொள்ளக்கூடிய பொருட்கள் மூலம் உருவாக்கிக் கொள்ளமுடியும்.
- அந்த வெளிப்பாட்டை மற்றைய குழுக்களுக்கு வெளிப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.

## இறை படைப்பின் அழகு

**தேர்ச்சி 1.0** :- இறைவனை அறிந்து கொள்வதனூடாக விசுவாச வாழ்வு வாழ்வர்.

**தேர்ச்சி மட்டம் 1.2** :- படைப்பானது இறைவனின் செயல் வடிவம் என்பதை உறுதிப்படுத்திக் கொள்வர்.

**செயற்பாடு 1.2** :- படைப்பு வியப்புக்குரியது என்பதை விளக்கிக் காட்டுவோம்.

**நேரம்** :- 120 நிமிடங்கள்

**தர உள்ளீடு** :-
- சுற்றாடலின் மேன்மையைக் காட்டுகின்ற படங்கள்
- டிமை கடதாசி, மார்க்கர் பேனை
- திருவிவிலியத்தில் கூறப்படும் வசனங்கள் அடங்கிய அட்டைகள்
  ஆதி : 1 / 10 ஆதி : 1 / 18
  ஆதி : 1 / 12 ஆதி : 1 / 25

### கற்றல் கற்பித்தல் படிமுறைகள்

**படிமுறை 1.2.1** :-
- ஆசிரியர் படங்கள் சிலவற்றை வகுப்பில் காட்டுதல் அவசியம்
- அதிலுள்ளவற்றின் பெயர்களை கூறுவதற்கு மாணவர்களை வழிநடத்தல்.
- கீழ்வருவனவற்றின் அடிப்படையில் கலந்துரையாடுங்கள்.

> - சூழலில் பல்வேறு கனியங்கள் உள்ளதென்பதையும்
> - அவை அனைத்தும் இறைவனின் படைப்பாகும் என்பதையும்
> - இவ்வனைத்தும் மனிதனின் நன்மைக்காக படைக்கப்பட்டது என்பதையும்
> - அவைகளை மனிதன் விருத்தி செய்தல் அவசியம் என்பதையும்

**படிமுறை 1.2.2** :-
- வகுப்பு மாணவர்களை மூன்று சிறிய குழுக்களாகப் பிரியுங்கள்.
- டிமை கடதாசி, மாக்கர் பேனை, செயலட்டை, திருவிவிலிய வசனங்கள் என்பவற்றை மாணவர்களுக்கு பகிர்ந்து கொடுங்கள்.
- முழுக் குழுக்களையும் பார்ப்பதற்கு தயார் செய்யுங்கள்.

**படிமுறை 1.2.3** :-
- சிறிய குழுக்களின் செயன்முறைகளை வெளிப்படுத்துங்கள்.
- மற்றைய குழுக்களிடம் ஆலோசனை பெற்றுக்கொள்ளுங்கள்.

- பூமியும் கடலும் இறைவனின் படைப்பாகும் என்பதையும்
- இப்படைப்பானது கொடுக்கப்பட்டதின் நோக்கம் மனிதனின் நன்மை களுக்காக என்பதையும்
- அனைத்து உயிரினங்களின் வாழ்விற்காக பூமியிலும் கடலிலும் தண்ணீர் கிடைக்கின்றது என்பதையும்
- அதற்காக இறைவனுக்கு நன்றி செலுத்த வேண்டும் என்பதையும்
- இரவும் பகலும் வேறாக்கப்பட்டிருப்பது மனிதனுக்கு ஓய்வு அவசியம் என்பதனால் என்பதையும்
- இறைவன் எமக்குத் தந்துள்ள சொத்துக்களை வீணாக்கக்கூடாது என்பதையும்
- அப்படி வீணாக்குவதால் உண்டாகும் தீமைகளை நாமே அனு பவிக்க வேண்டும் என்பதையும்

## கணிப்பீட்டு, மதிப்பீட்டு நியதிகள்

- நீரிலுள்ள உயிரினங்கள் மூன்றைப் பெயரிடுங்கள்.
- இறைவனால் படைக்கப்பட்டுள்ள பூமியிலே உள்ள சொத்துக்கள் மூன்றை குறிப்பிடுக.
- சூழலை அழகுபடுத்துமுகமாக படைக்கப்பட்டுள்ள பறவைகள் மூன்றினை பெயரிடுக.
- பூமியின் மேல் படைக்கப்பட்டுள்ள யாவும் இறைவனுடைய ஆக்கம் என்பதை ஏற்றுக்கொள்வர்.
- சூழலை பாதுகாப்பது இறைவனுடைய கட்டளை என்பதை ஏற்றுக்கொண்டு கடைப்பிடிக்க முயற்சிப்பர்.

## குழு ஆய்விற்கான அறிவுறுத்தல்கள்

- உங்கள் குழுவிற்கு கிடைக்கின்ற திருவிவிலியத்தில் உள்ள வசனத்தைக் குறித்து கவனத்தை செலுத்துங்கள்.
- அந்த பரிசுத்த வேதாகமத்தின் வார்த்தைகளில் கூறுகின்ற கருத்துக்களை உறுதி செய்து கொள்ளுங்கள்.
- அந்த கருத்துக்களுக்கமைய சுற்றாடலின் மேன்மையை விளங்கிக் கொள்ளுங்கள்.
- சுற்றாடலை அபிவிருத்தி செய்து பாதுகாத்துக் கொள்ளும் வழிமுறைகள் தொடர்பாக அவதானத்தை வளர்த்துக் கொள்ளுங்கள்.
- முழுக் குழுக்களையும் பார்ப்பதற்கு ஏற்றவாறு தயார் செய்யுங்கள்.

## வியத்தகு இறைத்திட்டம்

**தேர்ச்சி 1.0** :- இறைவனை அறிந்து கொள்வதனூடாக விசுவாச வாழ்வு வாழ்வர்.

**தேர்ச்சி மட்டம் 1.3** :- படைப்பின் மூலம் இறைவனுடைய செயற்பாடுகள் ஒழுங்கு முறையானது என்பதை உறுதி செய்து கொள்வர்.

**செயற்பாடு 1.3** :- படைப்பின் மூலம் இறைவனுடைய செயற்பாடுகளை உணர்ந்து கொள்வோம்.

**நேரம்** :- 80 நிமிடங்கள்

**தர உள்ளீடு** :-
- கிறிஸ்தவப் பாடல் புத்தகத்தில் பாடல் இலக்கம் 27 அல்லது 29 எழுதப்பட்டுள்ள பிரதி அட்டைகள்.
- சூழலின் மேன்மையைக் காட்டுகின்ற படங்கள். கடதாசி, பேனை
- தொடக்க நூல் 1: 1- 27 வரை அடங்கியுள்ள அட்டைகள்/ செயலட்டைகள்.

### கற்றல் கற்பித்தல் படிமுறைகள்

**படிமுறை 1.3.1** :-
- பாடல் இலக்கம் 27லில் உள்ள பாடலை இராகத்தோடு பாடுங்கள்.
- ஆசிரியரும் சில மாணவர்களும் முதலில் பாட அதன்பிறகு அனைவரும் சேர்ந்து பாடுதல்.

இந்தப் பாடல்களில் சொல்லப்படுகின்ற கீழுள்ள கருத்துக்களில் அவதானத்தை செலுத்திக் கொண்டு கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

- சூரியனின் உதயமும் மறைவும், சந்திரனின் உதயமும், மறைவும் செயலொழுங்கிலும் அர்ப்பணிப்புக்கும் ஏற்ப நடைபெறுகின்றது என்பதையும்
- சூரிய உதயத்தோடு சூழலின் மிருகங்களினதும் பறவைகளினதும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுகின்றது என்பதையும்
- சூரிய சந்திரனின் வல்லமையினால் மனிதர் பயனைப் பெற்றுக்கொள் கின்றனர். மழை, காற்று என்பன சுயமாக நடைபெறுகின்றது என்பதையும்
- இந்த முழுபடைப்பும் நிறைவு பெற்றிருப்பது உயர்ந்த படைப்பான மனிதனுடைய நன்மைகளுக்காக என்பதையும்

**படிமுறை 1.3.2** :- 
- வகுப்பு மாணவர்களை மூன்று சிறிய குழுக்களாக பிரியுங்கள்.
- கடதாசி, பேனை, என்பவற்றை மாணவர்களுக்கு பெற்றுக் கொடுங்கள்.
- கீழுள்ள கலந்துரையாடல் வழியாக சில குழுக்களை ஆக்கங்கள் தயாரிப்பதற்கு ஈடுபடுத்துங்கள்.

**படிமுறை 1.3.3** :- 
- சிறிய குழுக்களின் ஆக்கங்களை வெளிப்படுத்துங்கள்.
- மற்றைய குழுக்களிடம் ஆலோசனை பெற்றுக்கொள்ளுங்கள்.
- கீழுள்ள கருத்துக்களை அவதானித்துக் கொண்டு கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

- சூரியனும் சந்திரனும் இறை ஆக்கம் என்பதையும்
- நாளின் தோற்றமும் மறைவும் செயலொழுங்கில் நடைபெறுகின்றது என்பதையும்
- மனிதனின் நற்செயல்களுக்காக அனைத்துப் படைப்பும் படைக்கப் பட்டுள்ளது என்பதையும்
- அனைத்துப் படைப்பிலும் இறை மகிமை வெளிப்படுகின்றது என்பதையும்
- இப்படைப்பினால் இறைவனுக்கு நன்றி கூறுதல் அவசியம் என்பதையும்

## கணிப்பீட்டு, மதிப்பீட்டு நியதிகள்

- உணர்வினைச் செலுத்துங்கள்
- சந்தோச ஊட்டத்தைப் பெற்றுக்கொடுங்கள்
- படைப்பின் மேன்மையான பகுதிகள் 4ஐ பெயரிடுங்கள்.
- சிறந்த ஆக்கத்தைச் சுவரட்டையில் காட்சிப்படுத்துங்கள்.
- பாடலில் அடங்கியுள்ள அம்சங்கள்
    - சூரிய உதயம், சூரிய மறைவு, மலர்கள் மலர்தல், சந்திர உதயம், மரங்களின் வளர்ச்சி, பறவைகள் பறத்தல்.
    - காற்றும் மழையும்
    - உயர் படைப்பு மனிதனுக்காக

## குழு ஆய்விற்கான அறிவுறுத்தல்கள்

- தொடக்க நூலில் 1ஆம் அதிகாரத்தில் 1:27 வரையுள்ள வசனங்களிலும் பாடிய பாடலிலும் அவதானத்தைச் செலுத்துங்கள்.
- அந்த கருத்துக்களுக்கேற்ப படைப்பு மேன்மையானது என்பதை விளங்கிக் கொள்ளுங்கள்.
- படைப்பின் மூலம் வெளிப்படுகின்ற இறைமகிமை பற்றி விளங்கிக் கொள்ளுங்கள்.
- இறை படைப்பின் செயலொழுங்கை எடுத்துக்காட்டுகின்ற பாடலொன்றை இயற்றுங்கள்.
- படைப்பின் மூலம் வெளிப்படுகின்ற இறைமகிமைக்காக இறைவனுக்கு நன்றிப் பாடலொன்றைப் பாடுங்கள்.

## படைப்பின் பல்வேறு தன்மை

**தேர்ச்சி 1.0** :- இறைவனை அறிந்து கொள்வதனூடாக விசுவாச வாழ்வு வாழ்வர்.

**தேர்ச்சி மட்டம் 1.4** :- படைப்பின் பல்தன்மைகள் மூலம் பரிசுத்த திரித்துவத்தை உணர்ந்து கொள்வர்.

**செயற்பாடு 1.4** :- படைப்பின் பல்தன்மைகள் மூலம் பரிசுத்த திரித்துவத்தை உணர்ந்து கொள்வோம்.

**நேரம்** :- 120 நிமிடங்கள்

**தர உள்ளீடு**

- பலவகை மிருகங்கள், பலவகை பூக்கள் பலவகை மனிதர்களின் உருவங்கள், தெரிகின்ற படங்கள்,
- சில பரிசுத்த திரித்துவத்தை காட்டுகின்ற படமொன்று
- கடதாசியும் பேனையும்

### கற்றல் கற்பித்தல் படிமுறைகள்

**படிமுறை 1.4.1** :-

- பலவகை மிருகங்கள், பலவகை பூக்களும், பலவகை மனிதர்களின் உருவங்களை முன்வைக்கின்ற படங்களை வெளிப்படுத்துங்கள்.
- அப்படங்களை வெளிப்படுத்திக் கொண்டு அதிலுள்ள பல்வேறு அடையாளங்களை கீழுள்ள கருத்துக்களோடு கலந்துரையாடுங்கள்.

- பல்வேறு அடையாளங்கள் இருப்பினும் அவை பூக்கள், மிருகங்கள், மனிதர்களுமே ஆகும் என்பதையும்
- நாட்டின் கலாசாரங்களுக்கேற்ப மனிதனிடையே பல்வேறு நன்மைகள் உருவாகின்றது என்பதையும்
- பழங்களின் சுவையிலும் குணத்திலும் பல்வேறு நன்மைகள் உள்ளது என்பதையும்
- மிருகங்களும் நீரிலும் நிலத்திலும் வாழ்பவைகளும் பறவைகளும் ஒவ்வொன்றின் அடையாளங்கேற்ப பல்வேறு நன்மைகள் உள்ள தென்பதையும்
- மரங்களில் பல நன்மை உள்ளது என்பதையும்
- மனித நடவடிக்கைகளில் பல்தன்மை உள்ளது என்பதையும்
- வகுப்பிலுள்ள மாணவர்களும் பலவகை அடையாளங்களையும் குணங்களையும் கொண்டுள்ளனர் என்பதையும்

**படிமுறை 1.4.2** :-
- வகுப்பினை நான்கு சிறிய குழுக்களாக பிரியுங்கள்.
- கீழ் காட்டப்பட்டுள்ள படங்கள் நான்கை நான்கு குழுவிற்கு பிரியுங்கள்.
- குழு ஆய்வின் அறிவுறுத்தலுக்கேற்ப செயற்படுங்கள்.
- சிறிய குழுக்களை செயலிலே ஈடுபடுத்துங்கள்.
- முழுக் குழுவையும் வெளிப்படுத்துவதற்காக தயார் செய்யுங்கள்.

**படிமுறை 1.4.3** :
- சிறிய குழுக்களின் செயன்முறைகளை வெளிப்படுத்துங்கள்.
- .......................... க்காக வெளிப்படுத்திய குழுக்களுக்கு சந்தர்ப்பம் கொடுங்கள்.
- முழுக் குழுவிடமும் வளர்ச்சியடையக்கூடிய கருத்துக்களை பெற்றுக் கொள்ளுங்கள்.
- கீழ் குறிப்பிட்டுள்ள கருத்துக்களை உள்வாங்கிக் கொண்டு கலந்துரை யாடலில் ஈடுபடுங்கள்.
- முக்கியமான கருத்துக்களைக் கரும்பலகையில் அட்டவணைப் படுத்துங்கள்.
- பலவகை அடையாளங்கள் கொண்டிருந்தாலும் நிறங்கள் வேறு பட்டாலும் பூக்களின் இனம் ஒன்றே என்பதையும்
- நீரில் நிலத்தில் வாழும் விலங்குகளில் பலதன்மைகள் இருப்பினும் உயிரியல் சமூகத்தில் அவை ஒரே இனத்தைச் சேர்ந்தவை என்பதையும்
- நாட்டின் அடையாளங்களுக்கும் நாட்டின் கலாசாரங்களுக்கும் ஏற்ப மனிதன் வேறுபட்டாலும் அனைத்து மனிதனும் ஒரே இனத்திற்கு சொந்தமாகின்றான் என்பதையும்
- மூவொரு கடவுள் மூன்று பேராயினும் ஒரே இறைவன் ஆகின்றார் என்பதையும்
- ஒரே படைப்பின் மூலம் பலதரப்பட்ட தன்மைகள் கொண்ட உயிரினங்கள் உள்ளன என்பதையும்

## கணிப்பீட்டு, மதிப்பீட்டு நியதிகள்

- பூக்களின் பல்வகை அடையாளங்கள் நான்கைப் பெயரிடுவர்.
- மிருகங்களின் பல்வகை அடையாளங்கள் நான்கைப் பெயரிடுவர்.
- மனிதனின் பல்வகை அடையாளங்கள் நான்கைப் பெயரிடுவர்.
- பல்வகை அடையாளங்கள் இருந்தாலும் மனிதனிடம் உள்ள ஒற்றுமையான குணங்கள் இரண்டைப் பற்றி கலந்துரையாடுங்கள்.
- மூவொரு இறைவனாயினும் ஒரே இறைவன் என்பதை ஏற்றுக்கொள்வர்.
- பரிசுத்த திரித்துவத்தை ஆராதனை செய்வதோடு பரிசுத்த திரித்துவ செபத்தை சத்தமிட்டுச் சொல்லுவர், அதை எழுதிக்காட்டுவர்.
- படைப்பின் பலதன்மைகள் பற்றி எழுதப்பட்ட கடிதமொன்றை சுவர் செய்தி அட்டையில் இணையுங்கள்.

### குழு ஆய்விற்கான அறிவுறுத்தல்கள்

- மிருகங்களினதும் பூக்களினதும் மனிதர்களினதும் உள்ள பல்வேறு அடையாளங்களை உள்ளடக்கிய கடிதமொன்றை தயாரியுங்கள்.
- பல்வேறு அடையாளங்கள் இருப்பினும் அவற்றிலுள்ள ஒற்றுமைத்தன்மை பற்றிய கலந்துரையாடலை நடாத்துங்கள்.
- மிருகங்களில் பூக்களிலுள்ள பல்வேறு அடையாளங்கள் இரண்டை வெளிப்படுத்திக் கொண்டு அதில் ஒற்றுமையான சுபாவத்தைப் பற்றி கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.
- கரும்பலகையில் எழுதியுள்ள கருத்துக்களில் அவதானத்தை செலுத்திக் கொண்டு மாணவரின் ஆக்கத்திற்கு இடமளியுங்கள்.
- பலவகை உருவப்படங்கள் இருந்தாலும் இறைவன் மீது மட்டும் நன்றி சொல்லுகின்ற செபத்தை எழுதுங்கள்.
- மாணவர்கள் எழுதிய செபத்தினை சத்தமிட்டுக் கூறுவதோடு சமாதானமாக செபத்திலே ஈடுபடுத்துங்கள்.
- கலந்துரையாடல்களில் சாதகமான கருத்துக்களைக் கொண்டு சுவரட்டை ஒன்றைத் தயாரித்து ஈடுபடுத்துங்கள்.

# இறை சாயலாகப் படைக்கப்பட்ட மனிதன்

**தேர்ச்சி 1.0** :- இறைவனை அறிந்து கொள்வதனூடாக விசுவாச வாழ்வு வாழ்வர்.

**தேர்ச்சி மட்டம் 1.5** :- நற்குணங்களை வளர்த்துக்கொண்டு குழந்தை இயேசுவை பின்பற்றுவர்.

**செயற்பாடு 1.5** :- நற்குணங்கள் நிறைந்த இறைபிள்ளையாவோம்.

**நேரம்** :- 80 நிமிடங்கள்

**தர உள்ளீடு** :-
- வெண்கட்டி பலகை வெண்கட்டி
- செயலட்டை
- டிமை கடதாசி, மாக்கர் பேனை

**கற்றல் கற்பித்தல் படிமுறைகள்**

**படிமுறை 1.5.1** :-
- வகுப்பில் ஒவ்வொரு பிள்ளையிடமும் உள்ள நற்குணங்களை விசாரித்து அவற்றை கரும்பலகையில் அட்டவணைப்படுத்துங்கள்.
- அவற்றில் தமக்கு விருப்பமான குணங்கள் உள்ளதா என்பதை விசாரித்துப் பாருங்கள்.
- அதற்கிடையில் தம்மிடமுள்ள குணங்களை விசாரித்து பாடத்தில் பிரவேசித்து கீழுள்ள குணங்களைக் கொண்டு அவதானத்தைச் செலுத்தி கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

- தம்மிடம் நற்குணங்கள் உள்ளதென்பதையும்
- தாம் மென்மேலும் நற்குணங்களை வளர்த்துக் கொள்ளுதல் அவசியம் என்பதையும்
- தாம் நெருங்குகின்ற நண்பர்களிடமும் நற்குணங்கள் உள்ளது என்பதையும்
- தம்மிடமில்லாத நற்குணங்களை வளர்த்துக் கொள்ளுதல் அவசியம் என்பதையும்
- வகுப்பில் நண்பர்களிடையேயுள்ள நற்குணங்களுக்கு மதிப்பு கொடுத்தல் அவசியம் என்பதையும்
- அந்த நற்குணங்கள் தாம் இறைபிள்ளையாக காண்பிப்பதற்கு சாட்சியாக உள்ளது என்பதையும்
- தாம் குழந்தை இயேசுவை மற்றவர்கள் முன்னிலையில் ஆதாரமாக கொள்வது அவசியம் என்பதையும்

**படிமுறை 1.5.2** :-
- வகுப்பினை நான்கு சிறிய குழுக்களாகப் பிரியுங்கள்.
- கீழ் காட்டப்பட்டுள்ள செயலட்டைகளை அனுசரித்து நற்குணங்களை வேறுபடுத்திக் கொள்வதற்கு அறிவுறுத்தல் கொடுங்கள்.
- குழுக்களில் நற்குணங்களைக் கொண்டுள்ளவர்களுக்கு மதிப்புக் கொடுத்து குறைகள் உள்ளவர்கள் அவற்றை அழித்துக் கொள் வதற்கு மேற்கொள்ளக்கூடிய வழிகளில் இவற்றில் அவதானத்தைச் செலுத்த அறிவுறுத்தல் கொடுங்கள்.
- சிறிய குழுக்களை செயலிலே ஈடுபடுத்துங்கள்.
- முழுக் குழுவையும் பார்ப்பதற்கு ஆயத்தம் செய்யுங்கள்.

**படிமுறை 1.5.3** :
- குழுவின் செயன்முறைகளை வெளிப்படுத்துங்கள்.
- திறமையை வெளிப்படுத்துவதற்கு குழுக்களுக்கு சந்தர்ப்பத்தை பெற்றுக் கொடுங்கள்.
- பயனுள்ள முறையில் கருத்துக்களையும் பெற்றுக் கொள்ளுங்கள்.
- கீழ் குறிப்பிட்டுள்ள கருத்துக்களை உள்வாங்கிக் கொண்டு கலந்துரை யாடலில் ஈடுபடுங்கள்.
- முக்கியமான கருத்துக்களை கரும்பலகையில் அட்டவணைப் படுத்துங்கள்.

- தம்மிடையே உள்ள நற்குணங்களை மதிப்புக் கொடுத்து கெட்ட பழக்கங்களை விட்டுவிடுதல் அவசியம் என்பதையும்
- அன்பு, தியாகம், கீழ்ப்படிதல், பிறருக்கு உதவி செய்தல், நற் சொற்களை பேசுதல் போன்ற குணங்கள் பிள்ளைகளிடையே உள்ளது என்பதையும்
- அந்தக் குணங்களினால் குழந்தை இயேசுவினை அனுசரிக்கின்ற வர்கள் என்ற வகையில் இவற்றை ஏற்றுக்கொள்வர் என்பதையும்

## கணிப்பீட்டு, மதிப்பீட்டு நியதிகள்

- இறை பிள்ளையாகிய நீர் உம்மால் வளர்த்துக் கொள்ளக்கூடிய நற்குணங்கள் நான்கைப் பெயரிடுவர்.
- வகுப்பிலே பல்வேறு தரப்பட்ட பிள்ளைகளிடையே உம்மால் சேர்ந்து செயற்படக்கூடிய சந்தர்ப்பங்கள் இரண்டை எழுதுங்கள்.
- இயேசுவைப் பின்பற்றுகின்ற நீர் உமக்குள்ள இயேசுவின் குணங்கள் இரண்டை குறிப்பிடுங்கள்.

**செயலட்டை**

**வகுப்பிலே காட்சிப்படுத்துங்கள்**

| **நற்குணங்கள்** | **நிவர்த்தி செய்யும் பிள்ளையின் பெயர்** |
|---|---|
| 1. அனைவருக்கும் மரியாதை செய்தல் | |
| 2. அன்புடன் உரையாடுதல் | |
| 3. பிறருக்கு உதவி செய்தல் | |
| 4. துன்பத்தில் கருணை காட்டுதல் | |
| 5. ஆசிரியருக்குக் கீழ்படிதல் | |

## மனிதனுடைய பொறுப்புணர்வுகள்

**தேர்ச்சி 1.0** :- இறைவனை அறிந்து கொள்வதனூடாக விசுவாச வாழ்வு வாழ்வர்.

**தேர்ச்சி மட்டம் 1.6** :- சூழலைப் பாதுகாப்பதன் மூலம் படைப்பினை அபிவிருத்தி செய்து கொள்வதற்கு உதவி செய்வர்.

**செயற்பாடு 1.6** :- சூழலைப் பாதுகாப்பதனூடாகப் படைப்பினை அபிவிருத்தி செய்வோம்.

**நேரம்** :- 80 நிமிடங்கள்

**தர உள்ளீடு** :-
- சுத்தமான சூழலையும் அசுத்தமான சூழலையும் காட்டுகின்ற இரண்டு படங்கள்.

**கற்றல் கற்பித்தல் படிமுறைகள்**

**படிமுறை 1.6.1** :-
- செய்யக்கூடிய செயற்பாடுகளை விசாரித்துப் பார்த்து, சுத்தமான சூழலையும் அசுத்தமான சூழலையும் காட்டுகின்ற படங்கள் இரண்டை வெளிப்படுத்திக் கொண்டு கீழுள்ள கருத்துக்களோடு கலந்துரை யாடலில் ஈடுபடுங்கள்.

> - சூழலைப் பாதுகாத்துக் கொள்வது எமது கடமை என்பதையும்
> - அதற்காகப் பத்துக்கட்டளை எமக்கு உள்ளது என்பதையும் (திருவிவிலியத்தில் தொடக்கநூல் 1: 28)
> - சூழலை அசுத்தப்படுத்தும் செயல்களை எம்மிடமிருந்து தவிர்த்துக் கொள்ளல்.
> - சூழலைச் சுத்தமாக வைத்துக்கொள்வதற்கு நம்மால் செய்யக்கூடிய செயல்கள் உள்ளது என்பதையும்

**படிமுறை 1.6.2** :-
- வகுப்பினை நான்கு சிறிய குழுக்களாக பிரியுங்கள்.
- செயலட்டைகள் நான்கை குழுக்கள் நான்கிற்கும் பிரியுங்கள்.
- குழு ஆய்வின் அறிவுறுத்தலுக்கமைய செயல்படுங்கள்.
- சிறிய குழுக்களை செயலிலே ஈடுபடுத்துங்கள்.
- மற்றைய குழுக்களையும் ,வெளிப்படுத்துவதற்காக ஆயத்தம் செய்யுங்கள்.

**படிமுறை 1.6.3** :-
- சிறிய குழுக்களின் செயன்முறைகளை வெளிப்படுத்துங்கள்.
- முழுக் குழுவிலும் வளர்ச்சிக்குரிய கருத்துக்களை பெற்றுக் கொடுங்கள்.

- கீழுள்ள கருத்துக்களை உள்வாங்கிக் கொண்டு கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

> - சூழலைப் பராமரிக்கத் தவறுகின்ற செயல்களை நாமும் செய்கின்றோம் என்பதையும்
> - வீட்டையும் பாடசாலை சூழலையும் பராமரித்து வைத்துக் கொள்ளல் அவசியம் என்பதையும்
> - இறை படைப்பினைப் பாதுகாத்துக் கொள்வது எமது கடமை என்பதையும்
> - சூழலைப் பாதுகாத்துக் கொள்வதற்கு நம்மால் செய்யக்கூடிய செயல்களை அசட்டை பண்ணாமல் செய்து முடிப்பது அவசியம் என்பதையும்

**கணிப்பீட்டு, மதிப்பீட்டு நியதிகள்**

- பாடசாலைச் சூழலை அழகுபடுத்திக் கொள்வதற்கு செய்யக்கூடிய செயல்கள் இரண்டை எழுதுங்கள்.
- பொலித்தீன் பாவனையைத் தவிர்ப்பதற்கு உம்மால் செய்யக்கூடிய செயல்கள் இரண்டைக் குறிப்பிடுக.
- உம்மால் சூழலுக்கு தீங்கிழைக்கின்ற சந்தர்ப்பங்கள் இரண்டைக் குறிப்பிடுக.
- சூழலுக்கு தீங்கிழைக்கின்ற சந்தர்ப்பங்களை தவிர்த்துக் கொள்ளக்கூடிய வழிகள் இரண்டைக் குறிப்பிடுக.

**தேர்ச்சி 2.0** :- விசுவாச வாழ்வு வாழ்வதற்குப் பத்துக் கட்டளையின் வழிகாட்டலைப் பெறுவர்.

**தேர்ச்சி மட்டம் 2.1** :- தமது அழைப்பை ஏற்றுக்கொண்டு அதற்கேற்ப வாழ்வை அழகுபடுத்திக் கொள்வர்.

**செயற்பாடு 2.1** :- இறைவாழ்வு வாழ்வதற்குத் தீரமானம் செய்து கொள்வோம்.

**நேரம்** :- 120 நிமிடங்கள்

**தர உள்ளீடு** :-
- தொடக்க நூல் 12: 1-4
- தொடக்க நூல் 28: 10-17 விவிலிய வசனங்கள் எழுதப்பட்ட மூன்று அட்டைகளும், செயலட்டைகள் மூன்றும், டிமைக் கடதாசியும் மாக்கர் பேனாவும்.

**கற்றல் கற்பித்தல் படிமுறைகள்**

**படிமுறை 2.1.1** :-
- ஆசிரியரின் வழிகாட்டுதலில் ஆபிரகாமினதும், ஈசாக்கினதும் நிகழ்ச்சி.

**ஈசாக்கைப் பலியிடும் நிகழ்ச்சி**

- ஆபிரகாம் எவ்வித சந்தேகமுமின்றி இறைவனை, விசுவாசித்தார் என்பதையும்
- இறைவனால் தீங்குகள் நடைபெறாது என்பதையும்
- ஈசாக் தனது தந்தைக்குக் கீழ்ப்படிந்தார் என்பதையும்
- எங்களுக்கும் இறைவனிடமிருந்து எந்தவொரு தீங்கும் நடைபெறாது என்பதையும்
- அனைத்தையும் இழந்து இறைவனை சந்திப்பதற்காக ஆபிரகாம் அழைக்கப்பட்டார் என்பதையும்
- ஆபிரகாமை இறைவன் ஆசீர்வதித்தார் என்பதையும்
- ஆபிரகாமின் மகன் ஈசாக் என்பதையும் அவர் இறைவனுக்காக வாழ்ந்தார் என்பதையும்
- இறைவன் எப்போதும் தம்மால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களோடு இருப்பார் என்பதையும்
- இறைவன் மக்களிடம் சாட்சிகளின் வழியாக பேசினார் என்பதையும்

**படிமுறை 2.1.2** :-
- வகுப்பினை மூன்று சிறிய குழுக்களாக பிரியுங்கள்.
- குழுக்களின் ஆய்விற்காக டிமைக் கடதாசி, மாக்கர் பேனை செயலட்டைகளைப் பகிரந்து கொடுங்கள்.
- சிறிய குழுக்களைச் செயலிலே ஈடுபடுத்துங்கள்.

**படிமுறை 2.1.3** :-
- சிறிய குழுக்களின் செயன்முறைகளை வெளிப்படுத்துங்கள்.
- பொதுக் குழுக்களிடம் கருத்துக்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
- விடுதலை திட்டத்தின் மூலம் இறைமக்களை உருவாக்கிக் கொள்வதற்கு முதல் படிமுறை ஆதிப் பிதாக்கள் என்பதையும்
- ஆபிரகாம், ஈசாக், யாக்கோபு ஆகியோர் ஆதிப் பிதாக்களாகக் கருதப்படுவர் என்பதையும்

## கணிப்பீட்டு, மதிப்பீட்டு நியதிகள்

- இறைதிட்டத்தின் மூலம் இறைமக்களை உருவாக்கிக் கொள்வதற்கு முதல் ஆதிப்பிதாக்களின் பெயர்களைக் குறிப்பிட்டு அவர்களைப் பற்றி விளக்கிக் கூறுவர்.
- ஆதிப் பிதாக்களுக்கு இறைவன் கொடுத்த உடன்படிக்கைகளைப் பெயரிடுங்கள்.
- இறைவன் எப்போதும் ஆதிப் பிதாக்களோடு இருந்து அவர்களை ஆசீர்வதித்தார் என்பதையும் விளக்கிக் கூறுவர்.

## குழு ஆய்விற்கான அறிவுறுத்தல்கள்

- நீர் வாசித்த விவிலிய வசனத்தின் மட்டில் அவதானத்தைச் செலுத்துங்கள்.
- அவ்வசனத்தின் வழியாகக் கூறப்பட்டுள்ள கருத்துக்களை ஒன்று சேருங்கள்.
- கருத்துக்கேற்ப ஆதிப்பிதாக்கள் பற்றிய கருத்துக்களை ஒன்றுசேருங்கள்.
- முழுக் குழுவையும் செயற்படுத்துங்கள்.

**தேர்ச்சி 2.0** :- விசுவாச வாழ்வு வாழ்வதற்கு பத்துக் கட்டளையின் வழிகாட்டலைப் பெறுவர்.

**தேர்ச்சி மட்டம் 2.2** :- சேவை செய்வதற்கு கிடைக்கின்ற சந்தர்ப்பங்களில் உரிய பலனைப் பெறுவர்.

**செயற்பாடு 2.2** :- நாம் இளைய தலைவர்கள் ஆவோம்.

**நேரம்** :- 80 நிமிடங்கள்

**தர உள்ளீடு**
- வி. பயணம் 5: 15-20
- வி. பயணம் 14: 21-21 ஆகிய விவிலிய வசனம் அடங்கிய மூன்று பிரதிகள்.
- டிமை கடதாசி, மாக்கர் பேனை

**கற்றல் கற்பித்தல் படிமுறைகள்**

**படிமுறை 2.2.1** :-
- எரிகின்ற முட்செடியொன்றின் சித்திரமொன்றை வகுப்பில் வெளிப்படுத்தி அதைப்பற்றிய கருத்துக்களை விசாரித்தல், மாணவர்களின் கருத்துக் களை மையமாகக் கொண்டு கீழுள்ளவற்றில் அவதானத்தைச் செலுத்தி ஆசிரியர் கலந்துரையாடலை நடாத்துங்கள்.

> - எரிகின்ற முட்செடி மூலம் காட்சி கொடுத்த ஆண்டவர் மோசேயை தலைமைத்துவத்திற்கு அழைத்தார் என்பதையும்
> - தேர்ந்து கொண்ட மக்களின் நன்மை கருதி மோசே தன்னை அர்ப்பணித்தார் என்பதையும்
> - அர்ப்பணித்த தலைவராக செயற்பட்டு மோசே தமது மக்களை உடன்படிக்கை செய்த தேசத்தை நோக்கி அழைத்துச் சென்றார் என்பதையும்

**படிமுறை 2.2.2** :-
- வகுப்பினை மூன்று சிறிய குழுக்களாகப் பிரியுங்கள்.
- குழுக்களின் ஆய்விற்காக டிமைக் கடதாசி, மாக்கர் பேனை, திருவிவிலிய வசனங்கள், செயலட்டைகளைப் பகிர்ந்து கொடுங்கள்.
- சிறிய குழுக்களைச் செயலிலே ஈடுபடுத்துங்கள்.
- இறுதிச் சேர்க்கையை வெளிப்படுத்துவதற்கு ஆயத்தப்படுத்துங்கள்.

**படிமுறை 2.2.3 :-**
- சிறிய குழுக்களின் வெளிப்பாடுகளை வெளிப்படுத்துங்கள்.
- குறைகளை நிவர்த்தி செய்ய கொடுத்த குழுக்களுக்கு முதலிடத்தைக் கொடுங்கள்.
- ஏனைய குழுக்களுக்கு வளர்ச்சிக்கான கருத்துக்களை வழங்க சந்தர்ப்பம் கொடுங்கள்.
- கீழுள்ள கருத்துக்கள் மேலோங்கும் வகையில் கலந்துரையாடுங்கள்.

- மோசே மக்கள் தலைவன் என்பதையும்
- எகிப்து நாட்டில் அடிமையாக இருந்த மக்களை விடுதலை செய்ய மோசே தலைமைத்துவத்தை ஏற்றார் என்பதையும்
- அவர்களை அடிமைத்தனத்திலிருந்து மீட்டு செழிப்பான நாட்டிற்கு கொண்டு செல்வதற்கு மோசே வழிகாட்டினார் என்பதையும்
- உடன்படிக்கை நாட்டிற்கு அழைத்துச் செல்லும் தலைமைத்துவத்தை மோசே தாங்கினார் என்பதையும்
- செங்கடலினைக் கடப்பதற்கு இறைவனின் உதவியால் கடல்நடுவே பாதையை அமைத்துக் கொடுத்தார் என்பதையும்
- மோசே அனைத்து சவால்களையும் வெற்றி கொண்டு தேர்ந்து கொண்ட மக்களை முன்னெடுத்துச் சென்றார் என்பதையும்

## கணிப்பீட்டு, மதிப்பீட்டு நியதிகள்

- மோசேக்கு தலைமைத்துவத்தைக் கொடுத்த மக்கள் பற்றிய தகவல்களை சேகரிப்பர்.
- மோசேக்கு கொடுக்கப்பட்ட பொறுப்புக்கள் பற்றி விளக்குவர்.
- மோசே தமக்கு கொடுக்கப்பட்ட பொறுப்பை இறைவிருப்பத்திற்கு ஏற்ப செய்து முடித்தார் என்பதை ஏற்றுக்கொள்ளல்.
- சமுதாயத்தினுள் தலைமைத்துவ பொறுப்புக்களைக் கருத்திற் கொண்டு செயலாற்றுவர்.

## குழு ஆய்விற்கான அறிவுறுத்தல்கள்

- உங்களுக்கு கிடைத்த விவிலிய வசனத்தை அவதானியுங்கள்.
- அவ்வசனங்கள் சொல்கின்ற கருத்துக்களை எடுத்துக் காட்டுங்கள்.
- மோசே தேர்ந்து கொண்ட மக்களுக்கு தலைமைத்துவத்தை ஏற்றார் என்பதற்கு சாட்சிகளை அறிந்து வரிசைப்படுத்துங்கள்.
- மோசேயின் வாழ்க்கை வரலாற்றில் எடுத்துக் காட்டுகின்ற தலைமைத்துவ பண்புகள் இரண்டை வெளிப்படுத்துங்கள்.
- இறுதி சேர்க்கையை அமைக்க வழிகாட்டுங்கள்.

**தேர்ச்சி 2.0** :- விசுவாச வாழ்வு வாழ்வதற்கு பத்துக் கட்டளையின் வழிகாட்டலைப் பெறுவர்.

**தேர்ச்சி மட்டம் 2.3** :- இறை கட்டளையைப் பின்பற்றுவதன் மூலம் ஒழுங்காக வாழ வழி அமைத்துக் கொள்வர்.

**செயற்பாடு 2.3** :- பத்துக் கற்பனைக்குரிய நல்வாழ்வு வாழ்வோம்.

**நேரம்** :- 120 நிமடங்கள்

**தர உள்ளீடு** :-
- பத்துக் கட்டளை எழுதப்பட்ட பிறிஸ்டல் போட் - 2
- வி. பயணம் 19: 3-6 விவிலிய வசனம் அடங்கிய மூன்று பிரதிகள்.
- பத்துக் கட்டளை எழுதப்பட்ட மூன்று பிரதிகள்
- டிமை கடதாசி, மாக்கர் பேனை, செயலட்டை

## கற்றல் கற்பித்தல் படிமுறைகள்

**படிமுறை 2.3.1:**
- பத்துக் கட்டளைகள் எழுதப்பட்டுள்ள 2 அட்டைகளை மாணவர் களுக்குக் கொடுங்கள்.
- அங்கு குறிப்பிட்டுள்ள இரண்டு பிரிவுகளை பெயரிடுவதற்கு மாணவர் களை ஈடுபடுத்துங்கள்.
- கீழே உள்ள கருத்துக்கள் மேலோங்கும் வகையில் கலந்துரை யாடலை நடாத்துங்கள்.

> - பத்துக்கட்டளை சீனாய் மலையிலே கொடுக்கப்பட்டது என்பதையும்
> - பத்துக்கட்டளை இரண்டு கற்களில் எழுதப்பட்டுள்ளது என்பதையும்
> - ஒரே கல்லில் இறைவனுக்கு தொடர்பான கட்டளைகள் உண்டு என்பதையும்
> - மற்றைய கல்லில் மனிதன் தொடர்பான கட்டளைகள் உண்டு என்பதையும்
> - பொதுவாக இந்த கட்டளைகளுக்கேற்ப வாழ்வதற்கு நாம் அழைக்கப்பட்டுள்ளோம் என்பதையும்

**படிமுறை 2.3.2** :-
- வகுப்பினை மூன்று சிறிய குழுக்களாக பிரியுங்கள்.
- குழுக்களின் ஆய்விற்காக டிமைக் கடதாசி, மாக்கர் பேனை, திருவிவிலிய வசனங்கள், செயலட்டைகளைப் பகிரந்து கொடுங்கள்.
- சிறிய குழுக்களை செயலிலே ஈடுபடுத்துங்கள்.
- அனைத்துக் குழுக்களுக்கும் ஆக்கங்களை வெளிப்படுத்துவதற்கு ஏற்பாடு செய்யுங்கள்.

**படிமுறை 2.3.3** :-
- சிறிய குழுக்களின் ஆய்வுகளை வெளிப்படுத்துங்கள்.
- குறைகளை நிவர்த்தி செய்வதற்கு கொடுத்த குழுக்களுக்கு முதலிடத்தைக் கொடுங்கள்.
- ஏனைய குழுக்களிடமிருந்து அபிவிருத்திக்கான ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்.
- கீழுள்ள கருத்துக்கள் மேலோங்கும் வகையில் கலந்துரையாடுங்கள்.

> - சீனாய் மலையில் பத்துக்கட்டளை கொடுக்கப்பட்டது என்பதையும்
> - பருந்து தன் குஞ்சுகளை பாதுகாத்துக் கொள்வது போல இறைவன் இஸ்ராயேல் மக்களை பாதுகாப்பதற்கு உடன்படிக்கை செய்தார் என்பதையும்
> - பத்துக் கட்டளை வழியாக நாம் அனைவரும் நல்வாழ்வு வாழ அழைக்கப்படுகிறோம் என்பதையும்
> - முதல் மூன்று கட்டளைகளின் வழியாக எவ்வாறு இறைவனுக்கு அன்பு செய்வது என்பதை அறிவுறுத்துகின்றது என்பதையும்
> - மிகுதி ஏழு கட்டளைகளும் பிறர் அன்பைக் காட்டுவதற்கு கடைப் பிடிக்க அவசியம் என்பதையும்
> - ஞாயிற்றுக்கிழமைகளை தூய்மையாக அனுசரிப்பதனால் இறை வனுக்கு உகந்தவர்களாகிறோம் என்பதையும்
> - பத்துக் கட்டளைகளுக்கேற்ப வாழ்க்கையை வாழ நாம் உறுதி கொள்ள வேண்டும் என்பதையும்

## கணிப்பீட்டு, மதிப்பீட்டு நியதிகள்

- இறைவன் மோசேக்கு பத்துக் கட்டளைகளை கொடுத்த வழிமுறைகள் பற்றிய கருத்துக்களை ஒன்று சேர்ப்பர்.
- பத்துக் கட்டளை எழுதியுள்ள வழிமுறை பற்றிய மாதிரி வடிவங்களை எழுதுவர்.
- பத்துக் கட்டளைகளுக்கேற்ப வாழ்வதில் எங்களுக்குக் கிடைக்கின்ற பயன்கள் மூன்றை எடுத்துக்காட்டுவர்.
- இறைவனுக்கு உள்ள உயர்ந்த அன்பைக் காட்டுவதற்கு பத்துக் கற்பனைகளுக்கேற்ப வாழவேண்டும் என்பதையும்

## குழு ஆய்விற்கான அறிவுறுத்தல்கள்

- உங்களுக்கு கிடைக்கின்ற விவிலிய வசனங்களுக்கு அவதானத்தைச் செலுத்துங்கள்.
- அந்த வசனங்களில் எடுத்துக்கூறும் கருத்துக்களை எடுத்துக் காட்டுங்கள்.
- இறைவனுக்கு அன்பு செய்கின்ற முறைகளைக் காட்டுவதற்கு மாதிரிகள் இரண்டை எழுதுங்கள்.
- சகோதர அன்பைக் காட்டுவதற்கு நீர் கடைப்பிடிக்கக்கூடிய கட்டளைகள் நான்கை எழுதுக.
- ஞாயிற்றுக்கிழமைகளை பரிசுத்தமாகக் கடைப்பிடிப்பதற்கு உம்மால் செய்யக்கூடிய செயல்கள் பற்றி கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

**தேர்ச்சி 2.0** :- விசுவாச வாழ்வு வாழ்வதற்கு பத்துக் கட்டளையின் வழிகாட்டலைப் பெறுவர்.

**தேர்ச்சி மட்டம் 2.4** :- படைப்பாளரான இறைவனை தினமும் வணங்கி ஆராதிப்பர்.

**செயற்பாடு 2.4** :- இறை அழைப்பிற்கேற்ப நாம் இறைவனை வணங்குவோம்.

**நேரம்** :- 80 நிமிடங்கள்

**தர உள்ளீடு** :-
- புனித லூக்கா 22: 17-20 வரை அடங்கிய விவிலிய வசன அட்டைகள்.
- டிமை கடதாசி, மாக்கர் பேனை
- இறைவனை துதிக்கும் பாடல் அடங்கிய அட்டை
- சிறிய செபம் ஒன்றின் வடிவம்

**கற்றல் கற்பித்தல் படிமுறைகள்**

**படிமுறை 2.4.1** :-
- இறைவனை துதிக்கும் பாடலை பிள்ளைகளை பாடச் செய்யுங்கள்.
- புனித லூக்கா 22: 17-20 விவிலிய வசனத்தை ஆசிரியர் வாசித்தல்.
- மீண்டும் ஒரு மாணவன் மூலம் வாசிக்கச் செய்தல்.
- வாசிக்கின்ற வசனத்தைத் தியானிக்க சந்தர்ப்பத்தை பெற்றுக் கொடுத்தல்.
- பிறகு உருவாகின்ற அந்தக் கருத்துக்களை கலந்துரையாட சந்தர்ப் பத்தை பெற்றுக் கொடுத்தல்.

- ஆராதித்தல், நன்றியளித்தல், மகிமைப்படுத்தல் இறைவனுக்கு மாத்திரம் கொடுத்தல் அவசியம் என்பதையும்
- திருப்பலி இறைவனுக்கு ஒப்புக் கொடுக்கக்கூடிய உயர்ந்த பலி என்பதையும்
- கிறிஸ்துநாதர் கடைசி இராப்போசனத்தின் போது தேவ நற் கருணையை ஏற்படுத்தினார் என்பதையும்
- தினந்தோறும் திருப்பலியிலே நற்கருணை வழிபாட்டில் நடை பெறுவது அந்தப் பலி என்பதையும்
- திருப்பலியில் பங்கேற்பதன் மூலம் இறைவனுக்கு ஆராதனை நன்றியும், மகிமையும் அளிக்க முடியும் என்பதையும்

**படிமுறை 2.4.2** :-
- வகுப்பினை மூன்று சிறிய குழுக்களாக பிரியுங்கள்.
- டிமைக் கடதாசி, மாக்கர் பேனையைப் பகிரந்து கொள்ளுங்கள்.
- சிறிய குழுக்களை செயலிலே ஈடுபடுத்துங்கள்.
- அனைத்து குழுக்களுக்கும் ஆக்கங்களை வெளிப்படுத்துவதற்கு ஏற்பாடு செய்யுங்கள்.

**படிமுறை 2.4.3** :-
- கொடுக்கின்ற கருத்துக்களை மையமாகக் கொண்டு குழுக்களின் கலந்துரையாடலின் மூலம் ஒப்புக் கொடுப்பதற்கான சிறிய செபமொன் றைத் தயாரிக்கவும்.
- இறைவனை அழைத்தல்
- இறைதந்தையை வணங்குதல்
- எங்களுக்குக் கிடைத்த வரங்களுக்காக நன்றி கூறுதல்.
- அன்றாட வேலைகளை இறைவனுக்கு அர்ப்பணித்தல்
- எமது தேவைகளைச் சமர்ப்பித்தல்
- இறைதந்தையை புகழ்தல்
- இயேசுநாதரின் வழியாக செபத்தின் முடிவு.
- சிறிய குழுக்களின் வெளிப்பாடுகளை வெளிப்படுத்துங்கள்.
- ஏனைய குழுக்களினால் அபிவிருத்திக்குத் தேவையான கருத்துக் களைப் பெற்றுக்கொள்ளுதல்.
- கீழுள்ள கருத்துக்கள் மேலோங்கும் வகையில் கலந்துரையாடுங்கள்.

- நாம் இறைவனை வணங்க வேண்டும் என்பதையும்
- நாம் இறைவனை மட்டுமே வணங்க வேண்டும் என்பதையும்
- அவரை வணங்க தினமும் செபித்தல் அவசியம் என்பதையும்
- எங்களுக்கும் சிறிய செபத்தைத் தயாரித்து இறைவனை வணங்க முடியும் என்பதையும்
- தினந்தோறும் எமது அனைத்து வேலைகளுக்கு முன்னும் பின்னும் இறைவனை வணங்க வேண்டும் என்பதையும்
- எமது செயல்கள், சிந்தனைகள் அனைத்தையும் இறைவனுக்கு ஒப்புக் கொடுத்தல் அவசியம் என்பதையும்
- திருப்பலி இறைவனுக்கு ஒப்புக் கொடுக்கக்கூடிய உயர்ந்த பலி என்பதையும்

### கணிப்பீட்டு, மதிப்பீட்டு நியதிகள்

- சிறிய செபத்தில் இருக்க வேண்டிய பண்புகளைச் சேகரித்தல்.
- சிறுவராகிய எமக்கும் இறைவனைப் புகழ்பாட செபம் தயாரிக்க இயலும் என்பதை ஏற்றுக் கொள்ளல்.
- செபங்களில் தொடக்கமும் முடிவும் இருக்க வேண்டிய முறையினைக் காட்டுவதற்கு இரண்டு மாதிரி செபங்களை வழங்குதல்.
- இறைவனை வணங்கக்கூடிய சில சந்தர்ப்பங்களை ஒன்றன் பின் ஒன்றாகக் குறித்தல்.

### குழு ஆய்விற்கான அறிவுறுத்தல்கள்

- ஆசிரியர் வகுப்பறையிலே காட்சிப்படுத்தியுள்ள செப வடிவத்தை அவதானியுங்கள்.
- அந்த வடிவத்திற்கேற்ப இறைவனை வணங்க சிறிய செபமொன்றை எழுதுங்கள்.
- அவ்வடிவத்திலுள்ள பிரிவுகளை விசேடமாக அவதானியுங்கள்.
- அனைத்து குழுக்களையும் ஆக்கங்களை வெளிப்படுத்துவதற்கு ஆயத்தப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 2.0** :- விசுவாச வாழ்வு வாழ்வதற்கு பத்துக் கட்டளையின் வழிகாட்டலைப் பெறுவர்.

**தேர்ச்சி மட்டம் 2.5** :- பரிசுத்த இடத்திலும், பரரிசுத்த பொருட்களிலும் மரியாதையாய் செயற்படுவர்.

**செயற்பாடு 2.5** :- இறைவனை மாத்திரம் வணங்குவோம்.

**நேரம்** :- 80 நிமிடங்கள்

**தர உள்ளீடு** :-

- மூன்று செயற்பாட்டு மாதிரிகள்
- பரிசுத்த திரித்துவத்தின் படம்
- புனித அந்தோனியார், புனித செபஸ்தியார், புனித பிரான்சிஸ் சவேரியார், ஜோசப் வாஸ் அடிகளார், பிரான்சிஸ் அசிசி
- மாட்டின் டி ஹேரத் போன்ற 3 பேரின் படங்களை தேடிக் கொள்ளுங் கள்.
- பரிசுத்த திரித்துவத்தின் படம், புனிதர்கள் மூவரினது படம் என்பவற் றைக் காட்டி பிள்ளைகளின் கருத்துக்களை அறிதல்.
- படத்தை விளங்கிக் கொள்ளுதல், பெயரிடுதல் போன்றவற்றைப் பிள்ளைகள் வழியாகச் செய்யுங்கள்.
- அந்தப் படங்கள் தொடர்பான கருத்துக்களை அறிந்து கலந்துரை யாடலில் ஈடுபடுங்கள்.

**கற்றல் கற்பித்தல் படிமுறைகள்**

**படிமுறை 2.5.1** :-

- பரிசுத்த திரித்துவத்திற்கும், புனிதர்களுக்கும் இடையே வேறுபாடு உள்ளது என்பதையும்
- பரிசுத்த திரித்துவம் என்பது மூவொரு இறைவன் என்பதையும்
- புனிதர்கள் இவ்வுலகில் தூய வாழ்வு வாழ்ந்து புனிதத்துவத்தை அடைந்தவர்கள் என்பதையும்
- சிறந்த முறையில் வாழ்ந்தால் எமக்கும் புனிதத்துவத்தை அடையலாம் என்பதையும்
- பரிசுத்த திரித்துவத்தை வணங்க வேண்டும், புனிதர்களுக்கு மரியாதை கொடுக்க வேண்டும் என்பதையும்

**படிமுறை 2.5.2** :-

- வகுப்பினை மூன்று சிறிய குழுக்களாகப் பிரியுங்கள்.
- டிமைக் கடதாசி, மாக்கர் பேனை போன்றவற்றைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.
- சிறிய குழுக்களை செயலிலே ஈடுபடுத்துங்கள்.
- இறுதிச் சேர்க்கையை வழங்க குழுக்களை ஆயத்தம் செய்யுங்கள்.
- உமது பங்கைச் சார்ந்த புனிதரைப் பற்றிய விபரங்களை அறிந்து கொள்ளுங்கள்.
- ஆலயத்தை அர்ப்பணித்துள்ள புனிதரின் பெயர்.
- இறை சேவைக்கு தம்மை அர்ப்பணித்த முறை.
- அந்த வாழ்க்கை வரலாற்றினால் பெற்றுக்கொள்ளக்கூடிய முன் மாதிரிகள்.
- அந்த முன்மாதிரிகள் மூலம் எம் வாழ்விற்கு வழிகாட்டல்கள்.

**படிமுறை 2.5.3** :-

- சிறிய குழுக்களின் வெளிப்பாடுகளை வெளிப்படுத்துங்கள். ஏனைய குழுக்களினால் வளர்ச்சிக்கான கருத்துக்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
- கீழுள்ள கருத்துக்கள் மேலோங்கும் வகையில் கலந்துரையாடுங்கள்.

> - திருச்சுரூபம், புத்தகம், படங்கள் ஆகியன அப்புனிதர்களை நினைவு படுத்திக் கொடுக்கின்றது என்பதையும்
> - அவற்றிற்கு மரியாதை செலுத்துதல், இறைவனுக்கு செய்கின்ற வணக்கத்திற்கு சமனானது என்பதையும்
> - இறைவணக்கம் என்பது இறைவன் ஒரே சருவேசுரன் படைப்பாளர் ஆதியும், அந்தமும் அன்பும் என்பதை ஏற்றுக்கொள்வர் என்பதையும்
> - புனிதர்கள் வழியாக எங்களுக்கு இறைவனின் அருளைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதையும்

**கணிப்பீட்டு, மதிப்பீட்டு நியதிகள்**

- இறைவனுக்கும் புனிதர்களுக்கும் இடையில் வேறுபாடுகள் உள்ளன என்தை ஏற்றுக்கொள்வர்.
- இறைவனுக்கு மாத்திரம் வணக்கம் செலுத்துவது அவசியம் என்பதை உறுதிசெய்வதற்கு 3 காரணிகளை சேகரித்துக் கொள்வர்.
- திருச் சுருபங்களுக்கும், படங்களுக்கும் மரியாதை செலுத்துவதற்கு இரண்டு காரணங்களை வெளிப்படுத்துவர்.
- தமக்குத் தெரிந்த புனிதர்கள் மூவரை பெயரிடுவர்.

## குழு ஆய்விற்கான அறிவுறுத்தல்கள்

- உமது குழுவிற்குக் கிடைத்த ஒப்படை வடிவங்களை அவதானியுங்கள்.
- அந்த வடிவத்தில் கேட்கப்பட்டுள்ளவற்றை மேல்நோக்குங்கள்.
- ஒரே சருவேசுரனை மாத்திரம் வணங்குவதற்கு காரணமானவற்றை ஒழுங்குபடுத்துங்கள்.
- புனிதர்களுக்கு மரியாதை செய்வதற்குக் காரணமான காரணிகள் இரண்டை வெளிப்படுத்துங்கள்.
- புனிதர்களின் வாழ்க்கையினால் நாம் பெறக்கூடிய முன்மாதிரிகள் இரண்டை வெளிக் கொணருங்கள்.
- எல்லாக் குழுக்களுக்கும் உமது ஆக்கத்தினை வெளிப்படுத்துவதற்கு ஆயத்தம் செய்யுங்கள்.

**தேர்ச்சி 2.0** :- விசுவாச வாழ்வு வாழ்வதற்கு பத்துக் கட்டளையின் வழிகாட்டலைப் பெறுவர்.

**தேர்ச்சி மட்டம் 2.6** :- இறைவனுடைய சேவைக்காக எப்போதும் உற்சாகத்துடன் அர்ப்பணிப்பர்.

**செயற்பாடு 2.6** :- ஞாயிற்றுக்கிழமைகளில் பரிசுத்தர்களாக வாழ்வைக் கழிப்போம்.

**நேரம்** :- 80 நிமிடங்கள்

**தர உள்ளீடு** :-
- டிமை கடதாசி
- நிறப்பென்சில்
- மூன்று செயலட்டைகள்

## கற்றல் கற்பித்தல் படிமுறைகள்

**படிமுறை 2.6.1** :-
- கிழமையில் கடைசி விடுமுறை பற்றிய கலந்துரையாடலில் ஈடுபட்டுக் கொண்டு பாடத்திலே பிரவேசத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள். கிழமை கடைசி நாட்களை கழிக்கின்ற முறைகள் சனி, ஞாயிறு செய்கின்ற வேலைகள் பற்றி கேட்டு பிள்ளைகளிடம் பெற்றுக்கொண்ட தகவல்களை பகிரங்கமாக்கிக் கொண்டு கலந்துரையாடல் ஒன்றில் ஈடுபடுங்கள்.

- சமூகத்திலே அனைவருக்கும் ஓய்வானது அவசியம் என்பதை (விலங்கு, மரம், ஓடும் வண்டிகள், இயந்திர உபகரணங்கள்)
- ஓய்வினைத் தவிர்த்து வேலை செய்வது உடலின் சௌபாக்கியத் திற்கு இடையூறாகின்றது என்பதை ஏற்றுக் கொள்வர்.
- ஞாயிறு விடுமுறை நாளாக இருப்பது பரிசுத்தமாய் அனுசரிப்பதற்கே என்பதை ஏற்றுக்கொள்வர்.
- ஞாயிறு பரிசுத்தமானது என கழிக்கும் போது நாம் அறியாத அவசியமான ரகசியங்கள் உள்ளது என்பதை ஏற்றுக்கொள்வர்.
- ஞாயிறு இறைவனோடு கழிக்கின்ற நாளாக நன்மையான செயற்பாடு களில் அடங்கியிருத்தல் அவசியம் என்பதை ஏற்றுக்கொள்வர்.

**படிமுறை 2.6.2** :-
- வகுப்பினை மூன்று சிறிய குழுக்களாகப் பிரியுங்கள்.
- டிமைன் கடதாசி, மாக்கர் பேனை செயலட்டைகளைப் பகிரந்து கொள்ளுங்கள்.

- சிறிய குழுக்களை செயலிலே ஈடுபடுத்துங்கள்.
- மற்றைய குழுக்களுக்கு வெளிப்படுத்துவதற்கு ஆயத்தம் செய்யுங்கள்.
- ஞாயிறு தினத்தை பரிசுத்தமாய் கழிக்கும் போது நாங்கள் செய்கின்ற நன்மையான செயல்கள் நான்கு கீழே தரப்பட்டுள்ளது அதிலிருந்து உமது குழுவிற்குக் கிடைக்கும் செயல்களை சித்திரத்தில் வரையுங்கள்.

1. குடும்பமாக திருப்பலியில் பங்குகொள்ளல்.
2. நோயாளிகளைப் பார்க்கச் செல்லுதல்.
3. சிரமதானமொன்றில் பங்குகொள்ளல்.

**படிமுறை 2.6.3** :-
- சிறிய குழுக்கள் வரைந்த சித்திரங்களை வெளிப்படுத்துங்கள்.
- முழு குழுக்களின் மூலம் அபிவிருத்தி தன்மைக்குரிய கருத்துக்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
- கீழுள்ள கருத்துக்களை உருவாக்கிக் கொண்டு சித்திரம் தொடர்பான சாராம்சங்களில் செயல்படுங்கள்.

- தேவநற்கருணைநாதர் எங்களின் வாழ்க்கையின் போசனையாளர் என்பதையும்
- இறைவனுக்குச் செய்யும் சேவைகளில் மிகவும் உன்னதமாகக் கொள்ளக்கூடியது ஞாயிறுதினம் திருப்பலியில் பங்குகொள் வதனாலாகும் என்பதையும்
- ஞாயிறு தினம் திருப்பலிக்கு குடும்பமாக பங்குகொள்ளல் அவசியம் என்பதையும்
- அப்படிச் செய்வது இறைவன் மீதுள்ள அதிக அன்பினாலேயே என்பதையும்
- ஞாயிறு தினம் நோயாளிகளைப் பார்த்தல், பிறருக்கு உதவி செய்தல், பொது வேலைகளில் பங்குகொள்ளல், பெரியோரை கனம் பண்ணுதல், போன்ற நற்பண்புகளை வளர்த்துக் கொள்ள முடியும் என்பதையும்.

## கணிப்பீட்டு, மதிப்பீட்டு நியதிகள்

- ஞாயிறு தினத்தைப் பரிசுத்தமாய் கழிப்பது இறைவனுக்கு பிரியமானது என்பதை ஏற்றுக் கொள்வர்.
- ஞாயிறு தினத்தைப் பரிசுத்தமாகக் கழிப்பதற்கு செய்கின்ற நன்மையான செயல்களை ஒன்று சேர்ப்பர்.
- ஞாயிறு தினத்தில் தமது இறையன்பை வெளிப்படுத்துவர்.
- ஞாயிறு தினம் விடுமுறை நாளாவதற்கு உள்ள காரணங்களை விமர்சிப்பர்.

## குழு ஆய்விற்கான அறிவுறுத்தல்கள்

- உமது குழுவிற்குக் கிடைத்த செயலைப் பற்றிய அவதானத்தில் ஈடுபடுத்துங்கள்.
- அவை பற்றி அவதானமாகச் செயற்படுங்கள்.
- ஞாயிறு தினத்தைப் பரிசுத்தர்களாக கழிப்பதற்குச் செய்யக்கூடியவற்றைச் சித்திரமாகக் கீறுங்கள்.
- ஞாயிறு தினம் நீர் செய்கின்ற நன்மையான செயல்களை உறுதி செய்து கொள்ளக்கூடிய வகையில் சித்திரத்தில் கீறுங்கள்.
- மற்றைய குழுக்களும் வெளிப்படுத்துவதற்கு ஆயத்தம் செய்யுங்கள்.

**தேர்ச்சி 2.0** :- விசுவாச வாழ்வு வாழ்வதற்கு பத்துக் கட்டளையின் வழிகாட்டலைப் பெறுவர்.

**தேர்ச்சி மட்டம் 2.7** :- இறைபிள்ளையானால் சமாதானமாகவும், ஒற்றுமையாகவும் வாழ்வர்.

**செயற்பாடு 2.7** :- களங்கமற்ற சகோதர அன்பால் ஒருவருக்கொருவர் அன்பு செய்வோம்.

**நேரம்** :- 80 நிமிடங்கள்

**தர உள்ளீடு** :-
- டிமைக் கடதாசி
- மாக்கர் பேனை
- மூன்று செயலட்டைகள்

**கற்றல் கற்பித்தல் படிமுறைகள்**

**படிமுறை 2.7.1** :-
- தமது வீட்டினுள்ளே குடும்பமாக அன்பாக வாழும் தன்மையை விமர்சியுங்கள்.
- பிள்ளைகளின் வெளிப்பாடுகள் வழியாக கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.
- கீழுள்ள கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு கலந்துரை யாடலை வழிப்படுத்துங்கள்.

- பெற்றோர் என்னை அன்பு செய்கின்றார் என்பதையும்
- நீங்களும் பெற்றோரை அன்பு செய்தல் அவசியம் என்பதையும்
- சகோதர, சகோதரிகள் உமக்கு அன்பு செய்வதைப் போல நீரும் அவர்களுக்கு அன்பு செய்தல் அவசியம் என்பதையும்
- அயலவர்களை அன்புடன் பராமரித்தல் அவசியம் என்பதையும்
- குடும்பத்தில் உறவினரை அன்பு செய்தல் என்பதையும்
- ஒருவருக்கொருவர் அன்பிலே வாழ்வது இறைவனுக்கு ஏற்புடையது என்பதையும்

**படிமுறை 2.7.2** :-
- வகுப்பினை மூன்று சிறிய குழுக்களாகப் பிரியுங்கள்.
- டிமைக் கடதாசி, மாக்கர் பேனை, செயலட்டைகளைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.
- சிறிய குழுக்களை செயலிலே ஈடுபடுத்துங்கள்.
- மற்றைய குழுக்களை முன்வைப்பதற்கு ஆயத்தம் செய்யுங்கள்.

- வீடு, அயலவர்கள், பாடசாலை, விளையாட்டு மைதானம்
  1. இங்கு ஒவ்வொரு இடங்களிலும் நீர் சகோதர அன்பிலே ஈடுபடுகின்ற முறையான கருத்துக்களை ஒன்று சேருங்கள்.
  2. அந்த கருத்துக்களுக்கு ஒத்துப்போகின்ற பத்துக் கட்டளைகளை தெரிவு செய்து எழுதுங்கள்.
  3. உங்களால் இவ்விடத்திலிருந்து செய்யமுடியாத செயல்களை எழுதுங்கள்.

**படிமுறை 2.7:3** :-
- சிறிய குழுக்களின் வெளிப்படுத்துங்கள்.
- முழு குழுக்களின் மூலம் விருத்தி செய்யக்கூடிய ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
- கீழுள்ள கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு கலந்துரை யாடலில் ஈடுபடுங்கள்.

- பத்துக் கட்டளையில் 4-10 வரையான கட்டளைகளில் உள்ள சகோதர அன்பை உறுதி செய்து கொள்ளுங்கள்.
- பெற்றோருக்குக் கீழ்ப்படிதல், கௌரவித்தல், அன்பு செய்தலும் பராமரித்துக் கொள்ளலும் அவசியம் என்பதையும்
- மற்றவருக்கு தீமை செய்தல், மனம் நோகச் செய்தல், கவனியாது விடுதல், புறங்கூறுதல், என்பவற்றைத் தவிர்த்தல் அவசியம் என்பதையும்
- உயிரினங்களும் இயற்கையான தர்மத்தை பாதுகாத்துக் கொள்ளுதல் அவசியம் என்பதையும்
- உடலினை சுத்தமாக வைத்துக் கொள்வது அவசியம் என்பதையும்
- பிறருக்கு உதவி செய்தல் அவசியம் என்பதையும்
- சத்தியத்தை நிலைக்கச் செய்தல் அவசியம் என்பதையும்

## கணிப்பீட்டு, மதிப்பீட்டு நியதிகள்

- 4-10 கட்டளைகள் மூலம் சகோதர அன்பிற்கு ஏற்ற கருத்துக்களை உறுதி செய்து கொள்வர்.
- பெற்றோருக்கு அன்பு காட்டுகின்ற முறைகளைப் பற்றிய கருத்துக்களைக் கூறுவர்.
- சகோதர அன்பிற்கு எதிராக உள்ள செயல்களுக்கு மாற்றத்தை ஏற்படுத்துவர்.
- அன்றாட வாழ்க்கையிலே உடலினை சுத்தமாக வைத்துக்கொள்ளக்கூடியவாறு கலந்துரையாடலை மேற்கொள்வர்.
- இறைவன் படைத்த சூழலைப் கொடுத்த சூழலை பாதுகாத்துக் கொள்ளுதல் அவசியம் என்பதை ஏற்றுக்கொள்வர்.

**குழு ஆய்விற்கான அறிவுறுத்தல்கள்**

- உமது குழுவிற்குக் கிடைத்த செயலின் மூலம் அவதானமாகுங்கள்.
- அதில் கேட்டுள்ளவற்றைப் பற்றி அவதானமாகுங்கள்.
- சகோதர அன்பிலே உள்ளடங்கும் கருத்துக்களை ஒன்று சேருங்கள்.
- சகோதர அன்பிற்கு எதிராக உள்ளவைகளை விமர்சியுங்கள்.
- மற்றைய குழுக்களும் வெளிப்படுத்துவதற்கு ஆயத்தமாகுங்கள்.

**தேர்ச்சி 3.0** :- கிறிஸ்தவ வாழ்வை வளப்படுத்திக் கொள்வதற்கு திருவருட்சாதனங்களை பெற்றுக்கொள்வர்.

**தேர்ச்சி மட்டம் 3.1** :- கிறிஸ்துநாதரிடம் கிடைக்கின்ற வரப்பிரசாதங்களுக்கேற்ப வாழ்வினை வளப்படுத்திக்கொள்வர்.

**செயற்பாடு 3.1** :- நாம் திருவருட்சாதனங்களைப் பெற்றுக்கொள்வோம்.

**நேரம்** :- 120 நிமிடங்கள்

**தர உள்ளீடு** :-
- ஏழு திருவருட்சாதனங்கள் காட்டுகின்ற படங்கள் 7
- திருமுழுக்கினை கொடுப்பதற்கு தேவையானவைகள்.
- பாஸ்கு மெழுகுதிரிகள்
- வெள்ளாடை
- பரிசுத்த தைலமும் நீரும்
- டிமைக் கடதாசி
- செயலட்டைகள்
- மாக்கர்பேனை

**கற்றல் கற்பித்தல் படிமுறைகள்**

**படிமுறை 3.1.1** :-
- திருமுழுக்கினை கொடுக்கும் முறையினை சுருக்கமான நடிப்பின் மூலம் வெளிப்படுத்துங்கள். அதைப்பற்றிய பிள்ளைகளின் கருத்தை விமர்சித்தல்.
- அந்தக் கருத்துக்களை மனதிலே எடுத்துக்கொண்டு கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

- திருவருட்சாதனங்களை கொடுப்பது குருவானவர் / ஆயர் அவர்கள் மூலமாகவே நடைபெறுகின்றது.
- திருவருட்சாதனங்களைக் கொடுக்கும் போது சில சம்பிரதாயங் களையும் தயார் செய்து கொள்வர் என்பதையும்
- திருமுழுக்கின் மூலம் புதிய வாழ்க்கையை ஆரம்பிக்கின்றனர் என்பதையும்
- மற்றைய பிரதான அருட்சாதனங்கள் பெற்றுக்கொள்வதற்கு வாயில் திறக்கப்படுகின்றது என்பதையும்

**படிமுறை 3.1.2** :-
- வகுப்பினை மூன்று சிறிய குழுக்களாகப் பிரியுங்கள்.
- குழுக்களின் கணிப்பீட்டிற்காக டிமைக் கடதாசியும் பெஸ்டல் / நிறப்பென்சில் போன்றவற்றை குழுக்களுக்கு பெற்றுக் கொடுங்கள்.
- சிறிய குழுக்களை செயலிலே ஈடுபடுத்துங்கள்.

**படிமுறை 3.1.3** :-
- திருவருட் சாதனங்கள் 7ஐயும் காட்டுகின்ற சித்திரம்
- குழு ஆய்விற்காக முன்வைத்தல்
- செயலட்டைகளுக்கு குழுக்கள் அடிப்படையில் விடைகளை எழுதுக.
- கிடைக்கப்பெற்றுள்ள படங்கள் மூலம் காட்டுகின்ற திருவருட்சாதனங்களை அடையாளம் காணுங்கள்.
- திருவருட்சாதனங்களை கொடுக்கின்றவரை அறிந்து கொள்ளுங்கள்.
- அந்தந்த திருவருட்சாதனங்களுக்காகப் பாவிக்கின்ற பொருட்களையும் அடையாளங்களையும் எழுதுங்கள்.
- ஒருமுறையும், பலமுறையும் பெறக்கூடிய பிரதான அருட்சாதனங்களை வெவ்வேறாக எழுதுங்கள்.

**பிள்ளைகள் எழுதுகின்ற பதில்களை சேர்த்துக் கொண்டு கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.**

- திருவருட்சாதனங்கள் 7 உண்டு என்பதையும்
- தற்போது பெற்றுள்ள அருட்சாதனங்கள் எத்தனை உள்ளது என்பதையும்
- எதிர்காலத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய அருட்சாதனங்கள் உண்டு என்பதையும்
- சில அருட்சாதனங்கள் ஒருமுறை மாத்திரமே பெற்றுக்கொள்ள முடியும் என்பதையும்
- அருட்சாதனங்களை பெறுவதில் எமது இறைவாழ்வு போசணை அடைகிறது என்பதையும்

## கணிப்பீட்டு, மதிப்பீட்டு நியதிகள்

- திருவருட்சாதனங்கள் 7 உள்ளதென்பதை ஏற்றுக்கொள்வர்.
- தற்போது பெற்றுள்ள அருட்சாதனங்களுக்கு முன்மாதிரிகளை அளிப்பர்.
- ஒருமுறையும், பலமுறையும் பெறக்கூடிய அருட்சாதனங்களை வெவ்வேறாக வரிசைப்படுத்துவர்.
- வளர்ந்தோர் வாழ்க்கைக்கு தேர்ந்து எடுத்துக்கொள்ளக்கூடிய அருட்சாதனங்களை ஒன்று சேர்ப்பர்.
- அருட்சாதனங்களை பெற்றுக்கொள்வது ஆன்மீக வாழ்வுக்குப் போசணையாகின்றது என்பதை ஏற்றுக்கொள்வர்.

**குழு ஆய்விற்கான அறிவுறுத்தல்கள்**

- பலகையில் தொங்கவிடப்பட்டுள்ள அருட்சாதனங்கள் 7ஐக் காட்டுகின்ற படங்களில் உமது அவதானத்தை செலுத்துங்கள்.
- அந்த ஏழு படங்களும் காட்டுகின்ற திருவருட்சாதனங்களை அறிந்து கொள்ளுங்கள்.
- தற்போது பெற்றுள்ள அருட்சாதனங்களை வரிசைப்படுத்துக.
- எதிர்காலத்திலே பெற்றுக்கொள்ளக்வுகூடிய திருவருட்சாதனங்களுக்கு உதாரணங்களை கொடுங்கள்.
- மற்றைய குழுக்களுக்கு முன்வைப்பதற்கு ஆயத்தமாகுங்கள்.

**தேர்ச்சி 3.0** :- கிறிஸ்தவ வாழ்வை வளப்படுத்திக் கொள்வதற்கு திருவருட்சாதனங்களைப் பெற்றுக்கொள்வர்.

**தேர்ச்சி மட்டம் 3.2** :- திருவருட்சாதனங்களைப் பெற்று புதிய வாழ்வினை வளப்படுத்திக் கொள்வர்.

**செயற்பாடு 3.2** :- திருவருட்சாதனங்களின் மூலம் வளமடைவோம்.

**நேரம்** :- 120 நிமிடங்கள்

**தர உள்ளீடு** :-
- குழுக்களின் செயற்பாடுகளுக்கான அட்டவணை
- டிமை கடதாசி
- மாக்கர்பேனை

**கற்றல் கற்பித்தல் படிமுறைகள்**

**படிமுறை 3.2.1** :-
- உணவு உடல் வளர்ச்சிக்கு தேவை என்பதை காலை உண்ட உணவுகள் பற்றிய இனிமையான கலந்துரையாடலொன்றை மேற்கொள்ளுங்கள்.உடல் வளர்ச்சிக்கு உணவு அவசியமாகின்றதை போல ஆன்ம வளர்ச்சிக்கு அவசியமான உணவைப் பற்றி உரையாடிப் கொண்ட பாடப் பிரவேசத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள். கீழுள்ள கருத்துக்களைப் பற்றி அவதானத்தை செலுத்துங்கள்.

- பசிக்கின்றபடியால் உணவருந்துகின்றர் என்பதையும்
- விரைவாக வளர்வதற்கு உணவு அவசியம் என்பதையும்
- சக்தியினை பெறுவதற்கு உணவு அவசியம் என்பதையும்
- நோய் வேளையிலே விசேஷமான உணவுகளை உட்கொள்வர் என்பதையும்
- நாங்கள் பெற்றுக் கொள்கின்ற அனைத்து உணவுகளிலுமே எமக்கு சக்தி கிடைக்கிறது என்பதையும்
- அப்படியே எங்களுடைய ஆன்மாவிற்கு போஷணைக்காக நாம் எப்போதும் உணவை பெற்றுக்கொள்வது கடமை என்பதையும்

**படிமுறை 3.2.2** :-
- வகுப்பினை மூன்று சிறிய குழுக்களாகப் பிரியுங்கள்.
- குழு ஆய்விற்காக டிமை கடதாசியும் மாக்கர் பேனையும்
- சிறிய குழுக்களை செயலிலே ஈடுபடுத்துங்கள்.

**படிமுறை 3.2.3** :- • சிறிய குழுக்களை செயலிலே ஈடுபடுத்துங்கள்.

| திருவருட்சாதனம் | ஆன்ம போஷணைக்காக | சரீர போஷணைக்காக |
|---|---|---|
| திருமுழுக்கு | | காபோவைதரேற்று |
| உறுதிப் பூசுதல் | சக்தி | |
| திவ்ய நற்கருணை | | பால் |
| பாவசங்கீர்த்தனம் | பலம் குன்றிப் போதல் | |
| நோயில் பூசுதல் | நோய்த்தன்மை | விற்றமின் |

(புதிய வாழ்வு, புரோட்டின், திவ்விய உணவு, குளுக்கோஸ்)

- செயலட்டைக்கு குழுக்கள் மூலம் விடையளியுங்கள். செயலட்டையை மனதிலே கொண்டு குழுக் கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

- திருமுழுக்கு எனும் திருவருட்சாதனத்தைப் பெறுவதில் நீர் தேவ பிள்ளையாகியுள்ளீர் என்பதையும்
- உறுதி பூசுதலினை பெற்றுக்கொள்வதன் மூலம் உமக்கு ஆன்மீக சக்தி கிடைத்துள்ளது என்பதையும்
- பாவசங்கீர்த்தனத்தின் மூலம் பலமற்ற பாவ வாழ்விலிருந்து எமக்கு மீண்டும் பலம் கிடைக்கின்றது என்பதையும்
- திவ்விய நற்கருணை பெறுவதின் மூலம் நாம் ஆன்மாவை போஷிக்கின்றோம் என்பதையும்
- திருமுழுக்கின் மூலம் திருச்சபையின் அங்கத்துவம் பெறுகின்றோம் என்பதையும்
- அங்கத்துவத்தை பாதுகாத்து கொள்வதற்காக மீண்டும் மீண்டும் திருவருட்சாதனங்களைப் பெற்றுக்கொள்வது எமது கடமை என்பதையும்

## கணிப்பீட்டு, மதிப்பீட்டு நியதிகள்

- திருமுழுக்கிலே பெற்ற வரங்கள் 2ஐ வெளிப்படுத்துங்கள்.
- திவ்விய நற்கருணையை தினமும் பெறுவதில் கிடைக்கின்ற வரப்பிரசாதங்களை ஒழுங்கு படுத்துங்கள்.
- பாவசங்கீர்த்தனம் அருட்சாதனத்தை பெற்றுக்கொள்வதற்கு காரணமாகின்ற கருத்துக்களை வெளிப்படுத்துவர்.
- நோயில் பூசுதலை கொடுக்கும் சந்தர்ப்பங்களை பெயரிடுவர்.
- அருட்சாதனங்கள் வழியாகக் கிடைக்கும் வரப்பிரசாதங்கள் வாழ்க்கையை வளமாகின்றது என்பதை ஏற்றுக்கொள்வர்.

## குழு ஆய்விற்கான அறிவுறுத்தல்கள்

- உங்கள் குழுவிற்குக் கிடைத்த செயலட்டை பற்றி அவதானத்தை செலுத்துங்கள். அவற்றை பூரணமாக்குவதற்கு சிறுவர்களை அறிவுறுத்துங்கள்.

| திருவருட்சாதனம் | ஆன்ம போஷணைக்காக | சரீர போஷணைக்காக |
|---|---|---|
| திருமுழுக்கு | புதிய வாழ்வு | காபோவைதரேற்று |
| உறுதிப் பூசுதல் | சக்தி | புரோடின் |
| திவ்ய நற்கருணை | திவ்விய உணவு | பால் |
| பாவசங்கீர்த்தனம் | பலம் குன்றிப்போதல் | குளுக்கோஸ் |
| நோயில் பூசுதல் | நோய்த்தன்மை | விற்றமின் |

- திருமுழுக்கில் பெற்ற கொடைகளை ஒழுங்குபடுத்துங்கள்.
- திவ்விய நற்கருணை எப்போதும் பெறுவதால் கிடைக்கின்ற வரப்பிரசாதங்களை வெளிப் படுத்துவர்.
- நோயில் பூசுதல் கொடுக்கின்ற சந்தர்ப்பங்கள் இரண்டைப் பெயரிடுங்கள்.

**தேர்ச்சி 3.0** :- கிறிஸ்தவ வாழ்வை வளப்படுத்திக் கொள்வதற்கு திருவருட்சாதனங்களை பெற்றுக்கொள்வர்.

**தேர்ச்சி மட்டம் 3.3** :- பாவத்திற்கு அடிமையாகின்ற அனைத்து சந்தர்ப்பங்களையும் அகற்றுவதற்கு முயற்சி செய்வர்.

**செயற்பாடு 3.3** :- தேவ வரப்பிரசாதங்களினால் வாழ்க்கையில் பலமடைவோம்.

**நேரம்** :- 120 நிமிடங்கள்

**தர உள்ளீடு** :-
- பரிசுத்த வேதாகம வசனங்கள் எழுதப்பட்ட அட்டைகள்
- யோவான் 4: 7-10
  16-18
  27-30
- டிமை கடதாசியும், மாக்கர்பேனையும்

**கற்றல் கற்பித்தல் படிமுறைகள்**

**படிமுறை 3.3.1** :-
- வாழ்வதற்கான சூழலானது வளமாக் உள்ளது. அதுபோலவே ஆன்மீக வாழ்வினையும் வளமுள்ளதாக்கிக் கொள்வதற்காக வரப்பிரசாதங்கள் வாழ்க்கைக்கு அவசியம் என்பதை உணருங்கள்.
- விடியற்காலையில் பனிபடர்ந்த புல்வெளியின் அழகினை கண்முன் கொண்டு வந்து இனிமையான கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.
- மரஞ்செடி கொடிகள் விருந்திக்குக் காற்று, சூரியவெளிச்சம், நீர் அவசியமாகின்றது போல் ஆன்மீக வாழ்வின் விருத்திக்காக வரப்பிரசாதங்கள் அவசியம் என்பதை உணருங்கள்.

- வாழ்வதற்காக சூழல் வளமாவது அவசியம் என்பதையும்
- வளமான சூழல் உருவாவது சுத்தமான காற்று, நீர், சூரிய வெளிச்சம் போன்றவை வழியாக என்பதையும்
- எமது ஆன்மீக வாழ்விற்காக வரப்பிரசாதங்கள் அவசியம் என்பதையும்
- பாவமானது விரும்பிய வரப்பிரசாதங்களை பெற்றுக்கொள்வதற்கு இடையூறாக உள்ளது என்பதையும்
- பாவத்தில் விடுதலையாவதால் விரும்பிய வரப்பிரசாதங்களை பெற்றுக் கொள்ள முடியும் என்பதையும்

**படிமுறை 3.3.2** :-
- வகுப்பினை மூன்று சிறிய குழுக்களாகப் பிரியுங்கள்.
- குழுக்களின் ஆய்விற்காக டிமைக் கடதாசியும் மாக்கர் பேனையும்
- பரிசுத்த வேதாகம வசனம் எழுதியுள்ள அட்டைகள் பெற்றுக் கொடுங்கள்.
- சிறிய குழுக்களை செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.

**படிமுறை 3.3.3** :-
- சிறிய குழுக்களின் செயன்முறைகளை வெளிப்படுத்துங்கள்.
- முழு குழுவின் மூலம், வளர்ச்சியடைந்துவர ஆலோசனை பெற்றுக் கொண்டு கீழ் குறிப்பிட்டுள்ள கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

> - எமக்கு கிடைக்கப்பெற்றுள்ள வரப்பிரசாதங்களை வாழ்க்கையிலே பாதுகாத்துக் கொள்வது அவசியம் என்பதையும்
> - பாவத்தினால் விரும்பிய வரப்பிரசாரங்களுக்கு தடை உருவாகின்றது என்பதையும்
> - விரும்பிய வரப்பிரசாதங்களை வாழ்விலே பாதுகாத்துக் கொள்வதற்கு பாவத்திலே நின்றும்வெளியாவது அவசியம் என்பதையும்
> - திருவருட்களை பெற்றுக்கொள்வதில் “சமாரியா பெண்ணை” போல எமது வாழ்வினையே மாற்றிக்கொள்வது அவசியம் என்பதையும்
> - எப்போதும் திருவருட்சாதனங்களை பெற்றுக்கொள்வதன் மூலம் விரும்பிய வரப்பிரசாதங்களை வாழ்விலே விருத்தி செய்துகொள்ள முடியும் என்பதையும்

**கணிப்பீட்டு, மதிப்பீட்டு நியதிகள்**

- விரும்பிய வரப்பிரசாதங்களைப் பெறுவதற்குப் பாவங்கள் தடையாக உள்ள முறைகளை கலந்துரையாடுவர்.
- பாவத்தில் இருநட்து விடுதலையாவதற்கு எடுக்கக்கூடிய வழிமுறைகள் பற்றி கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வர்.
- திருவருட்சாதனங்களைப் பெற்றுக்கொள்வதால் விரும்பிய வரப்பிரசாதங்களை வாழ்விலே விருத்தி செய்துகொள்ள முடியும் என்பதை ஏற்றுக் கொள்வர்.
- விரும்பிய வரப்பிரசாதங்களை வாழ்விலே பெற்றுக் கொள்வதற்கு எப்போதும் ஆயத்தமாகவே இருத்தல் வேண்டும்.

## குழு ஆய்விற்கான அறிவுறுத்தல்கள்

- உங்கள் குழுவிற்கு கிடைத்த செயலட்டை பற்றி அவதானத்தை செலுத்துங்கள்.
- செயலட்டையில் குறிப்பிட்டுள்ளதை உறுதி செய்து கொள்ளுங்கள்.

## செயலட்டை

1. சமாரியா பெண் எப்படிப்பட்டவள்?
2. கிறிஸ்துநாதர் அவளிடம் என்ன கேட்டார்?
3. அவள் தண்ணீர் கொடுப்பதற்கு மறுத்தது ஏன்?
4. கிறிஸ்துநாதர் அவளுக்கு என்ன கொடுப்பதாக வாக்குப்பண்ணினார்?
5. தண்ணீர் குடத்தை அவ்விடத்திலே விட்டுவிட்டு ஊருக்கு சென்று அவள் அறிவித்த நற்செய்தி என்ன?

* முழுக்குழுவும் முன்வைப்பதற்கு ஆயத்தம் செய்யுங்கள்.

**தேர்ச்சி 3.0** :- கிறிஸ்தவ வாழ்வை வளப்படுத்திக் கொள்வதற்கு திருவருட்சாதனங்களை பெற்றுக்கொள்வர்.

**தேர்ச்சி மட்டம் 3.4** :- கிறிஸ்துநாதர் காட்டிய பரிவிரக்கங்களை தமது வாழ்க்கையின் மூலம் வெளிக்காட்டுவர்.

**செயற்பாடு 3.4** :- விரும்பிய வரப்பிரசாதங்களை பெற்றுக்கொள்வதற்காக உள்ளத்தைத் திறந்திருப்போம்.

**நேரம்** :- 80 நிமிடங்கள்

**தர உள்ளீடு** :-
- புனிதலூக்கா 15:4-7 வரை எழுதியுள்ள பிரதி அட்டைகள் மூன்று
- டிமை கடதாசியும், மாக்கர்பேனையும்
- "நான் உன்னை ஒருநாளும் கைவிடுவதில்லை" பாடலை பாடியபடி பாடத்தில் பிரவேசித்தல்.

**கற்றல் கற்பித்தல் படிமுறைகள்**

**படிமுறை 3.4.1** :-
- வீட்டிலும் பாடசாலையிலும் தீமை செய்ததின் பிறகு கிடைத்த அனுபவங்களை வெளிப்படுத்துவதற்கு சந்தர்ப்பமொன்று பெற்றுக் கொடுப்பதில் பாடத்திலே பிரவேசத்தை பெற்றுக்கொள்ளுங்கள்.

> - எம்மால் தவறுகள் நடைபெறுகின்றது என்பதையும்
> - அந்தத்தவறை ஏற்றுக்கொள்ளல் என்பதையும்
> - தண்டனை பெற்றபோது அவற்றை தாங்கிக்கொள்ளல் அவசியம் என்பதையும்
> - தவறு செய்கின்றவர்களுக்கு பரிவிரக்கம் காட்டுதல் அவசியம் என்பதையும்
> - தவறு செய்கின்றவர்களை நல்வழிப்படுத்துவதற்கு நீர் செயற் படுதல் அவசியம் என்பதையும்

**படிமுறை 3.4.2** :-
- வகுப்பினை மூன்று சிறிய குழுக்களாகப் பிரியுங்கள்.
- குழுக்களின் ஆய்விற்காக டிமைன் கடதாசியும் மாக்கர் பேனையும் குழுக்களுக்கு பிரித்துக் கொடுங்கள்.
- பரிசுத்த வேதாகமத்தில் புனிதலூக்கா எழுதிய 15/ 4-7 வரை பிரதி அட்டைகள் 3

**படிமுறை 3.4.3** :-
- சிறிய குழுக்களின் செயன்முறைகளை வெளிப்படுத்துங்கள்.
- மற்றைய குழுக்களில் அபிவிருத்திக்காக ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
- கீழ் குறிப்பிட்டுள்ள கருத்தை அடிப்படையாகக் கொண்டு கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

| |
|---|
| • பாவங்களினால் இறைவனிடத்தில் இருந்து தூரவிலகுதல் என்பதும் |
| • அப்படி விலகிச் சென்றாலும் இறைவன் எங்களை கைவிடுவதில்லை என்பதையும் |
| • காணாமற்போன ஆடுகளைத்தேடிச் செல்வதைப் போல் இறைவன் எம்மைத் தேடி வருகிறார் என்பதையும் |
| • விரும்பிய வரப்பிரசாதங்களின் மூலம் நாம் மீண்டும் சக்தியுடையவர்களாக மாறுகின்றோம் என்பதையும் |
| • அந்த சக்தியினூடாக இறைவன் எங்களை அண்மிக்கிறார் என்பதையும் |
| • மீண்டும் இறைவனோடு பயணம் செய்கிறோம் என்பதையும் |

## கணிப்பீட்டு, மதிப்பீட்டு நியதிகள்

- பாவத்தினால் எங்களுக்கு உரிமையற்று போகின்றவைகளை ஒன்று சேர்ப்பர்.
- பாவத்தில் விழுந்தாலும் இறைவன் எங்களை கைவிடுவதில்லை என்பதை காணாமற்போன ஆட்டின் உவமையின் வாயிலாக எடுத்துக் காட்டுவர்.
- உறுதியான வரப்பிரசாதங்களினால் எங்கள் வாழ்க்கைக்கு கிடைக்கின்ற பயன்கள் இரண்டை எழுதிக் காட்டுவர்.
- உறுதியான வரப்பிரசாத வாழ்க்கைக்கு பாதகமானவற்றை நாம் தவிர்த்தல் அவசியம் என்பதை ஏற்றுக்கொள்வர்.

## குழு ஆய்விற்கான அறிவுறுத்தல்கள்

- உங்கள் குழுவிற்கு கிடைத்த பரிசுத்த வேதாகம வசனத்தைக் குறித்து அவதானத்தை செலுத்துங்கள்.
- அந்த வசனத்தில் காட்டுகின்ற கருத்துக்களை உறுதி செய்து கொள்ளுங்கள்.
- பாவத்தில் வீழ்ந்தாலும் இறைவன் எங்களை கைவிடுவதில்லை என்பதற்கு காணாமற்போன ஆட்டுக்குட்டியின் உவமையை முன்வையுங்கள்.
- உறுதியான வரப்பிரசாதங்களில் எங்கள் வாழ்க்கைக்கு கிடைக்கின்ற பயன்களை பெயரிடுவர்.
- மற்றைய குழுக்களுக்கு வெளிப்படுத்துவதற்கு ஆயத்தமாகுங்கள்.

**தேர்ச்சி 3.0** :- கிறிஸ்தவ வாழ்வை வளப்படுத்திக் கொள்வதற்கு திருவருட்சாதனங்களை பெற்றுக்கொள்வர்.

**தேர்ச்சி மட்டம் 3.5** :- முடிந்த எல்லாவேளையிலும் திருப்பலியில் பங்குகொண்டு திவ்விய நற்கருணை பெற்றுக்கொள்வர்.

**செயற்பாடு 3.5** :- ஆன்மீக வாழ்க்கையின் ஊட்டத்திற்காக திவ்விய நற்கருணையைப் பெற்றுக்கொள்வோம்..

**நேரம்** :- 80 நிமிடங்கள்

**தர உள்ளீடு** :-

- திவ்விய நற்கருணையை பெறுதலை காட்டுகின்ற பெரிய படமொன்று.
- விடுதலைப்பயணம் 16: 13-20
- புனிதயோவான் 6: 32 - 36 எழுதியுள்ள அட்டைகள் மூன்று பிரதிகள்
- டிமை கடதாசியும், மாக்கர்பேனையும்

**கற்றல் கற்பித்தல் படிமுறைகள்**

**படிமுறை 3.5.1** :-

- திவ்விய நற்கருணை பெறுவதைப் பற்றிய படங்களைக் காட்டிகொண்டு இனிமையான கலந்துரையாடலை ஆரம்பித்தல் பிள்ளைகளின் முதல் தடவையாக திவ்விய நற்கருணை பெறுவதை பற்றிய அனுபவங்களை கேட்டுக்கொண்டு பாடத்தின் பிரவேசத்தை பெற்றுக் கொள்ளுங்கள்.

- நீங்கள் அனைவருமே முதல் தடவையாக திவ்விய நற்கருணையை பெற்றுள்ளீர்கள் என்பதையும்
- உம்முடைய உடல் இறைவனுடைய தேவாலயம் என்பதையும்
- திவ்விய நற்கருணையை பெறுவதற்கு மிகுந்த ஆயத்தம் அவசியம் என்பதையும்
- திவ்விய நற்கருணையை பெற்றுக்கொள்ளாத போதும் பெறும்போதும் நாம் பக்தியோடு இருத்தல் அவசியம் என்பதையும்

**படிமுறை 3.5.2** :-

- வகுப்பினை 3 சிறிய குழுக்களாக பிரியுங்கள்.
- பரிசுத்த வேதாகமத்தின் வசன அட்டைகள்,
- டிமைக் கடதாசியும், மாக்கர் பேனை, செயலட்டைகளையும் பகிர்ந்து கொள்ளுங்கள்.

- சிறிய குழுக்களை செயற்பாடுகளில் ஈடுபடுத்துங்கள்.
- முழு குழுவிற்கும் வெளிப்படுத்துவதற்காக ஆயத்தமாகுங்கள்.

**படிமுறை 3.5.3** :-
- சிறிய குழுக்களின் திறமைகளை வெளிப்படுத்துங்கள்.
- மற்றைய குழுக்களின் மூலம் வளர்ச்சிக்காக ஆலோசனை பெற்றுக் கொள்ளுங்கள்.
- கீழுள்ள கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு கலந்துரையாடலில் இணையுங்கள்.

> - எங்களுடைய சரீர ஊட்டத்திற்காக உணவு அவசியம் என்பதையும்
> - எங்களின் ஆன்ம ஊட்டத்திற்காக திவ்விய நற்கருணை அவசியம் என்பதையும்
> - அதற்காக எப்போதும் தயாராயிருந்து திவ்விய நற்கருணையை பெற்றுக்கொள்வது அவசியம் என்பதையும்
> - அந்த ஊட்டம் இறைவனின் மூலமாகவே எமக்கு பெற்று கொடுக்கப் படுகின்றது என்பதையும்
> - திவ்விய நற்கருணையை பெற்ற பிள்ளையாகிய நீர், உமது நடைமுறை, செயன்முறைகளில் வேறுபட்டிருத்தல் அவசியம் என்பதையும்

## கணிப்பீட்டு, மதிப்பீட்டு நியதிகள்

- திவ்விய நற்கருணையை பெற்றுக்கொள்வதற்கு முன் ஆயத்தமாகின்ற முறைகள் பற்றிய கருத்துக்களை ஒன்று சேருங்கள்.
- ஆன்மீக ஊட்டம் இறைவன் மூலம் எங்களுக்கு கிடைக்கப் பெற்ற முறைகளை பைபிள் வசனத்திற்கேற்ப உருவாக்கிக் கொள்வர்.
- திவ்விய நற்கருணை பெற்ற பிள்ளையான உமது நடைமுறையும் செயன்முறையும் நல்லமுறையில் அமைவதற்கு அவசியமான முறைகளை நியமமாக சமர்ப்பிப்பார்.
- ஆன்ம ஊட்டத்திற்காக திவ்விய நற்கருணையை பெற்றுக்கொள்ளல் அவசியம் என்பதை ஏற்றுக்கொள்வர்.

## குழு ஆய்விற்கான அறிவுறுத்தல்கள்

- உமக்கு கிடைக்கப்பெற்றுள்ள பரிசுத்த வேதாகமம் தொடர்பில் அவதானத்தை செலுத்துங்கள்.
- அந்த வசனங்களில் அடங்கியுள்ள கருத்துக்களை உருவாக்கி கொள்ளுங்கள்.
- திவ்விய நற்கருணையை பெற்றுக் கொள்வதற்குமுன் ஆயத்தமாகக் கூடிய முறைகளைப் பற்றி கருத்துக்களை ஒன்று சேர்ப்பர்.
- திவ்விய நற்கருணையை பெற்ற பிள்ளையாக உமது நடவடிக்கையையும், செயற்பாடுகளையும் அமைத்துக் கொள்ளக்கூடிய முறைகள் பற்றிய கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்

**தேர்ச்சி 3.0** :- கிறிஸ்தவ வாழ்வை வளப்படுத்திக் கொள்வதற்கு திருவருட்சாதனங்களை பெற்றுக்கொள்வர்.

**தேர்ச்சி மட்டம்** :- திருப்பலி வேளையில் செபங்களை, பாடல்களை உரத்து உச்சரிப்பர்.

**செயற்பாடு 3.6** :- ஒழுங்காக திருப்பலியில் பங்கேற்போம்.

**நேரம்** :- 80 நிமிடங்கள்

**தர உள்ளீடு** :-
- திருப்பலி ஒழுங்குகள் புத்தகங்கள் 6 அல்லது கிறிஸ்தவ பாடல்கள் அடங்கிய 6 புத்தகங்கள்
- டிமை கடதாசி, மாக்கர்பேனை, செயலட்டைகள்

**கற்றல் கற்பித்தல் படிமுறைகள்**

**படிமுறை 3.6.1** :-
- பிறமதத்தினர் தமது வழிபாடுகளை செய்யும் முறை
- புத்த சமயத்தினர், சைவசமயத்தினர், இஸ்லாமியர் தத்தமது வழிபாட்டு தலங்களுக்குச் செல்ல முன் கடைப்பிடிக்கும் நடைமுறை களை பற்றி உரையாடியவாறு கலந்துரையாடலை ஆரம்பியுங்கள்.
- கீழே கொடுக்கப்பட்டுள்ள கருத்துக்கள் மேலோங்கும் வகையில் குழுக்கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

| |
|---|
| • வழிபாட்டுத்தலத்திற்குச் செல்லமுன் உடலாலும் உள்ளத்தாலும் தூய்மை பெறவேண்டும் என்பதையும் |
| • வழிபாட்டுத்தலைத்திற்குச் செல்லமுன் எமது நடவடிக்கைகளைப் போன்றே ஆடை அணிகளும் மரியாதையாக இருக்க வேண்டும் என்பதையும் |
| • வழிபாட்டு வேளைகளிலே பாடவேண்டிய பாடல்கள், செபங்கள், தியானங்களிலே முழுமையாக பங்கு கொள்ள வேண்டும் என்பதையும் |
| • திருப்பலியில் ஒழுங்குகளுக்கு முழுமையான பக்தியுடன் கலந்து கொள்ள வேண்டும் என்பதையும் |
| • கிறிஸ்துவின் வாழ்க்கைப் பலியில் பங்குகொள்ள நாமும் தியாக வாழ்வு வாழவேண்டும் என்பதையும் |

**படிமுறை 3.6.2** :-
- வகுப்பினை 3 குழுக்களாக பிரியுங்கள்.
- திருப்பலி ஒழுங்கு அல்லது கிறிஸ்தவ கீதங்கள் புத்தகங்களை மாணவரிடையே பகிர்ந்தளியுங்கள்.
- டிமை, கடதாசி, மாக்கர் பேனை ஆகியவற்றையும் பகிர்ந்தளியுங்கள்.
- சிறிய குழுக்களை செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.
- அனைத்து குழுக்களுக்கும் ஆக்கங்களை வெளிப்படுத்த ஆயத்தம் செய்யுங்கள்.

**படிமுறை 3.6.3** :-
- சிறிய குழுச் செயற்பாடுகளை வெளிப்பாடுகளை வெளிப்படுத்துங்கள்.
- ஏனைய குழுக்களிடமிருந்து வளர்ச்சிக்கான ஆலோசனைகளை பெற்றுக் கொள்ளுங்கள்.
- கீழே தரப்பட்டுள்ள கருத்துக்கள் மேலோங்கும் வகையில் கலந் துரையாடலில் ஈடுபடுங்கள்.

- திருப்பலி ஒழுங்கினை 4 பிரிவுகளாக பிரிக்கலாம் என்பதையும்
- அது முறையே தொடக்க வழிபாடு இறைவார்த்தை வழிபாடு, நற்கருணை நன்றி வழிபாடு விருந்துபசாரம் என்பதையும்
- திருப்பலியில் கலந்து கொள்வதற்கு முன் அதற்காக ஆயத்தமாக வேண்டும் என்பதையும்
- திருப்பலியில் உற்சாகத்துடன் கலந்துகொள்ள வேண்டும் என்பதையும்
- திருப்பலியினால் பெற்ற அருட்கொடைகளை தன் வாழ்விற்கு உகந்ததாக்கி கொள்ள வேண்டும் என்பதையும்
- திருப்பலியின் பின் ஒற்றுமையாக வாழவேண்டும் என்பது

## கணிப்பீட்டு, மதிப்பீட்டு நியதிகள்

- திருப்பலியின் 4 பிரிவுகளை பெயரிடுவர்.
- ஒவ்வொரு பகுதிக்கும் உரிய வழிபாடுகளையும் செயல்களையும் சேர்ப்பர்.
- ஒவ்வொரு பகுதிக்கும் உரிய செபங்கள் பாடல்களுக்கு உதாரணங்கள் அளிப்பர்.
- திருப்பலியில் உற்சாகத்துடன் கலந்துகொள்ள வேண்டுமென்பதை ஏற்பர்.
- திருப்பலியின் பின்னும் இணைந்து வாழ்வதற்கு நோக்கம் கொள்வர்.

## குழு ஆய்விற்கான அறிவுறுத்தல்கள்

- நீங்கள் பெற்றுள்ள திருப்பலி ஒழுங்குகளைப் பற்றி அவதானம் செலுத்துங்கள்.
- அவ் ஒழுங்குகள் மேலோங்கும் வகையில் செயற்படுங்கள்.
- அவ்வழிபாட்டில் உற்சாகத்துடன் பங்கு கொள்வதற்கான கருத்துக்களை ஒன்று சேருங்கள்.
- அவ்வழிபாட்டிற்கு ஏற்ற உரிய பாடல்களுக்கும் செபங்களுக்கும் உதாரணங்களை கொடுங்கள்.
- ஏனைய குழுக்களுளம் ஆக்கங்களை வெளிப்படுத்த ஆயத்தமாகுங்கள்.

**தேர்ச்சி 4.0** :- இறைவனின் பிள்ளையாக வளர்ச்சியடைவதற்கு செபத்தின் மூலம் வலுப்பெறுவர்.

**தேர்ச்சி மட்டம் 4.1** :- செபிக்க வேண்டியதன் தேவையை உணர்ந்து அடிக்கடி செபிப்பர்.

**செயற்பாடு 4.1** :- பிழையின்றி செபிப்பதற்குப் பழகிக் கொள்வோம்.

**நேரம்** :- 80 நிமிடங்கள்

**தர உள்ளீடு** :-
- கீர்த்தனை மாலை பற்றி எழுதியுள்ள போஸ்டர் ஒன்று
- செபம் ஒன்றில் அடங்கியுள்ள பகுதிகளை எழுதியுள்ள போஸ்டர் ஒன்று
- செபப் புத்தகம்
- டிமை கடதாசி, மாக்கர்பேனை

**கற்றல் கற்பித்தல் படிமுறைகள்**

**படிமுறை 4.1.1** :-
- செபத்தில் அடங்கியுள்ள பகுதிகளை எழுதியுள்ள போஸ்டரின் அடிப்படையில் கலந்துரையாடலில் ஈடுபடுதல்.
- கீழுள்ள கருத்துக்களில் மிகுந்த அவதானத்தைச் செலுத்தி அவற்றை உதாரணமாகக் கொண்டு பாடத்தை முன்வையுங்கள்.

> - செபம் இறைவனோடு செய்கின்ற ஆழ்ந்த கலந்துரையாடலாகும்.
> - செபத்திலே அடங்க வேண்டிய பிரதான பகுதிகள் உள்ளது என்பதையும்
> - துதித்தல், வணங்குதல், புகழ்பாடுதல், வேண்டுதல், பாவத்திற்காக வருந்துதல் போன்ற விடயங்கள் கட்டாயமாக இருத்தல் அவசியம் என்பதையும்
> - செபத்தின் போது அவற்றிற்கு நிறையத் தடைகள் உள்ளது என்பதையும்
> - இறைவனுடைய செபத்தை உச்சரிக்கும் போதும் கைகளை உயர்த்தும் போதும் சரியான செயல்களை பாவித்தல் அவசியம் என்பதையும்

**படிமுறை 4.1.2** :-
- வகுப்பினை 3 குழுக்களாக பிரியுங்கள்.
- குழு ஆய்விலே அவதானத்தைச் செலுத்தி குழுக்களை செயலிலே ஈடுபடுத்துங்கள்.
- அனைத்து குழுக்களும் ஆக்கங்களை வெளிப்படுத்த ஆயத்தம் செய்யுங்கள்.

**படிமுறை 4.1.3** :-
- சிறிய குழுக்களின் செயற்பாடுகளை வெளிப்படுத்துங்கள்.
- மற்றைய குழுவின் மூலம் விருத்தியடையக்கூடிய ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளுங்கள்.
- கீழுள்ள கருத்துக்களை உள்வாங்கிக் கொண்டு கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

| |
|---|
| • கீர்த்தனை மாலையில் மூலம் உள்ள பிரதான பகுதிகளை செயன் முறையில் செய்தல் அவசியம் என்பதையும் |
| • அந்த செபத்தின் பகுதிகளைத் தியானித்துக் கொண்டு பக்தியோடு சத்தமிட்டு உச்சரிக்கச் செய்தல் அவசியம் என்பதையும் |
| • காலை மாலையிலும் செபிக்கின்ற அனைத்து வேளைகளிலும் இறை அழைப்பிற்கு பிரதான இடத்தைக் கொடுத்தல் அவசியம் என்பதையும் |
| • இறைவனுக்கு மகிமை செலுத்துவது, அன்றாட வாழ்க்கையிலே முதலிடத்தைக் கொடுத்தல் அவசியமான செயல் என்பதையும் |

### கணிப்பீட்டு, மதிப்பீட்டு நியதிகள்

- கீர்த்தனை மாலையில் உள்ளடங்கியுள்ள பிரதான பகுதிகளைப் பெயரிடுவர்.
- கீர்த்தனைமாலை ஆராதனையை பக்தியோடு சத்தமிட்டு உச்சரித்தல் அவசியம் என்பதை ஏற்றுக்கொள்வர்.
- காலை, மாலை அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் செபத்தின் போது கீர்த்தனை ஆராதனைக்கு பிரதான இடத்தைக் கொடுப்பதற்கு மனதைச் செலுத்துவர்.
- கீர்த்தனை மாலையை தியானிப்பதனூடாக பக்தியோடு சத்தமாக செபிப்பர்.ள

### குழு ஆய்விற்கான அறிவுறுத்தல்கள்

- உமது குழுவிற்கு கிடைக்கப்பெற்றுள்ள கீர்த்தனமாலை எழுதப்பட்ட போஸ்டரில் அவதானத்தைச் செலுத்துங்கள்.
- அதில் உருவாகின்ற கருத்துக்களை ஒன்றுசேருங்கள்.
- செபத்தில் அடங்கியுள்ள பிரதான கருத்துக்களை வளர்த்துக் கொள்ளுங்கள்.
- கீர்த்தனை மாலையிலுள்ள பிரதான பகுதிகளை வெளிப்படுத்துங்கள்.
- கீர்த்தனை மாலையை சத்தமாய் உச்சரிக்கப் பழகிக் கொள்ளுங்கள்.

**தேர்ச்சி 4.0** :- இறைவனின் பிள்ளையாக வளர்ச்சியடைவதற்கு செபத்தின் மூலம் வலுப்பெறுவர்.

**தேர்ச்சி மட்டம் 4.2** :- வாழ்வின் அன்றாட செயற்பாடுகளின் போது செபத்திற்கு முதலிடத்தை கொடுப்பர்.

**செயற்பாடு 4.2** :- செபம் செய்ய வேண்டிய அவசியம், செய்ய வேண்டிய சந்தர்ப்பங்களைக் கண்டு கொள்வோம்.

**நேரம்** :- 80 நிமிடங்கள்

**தர உள்ளீடு** :-

- யாக்கோபு 5 : 15-18
  மத்தேயு 17 : 20-21
  மத்தேயு 26 : 41
- டிமை கடதாசி, மாக்கர்பேனை

**கற்றல் கற்பித்தல் படிமுறைகள்**

**படிமுறை 4.2.1** :-

- செபத்துடன் பாடத்தை ஆரம்பித்தல்
- செபத்துடன் நாளின் வேலைப்பாடுகளை ஆரம்பிப்பது பற்றி விசாரித்து கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.
- செபம் செய்யக்கூடியதும் செய்யக்கூடிய சந்தர்ப்பங்களையும் பற்றி அவதானத்தைச் செலுத்திக் கொண்டு கலந்துரையாடல் ஒன்றை நிகழ்த்துங்கள்.

- செபத்தோடு ஆரம்பிக்கின்ற வேலைகள் சாதகமாக உள்ளது என்பதையும்
- காலை, மாலை, நித்திரைக்கு முன்பும், பின்பும் சாப்பாட்டிற்கு முன்பும் பின்பும் செபித்தல் மிகவும் அத்தியாவசியமானது என்பதையும்
- வாழ்வினை சாதகமாக்கிக் கொள்வதற்கு செபித்தல் விசாலமான வல்லமையினை கொண்டுள்ளது என்பதையும்
- நோய் நொடிகளிலே, பிறருக்கு கருணை காட்டுதலில் வரப்பிரசாதங் களை கேட்டு செபம் செய்தல் பூரணமான செயற்பாடு என்பதையும்
- செபத்தின் போது முழு இதயத்தோடு இறைவனோடு உரையாடுதல் அவசியம் என்பதையும்

**படிமுறை 4.2.2** :-
- வகுப்பினை 3 குழுக்களாக பிரியுங்கள்.
- குழு ஆய்விற்காக டிமைக் கடதாசி, மாக்கர் பேனை பகிர்ந்து கொள்ளுங்கள்.
- விவிலிய வசன அட்டைகளைப் பகிர்ந்து கொடுங்கள்.
- சிறிய குழுக்களை செயலிலே ஈடுபடுத்துங்கள்.
- மற்றைய குழுக்களையும் வெளிப்படுத்துவதற்கு ஆயத்தம் செய்யுங்கள்.

**படிமுறை 4.2.3** :-
- சிறிய குழுக்களின் செயற்பாடுகளை வெளிப்படுத்துங்கள்.
- மற்றைய குழுவின் மூலம் விருத்தியடையக்கூடிய ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளுங்கள்.
- கீழுள்ள கருத்துக்களை உள்வாக்கிக் கொண்டு சாராம்சங்களில் ஈடுபடுங்கள்.

- விசேட சந்தர்ப்பங்களுக்காக வேறுபட்ட செபங்கள் உள்ளது என்பதையும் உ+ம் காலை ஆராதனை / இரவு ஆராதனை
- பிறருக்காக செபித்தல் நோயாளருக்காக செபித்தல், மரித்தவருக்காக செபித்தல் போன்றன நாம் செய்யக்கூடிய அப்போஸ்தலிக்க சேவை என்பதையும்
- சோதனைக்கு உட்படாமல் எப்போதும் செபித்தல் அவசியம் என்பதையும்
- நம்பிக்கையோடு செய்கின்ற செபத்திலே நோயாளிக்கு சுகம் கிடைக்கின்றது என்பதையும்
- நாம் அனைவரும் உற்சாகத்துடன் செபித்தல் அவசியம் என்பதையும்

**கணிப்பீட்டு, மதிப்பீட்டு நியதிகள்**

- விசேச சந்தர்ப்பங்களுக்காக செபிக்கக்கூடிய செபங்களை ஒன்று சேர்ப்பர்.
- செய்யக்கூடிய அப்போஸ்தலிக்க சேவைகளுக்கு முன்னுரிமை ஏற்படுத்துவர்.
- நோயாளிக்கு சுகம் கிடைக்கும் பொருட்டு நீர் செபிக்கக்கூடிய முறைகளை எழுதிக் காட்டுவர்.
- சோதனைக்கு உட்படாது எப்போதும் செபிக்கக்கூடியது அவசியம் என்பதை ஏற்றுக் கொள்வர்.
- செபத்தினை அன்றாட வாழ்விலே தொடர்புபடுத்திக் கொள்வர்.

## குழு ஆய்விற்கான அறிவுறுத்தல்கள்

- தமது குழுவிற்குக் கிடைத்த விவிலிய வசனத்தைக் குறித்து அவதானத்தைச் செலுத்துங்கள்.
- அந்த வசனங்களில் காட்டுகின்ற கருத்துக்களை உறுதி செய்து கொள்ளுங்கள்.
- அப்போஸ்தலிக்க சேவைகளுக்குக் கருத்துக்களை ஒன்று சேர்ப்பர்.
- செபத்தினை அன்றாட வாழ்க்கையிலே தொடர்புபடுத்தி கொள்ளக்கூடிய முறைகளை விவரியுங்கள்.
- மற்றைய குழுக்களும்ம் செயற்படுவதற்கு ஆயத்தமாகுங்கள்

**தேர்ச்சி 4.0** :- இறைவனின் பிள்ளையாக வளர்ச்சியடைவதற்கு செபத்தின் மூலம் வலுப்பெறுவர்.

**தேர்ச்சி மட்டம் 4.3** :- அடிக்கடி இறைவனுக்கு செய்கின்ற செபத்தில் நாளை ஆரம்பிப்பர்.

**செயற்பாடு 4.3** :- ஒரு மனநிலையோடு இறைவனிடம் ஒன்றுபடுவோம்.

**நேரம்** :- 80 நிமிடங்கள்

**தர உள்ளீடு** :-
- தி. பணி 12: 4-11 வரை எழுதியுள்ள செயலட்டை மூன்று
- டிமை கடதாசி, மாக்கர்பேனை

**கற்றல் கற்பித்தல் படிமுறைகள்**

**படிமுறை 4.3.1** :-
- "ஒன்றாக செபிக்கும் குடும்பம் ஒற்றுமையான குடும்பமாகும்" என்னும் வசனத்தை கரும்பலகையில் காட்சிப்படுத்தி மாணவர்களிடையே கலந்துரையாடலை ஆரம்பித்தல் அதன் மூலம் கலந்துரையாடலில் ஈடுபடுங்கள். சக்தியைப் பெற்றுக் கொண்ட சந்தர்ப்பங்களை வாழ்க்கையில் கண்டுணர்ந்துள்ளதை விசாரித்து, செபத்தின் வலிமை யினை கீழுள்ள கருத்துக்களில் அவதானத்தைச் செலுத்துங்கள்.

- குடும்ப செபமாலையை தினந்தோறும் செபித்தல் அவசியம் என்பதையும்
- வாழ்வில் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் செபித்தல் இறைவனுக்கு அர்ப்பணிக்கும் செயல் என்பதையும்
- வாழ்வின் பல இடையூறுகளையும் வெற்றி கொள்வதற்கு செபத்தின் மூலம் வலிமை கிடைக்கின்றது என்பதையும்
- செபத்தின் மூலம் வாழ்வை வெற்றி கொண்டோர் நிறைய பேர் என்பதையும்

**படிமுறை 4.3.2** :-
- மாணவர்களை 3 குழுக்களாக பிரியுங்கள்.
- குழு ஆய்விலே அவதானத்தை செலுத்திக் கொண்டு குழுக்களை செயலிலே ஈடுபடுத்துங்கள்.
- முழு குழுவையும் காண்பிப்பதற்கு தயார் செய்யுங்கள்.
- சிறிய குழுவின் செயன்முறைகளை காண்பியுங்கள்.
- மற்றைய குழுக்களிடம் வளர்ச்சிக்குரிய ஆலோசனை பெற்றுக் கொள்ளுங்கள்.
- கீழுள்ள கருத்துக்களை உருவாக்கி கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

- செபத்திலே மிகுந்த வல்லமை உண்டாகின்றது என்பதையும்
- குடும்ப செபமாலையினை தினந்தோறும் உச்சரித்தல் அவசியம் என்பதையும்
- செபத்தினால் அனைத்து தேவைகளையும் வெற்றிகொள்ள முடியும் என்பதையும்
- எந்நேரமும் ஒருநிலையில் செபித்தல் அவசியம் என்பதையும்
- பாடசாலையிலே, வீட்டிலே செபம் செய்வதற்கு பழகி கொள்ளுதல் அவசியம் என்பதையும்
- ஒரு சபையாக இறைவனிடம் கேட்கின்ற நலன்களை எமக்கு பெற்றுக் கொடுக்கின்றார் என்பதையும்

## கணிப்பீட்டு, மதிப்பீட்டு நியதிகள்

- செபமானது வாழ்விலே மிகுந்த வலியுடையது என்பதை ஏற்றுக்கொள்வர்.
- குடும்பமாக செபிக்கக்கூடிய சந்தர்ப்பங்களை உருவாக்கி கொள்வர்.
- செபத்தினால் நீர் வெற்றி கொண்ட தேவைகள் சிலதை எழுதுவர்.
- எமது அனைத்து காரியங்களும் செபத்தின் மூலம் ஆரம்பித்தல் அவசியமானது என்பதை ஏற்றுக்கொள்வர்.

## குழு ஆய்விற்கான அறிவுறுத்தல்கள்

- உமது குழுவிற்குக் கிடைத்த வசனத்தை பொறுத்து அவதானத்தைச் செலுத்துங்கள்.
- அந்த வசனங்களில் வெளிப்படுகின்ற கருத்துக்களை உறுதி செய்துகொள்ளுங்கள்.
- செபத்தினால் தேவைகளை வெற்றி கொண்ட சந்தர்ப்பங்களை பெயரிடுக.
- குடும்ப செபமாலையினை எப்போதும் சொல்லுதல் அவசியம் என்பதை ஏற்றுக்கொள்வர்.
- பாடசாலையிலும், வீட்டிலும் எப்போதும் செபத்திலே ஈடுபடுவர்.

**தேர்ச்சி 4.0** :- இறைவனின் பிள்ளையாக வளர்ச்சியடைவதற்கு செபத்தின் மூலம் வலுப்பெறுவர்.

**தேர்ச்சி மட்டம் 4.4** :- பாடசாலையிலே சமயம் சார்ந்த சூழலை உருவாக்கிக் கொள்வதற்கு உதவுவர்.

**செயற்பாடு 4.4** :- ஒற்றுமையாக செபம் செய்வதற்கு ஒத்துழைப்பு கொடுப்போம்.

**நேரம்** :- 80 நிமிடங்கள்

**தர உள்ளீடு** :-
- செபிப்பதனை காட்டுகின்ற படம் ஒன்று
- செபத்திலே அடங்கியுள்ள பண்புகளைக் காட்டுகின்ற அட்டைகள் 3
- டிமை கடதாசி, மாக்கர்பேனை

**கற்றல் கற்பித்தல் படிமுறைகள்**

**படிமுறை 4.4.1** :-
- செபத்தில் பங்குகொள்ளுகின்ற நீர் முன்பு பெற்றுள்ள அனுபவங்களையும் முன்பு பெற்ற அறிவுரைகளையும் கேட்டறிதல்.
- பாடசாலையின் செபத்திலும் விசேடமான காலங்களிலே செய்யும் செபத்திலும் வீட்டிலே செய்யும் செபத்தினையும் பற்றி விசாரித்தல் உதாரணமாக; மேமாத ஆராதனை, கிறிஸ்தவ குடும்ப ஒன்றிப்பு செபம், அசிபா தொடர்பான அனுபவங்களைக் கேட்டறிதல் ஒவ்வொரு செபத்திலும் செய்கின்ற காரியங்களையும் கரும் பலகையில் அட்டவணைப்படுத்துங்கள்.
- கீழேயுள்ள கருத்துக்களை மனதில் வைத்துக் கொண்டு செபமொன்றை தயார் செய்வதற்கு கலந்துரையாடலில் ஈடுபடுதல்.

> - செபத்திற்கு விசேட ஆயத்தமொன்று இருத்தல் அவசியம் என்பதையும்
> - தேவையான பொருட்கள் / கருவிகள் பற்றிய அட்டவணை ஒன்று தயாரித்தல் அவசியம் என்பதையும்
> - செய்ய வேண்டிய செயல்களை ஏற்றுக்கொள்ளல் அவசியம் என்பதையும்
> - தேர்ந்தெடுத்த குழுவிற்கும் / உறுப்பினருக்கும் அந்தந்த காரியங்களை தேர்ந்தெடுத்துக் கொள்ளல் அவசியம் என்பதையும்
> - அவர்களுக்கு செயல்களை ஒப்படைத்தல் அவசியம் என்பதையும்
> - அந்தந்த செயல்களுக்காக முன் ஆயத்தம் அவசியம் என்பதையும்

**படிமுறை 4.4.2** :-
- மாணவர்களை 3 குழுக்களாக பிரியுங்கள்.
- செய்யக்கூடிய செயற்பாடுகளைக் காட்டுகின்ற உமது குழுவிற்குக் கிடைத்த அட்டைகளில் அவதானத்தை செலுத்துங்கள்.
- குழு கலந்துரையாடல் மூலம் செபமொன்றை தயாரபடுத்துங்கள்.
- முழுக் குழுவும் செயற்படுத்துவதற்குத் தயார் செய்யுங்கள்.

**படிமுறை 4.4.3** :-
- குழுவினை ஆயத்தம் செய்யக்கூடிய செபமொன்றை முன்வையுங்கள்.
- மற்றைய குழுவின் மூலம் விருத்தியடையக்கூடிய ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளுங்கள்.
- கீழுள்ள கருத்துக்களை உருவாக்கிக் கொண்டு கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

- செபத்திற்கு முன் முன்னுரை இருத்தல் அவசியம் என்பதையும்
- அந்த முன்னுரைக்கேற்ப செயல்களை திட்டமிடல் அவசியம் என்பதையும்
- பொருத்தமான பாடலைப் பாடுவதற்காக விவிலியத்திற்கு பொருத்த மான வசனங்களை தெரிந்தெடுத்தல் அவசியம் என்பதையும்
- வாசகம், பிரார்த்தனை, செபம் என்பவற்றைப் பிழையின்றி சொல்வதற்கு ஒழுங்குகளை தாளத்திற்கேற்ப பழகிக் கொள்ளுதல் அவசியம் என்பதையும்
- எந்தவொரு செபமும் பக்தியானது என்பதையும்
- அவ்வாறான செபத்தினால் கிறிஸ்தவ அருமையினை மேலும் விருத்தி செய்துகொள்ள முடியும் என்பதையும்
- முடிந்த எல்லா நேரங்களிலும் இவ்வாறான செபங்களில் பங்கு கொள்ளுதல் எமது கடமை என்பதையும்

**கணிப்பீட்டு, மதிப்பீட்டு நியதிகள்**

- சந்தர்ப்பங்களுக்கேற்ப செபமொன்றிற்காக முன்னுரையை ஒழுங்குபடுத்துவர்.
- முன்னுரைக்கேற்ப பாடல், பிரார்த்தனையும், விவிலிய வசனத்தையும் வெளிப்படுத்துவர்.
- எந்த ஒரு செபமும் பக்தி முயற்சியினை ஏற்படுத்துகின்ற முறைகள் பற்றிய தகவல்களை ஒன்று சேர்ப்பர்.
- செபவழிபாடுகளில் பங்குபற்றுவதால் கிறிஸ்தவ மதிப்பினை விருத்தி செய்து கொள்ள முடியும் என்பதை ஏற்றுக்கொள்வர்.

## குழு ஆய்விற்கான அறிவுறுத்தல்கள்

- உமக்குக் கிடைக்கப்பெற்ற செயலட்டைகளில் அவதானத்தைச் செலுத்துங்கள்.
- செபத்திற்கான பொருத்தமுள்ள முன்னுரையை தெரிந்தெடுங்கள்.
- அதற்கேற்ப பாடல், திருவிவிலிய வசனம், பிரார்த்தனை என்பவற்றை உள்ளடக்கிக் கொண்டு ஒழுங்கு செய்யுங்கள்.
- அதற்கேற்ப அங்கத்தவர்களுக்கு அந்தந்த செயற்பாடுகளை ஒப்படையுங்கள்.
- முழு குழுவும் செயற்படுவதற்கு ஆயத்தம் செய்யுங்கள்.
- பொருத்தமான சந்தர்ப்பமொன்றை தெரிந்து கொண்டு உமது செபத்தினை முன்வையுங்கள்.

**தேர்ச்சி 4.0** :- இறைவனின் பிள்ளையாக வளர்ச்சியடைவதற்கு செபத்தின் மூலம் வலுப்பெறுவர்.

**தேர்ச்சி மட்டம் 4.5** :- அன்றாடம் சொல்கின்ற பொதுச் செபங்களை மனனஞ் செய்வர்.

**செயற்பாடு 4.5** :- பொதுச் செபங்களை கற்றுக் கொள்வோம்.

**நேரம்** :- 80 நிமிடங்கள்

**தர உள்ளீடு** :-
- மோட்ச பாதை
- சிறுவர் செபத்புத்தகம்
- புனிதர்களின் கதைப்புத்தகம்
- ஒளிர்கின்ற நட்சத்திர செயலட்டைகள்
- டிமை கடதாசி, மாக்கர்பேனை

**கற்றல் கற்பித்தல் படிமுறைகள்**

**படிமுறை 4.5.1** :-
- "அருள் நிறை மரியே" என்ற பாடலைப் பாடியபடி பாடத்தை ஆரம்பித்தல்.
- பொதுச் செபங்கள் பற்றிக் கேட்டறிந்து கரும்பலகையில் அந்த செபத்தினை எழுதச் செய்தல்.
- கீழேயுள்ள கருத்துக்களை மனதில் வைத்துக் கொண்டு செபமொன்றை தயார் செய்வதற்கு கலந்துரையாடலில் ஈடுபடுதல்.

- பக்தியுடனும் பிழையின்றியும் ஒழுங்குமுறையிலே செபித்தல் அவசியம் என்பதையும்
- குறிப்பிட்ட இடங்களிலே அடையாளங்களைக் கைக்கொண்டு வார்த்தைகளைப் பிழையின்றி கூறுதல் அவசியம் என்பதையும்
- பொது செபங்களைச் சத்தமிட்டுக் கூறுதல் அவசியம் என்பதையும்
- பொது செபங்களை நினைவில் வைத்துக் கொள்வதினால் அவசியமான எல்லா சந்தர்ப்பங்களிலும் பயன்படுத்தி கொள்ள முடியும் என்பதையும்
- பொதுச் செபங்களை கொண்டுள்ள ஆக்கத்தைப் பாவிக்க முடியும் என்பதையும்

**படிமுறை 4.5.2** :- • மாணவர்களை 3 குழுக்களாக பிரியுங்கள்.

• மோட்ச பாதை, சிறுவர் செபக் கொத்து என்பவற்றில் இருந்து கீழுள்ள செபத்தினை பிழையின்றி தேடி எழுதுவதற்கு அறிவுறுத்தல் கொடுங்கள்.

1. கர்த்தர் கற்பித்த செபம்
2. அருள் நிறை மரியே செபம்
3. காலை ஆராதனை
4. இரவு ஆராதனை
5. பாவ சங்கீர்த்தன செபம்
6. மூவேளைச் செபம்

**படிமுறை 4.5.3** :- • சிறிய குழுக்களின் செயன்முறைகளை வெளிப்படுத்துங்கள்.

• வகுப்பிலே அனைவர் முன்னிலையிலும் பிழையின்றி கூறுவதற்கு சந்தர்ப்பத்தைப் பெற்றுக் கொடுங்கள்.

• செபமாலை சொல்லும் போது மனஸ்தாப செபத்தினை கூறுவது மிகவும் பொருத்தமானது என்பதையும்
• தினந்தோறும் காலை 5.30, பகல் 12, மாலை 6.30 நேரங்களில் மூவேளை ஆராதனையை சொல்லுதல் என்பதையும்
• இந்த அனைத்து செபங்களையும் ஞாபகத்தில் கொண்டிருப்பது மிகவும் பயனுறும் என்பதையும்

## கணிப்பீட்டு, மதிப்பீட்டு நியதிகள்

- தினந்தோறும் செபத்தின் போது இணைக்கக்கூடிய பொது செபங்கள் 3ஐ பெயரிடுக.
- நாளை ஒப்புக் கொடுத்தலும், நன்றி கூறுதலும் காலை / மாலை செய்யக்கூடிய செபங்கள் இரண்டினை எடுத்துக் காட்டுவர்.
- "மூவேளை ஆராதனை" செபத்தினை சொல்லுகின்ற சந்தர்ப்பங்கள் மூன்றை பெயரிடுவர்.
- இந்த செபத்தினை ஞாபகத்தில் கொள்ளுவது வாழ்க்கைக்கு பயனுள்ளது என்பதை ஏற்றுக்கொள்வர்.

## குழு ஆய்விற்கான அறிவுறுத்தல்கள்

- உமக்குக் கிடைக்கப்பெற்ற செயலட்டைகளில் அவதானத்தைச் செலுத்துங்கள்.
- அதற்கேற்ப உமக்குக் கிடைத்த செபத்தினை பிழையின்றி எழுதுக.
- பிழையின்றி ஒழுங்குபடுத்திக் கொண்டு செபத்தினை சொல்வதற்கு பழகிக் கொள்ளுங்கள்.
- மற்றைய குழுவிற்கும் வெளிப்படுத்துவதற்கு தயாராகுங்கள்.

**தேர்ச்சி 4.0** :- இறைவனின் பிள்ளையாக வளர்ச்சியடைவதற்கு செபத்தின் மூலம் வலுப்பெறுவர்.

**தேர்ச்சி மட்டம் 4.6** :- ஆழ்ந்த தியானத்தின் மூலம் மன ஒன்றிப்பைப் பெறுவர்.

**செயற்பாடு 4.6** :- செபத்திற்கான உரிய முறைகளை உணர்வோம்.

**நேரம்** :- 80 நிமிடங்கள்

**தர உள்ளீடு** :-
- "கிறிஸ்தவ கீதங்கள்", புத்தகம்
- சிறுவர் செபப்புத்தகம்
- ஒலிப்பதிவு நாடாக்கள்
- செயலட்டைகள்
- டிமை கடதாசி, மாக்கர்பேனை

**கற்றல் கற்பித்தல் படிமுறைகள்**

**படிமுறை 4.6.1** :-
- மன ஒன்றிப்பிற்கான செயற்பாட்டுடன் பாடத்தை ஆரம்பிக்கவும்.
- சிறு தியானத்துடன் பாடத்திற்கு ஆயத்தமாகுக.
- தியானத்தின் இறுதியில் 'பரலோகத்தில் இருக்கின்ற ...' எனும் பாடலைப் பாடுதல்.
- சிறு தியானங்கள், செப வழிபாடுகள் பற்றிய முன் அனுபவங்களை வினவுதல்.
- கீழே கொடுக்கப்பட்டுள்ள கருத்துக்களில் அவதானத்தைச் செலுத்தி கலந்துரையாடலை நடாத்தவும்.

> - செபத்திற்கு முன் மனதை ஒருநிலைப்படுத்தித் தியானித்தல் உகந்தது என்றும்
> - 'பாடுதல்' இருமுறை செபிப்பதற்கு சமம் என புனித ஆகஸ்தீன் கூறியுள்ளார் என்பதையும்
> - செபத்திற்காக உரிய முறைகளை உபயோகிப்பது நல்லதொரு செபத்திற்கு உகந்தது என்பதையும்
> - தினந்தோறும் செபத்திற்குப் பாடல்களைச் சேர்த்துக் கொள்வதற்கு பழக வேண்டும் என்பதையும்
> - இறைவனைப் புகழ்வதற்கு அனைவரும் பாடலில் கலந்து கொள்ள வேண்டும் என்பதையும்
> - செப ஒழுங்கு செய்யவும், நிர்மாணிக்கவும் பாடல்களை எழுதவும் தாவீது அரசனைப் போன்று எம் திறமைகளை ஈடுபடுத்த வேண்டும் என்பதையும்

**படிமுறை 4.6.2** :-
- மாணவர்களை 3 குழுக்களாக பிரியுங்கள். குழுக்களுக்கேற்ப;
  1. மாலை ஆராதனை
  2. தியானம்
  3. பாடசாலைத் தினத்திற்கான செபவழிபாடு ஒழுங்கு செய்ய ஆலோசனை வழங்கவும்.

**படிமுறை 4.6.3** :-
- குழுச் செயற்பாடுகளை வெளிப்படுத்துங்கள்.
- ஏனைய குழுக்களிடமிருந்து விருத்தியடையக்கூடிய ஆலோசனையைப் பெற்றுக் கொடுங்கள்.
- கீழுள்ள கருத்துக்களை வெளிக்கொணரும் வகையில் கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

- செப வழிபாடு ஒழுங்கு செய்வதற்கான உரிய முறைகளை பயன் படுத்த வேண்டும் என்பதையும்
- அது பல செயற்பாடுகளுடன் செபம், பாடல், தியானம் ஆகியவற்றின் ஒன்றிணைப்புடன் அர்த்தமுள்ளதாக ஒழுங்கு செய்ய வேண்டும் என்பதையும்
- கீழ்ப்படிவுடன் பக்தியுடன் செபிப்பது இறைவனிடம் மென்மேலும் நெருங்கும் வழி என்பதையும்
- வீட்டிலும் பாடசாலையிலும் செபவழிபாடு ஒழுங்கு செய்வதற்கும் அவற்றில் பங்குபற்றவும் முன்வர வேண்டும் என்பதையும்

### கணிப்பீட்டு, மதிப்பீட்டு நியதிகள்

- இறைவனுடன் ஒன்றிணைய உள்ள பல செப வழிபாடுகளுக்கு உதாரணங்கள் அளிப்பர்.
- செப வழிபாடுகளின் போது செய்ய வேண்டிய செயற்பாடுகளை (கை கூப்புதல் போன்ற) ஒன்றிணைப்பர்.
- உரிய வேதாகம வசனங்களை, பாடங்களைத் தெரிவு செய்வர்.
- செப வழிபாட்டின் போது, இறைவனுக்கு மேலும் நெருங்கக்கூடிய வழிகளைப் பெயரிடுவர்.
- செப வழிபாட்டிற்கு உற்சாகத்துடன் பங்கேற்பதனால் அவற்றை ஒழுங்கமைக்கும் திறனை பெறுவர்.

### குழு ஆய்விற்கான அறிவுறுத்தல்கள்

- உமக்குக் கிடைக்கப்பெற்ற செயலட்டைகளில் அவதானத்தைச் செலுத்துங்கள்.
- அதற்கேற்ப உமக்குக் கிடைத்த செப வழிபாடு பற்றி சேர்ந்து கலந்துரையாடுங்கள்
- அதற்குரிய பாடல்கள், வேதாகம வசனம், செபங்கள் ஆகியவற்றை தேர்ந்தெடுங்கள்
- செய்ய வேண்டிய செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துங்கள்.
- செப வழிபாடு ஒன்று நடாத்துங்கள்.

# 6.3.0 கணிப்பீடும் மதிப்பீடும்

## 6.3.1 கணிப்பீடும் மதிப்பீடும்

கற்றல் - கற்பித்தற் செய்கையின்மூலம் எதிர்பார்க்கப்படும் கற்றற் பேறுகளைத் தெளிவாகப் பெற்றுக் கொள்வதற்கும், மாணவர்கள் எதிர்பார்க்கப்படும் தேர்ச்சி மட்டத்தைப் பெற்றுக்கொள்வதற்குமாக, வகுப்பறையில் இலகுவாகச் செயற்படுத்த முடியுமான, ஒன்றுக்கொன்று தொடர்புபட்ட இரண்டு வேலைத்திட்டங்களாகக் கணிப்பீட்டையும், மதிப்பீட்டையும் கருதலாம். கணிப்பீடு சரியான முறையில் நடைபெறுமெனின், வகுப்பில் கற்கும் ஒவ்வொரு பிள்ளையும் உரிய தேர்ச்சியின் (நிபுணத்துவத்தின்) அண்மிய மட்டத்தையாவது பெற்றுக்கொள்வது கடினமல்ல. மதிப்பீட்டின் மூலம் எதிர்பார்க்கப்படுவது பிள்ளைகள் பெற்றுக்கொண்ட தேர்ச்சி எம்மட்டத்தில் காணப்படுகிறது என்பதைக் கண்டு கொள்வதாகும்.

கணிப்பீட்டைச் செயற்படுத்தும் போது ஆசிரியர்கள் மாணவர்களுக்கு இரண்டு விதமாக வழிகாட்டல்களை வழங்கலாம். இவ்வழிகாட்டல்கள் இரண்டும் பொதுவாகப் பின்னூட்டல் (Feed Back), முன்னோக்கிய ஊட்டல் (Feed Forword) என அழைக்கப்படுகின்றன. மாணவர்களின் பலவீனம், இயலாமை என என்பவற்றை இனங்கண்டு கொண்டபின், அவர்களிடம் காணப்படும் கற்றல் தொடர்பான பிரச்சினைகளை நீக்கிக் கொள்வதற்கு பின்னூட்டலையும், மாணவர்களின் பலம், இயலுமை என்பவற்றை இனங்கண்டு கொண்டபின் அவற்றை மேலும் விருத்தி செய்து கொள்வதற்கு முன்னோக்கிய ஊட்டலையும் வழங்குவது ஆசிரியரின் கடமையோடு சார்ந்த பொறுப்பாகும்.

கற்றல் - கற்பித்தல் செய்கையின் வெற்றி பாடத்திட்டத்திலுள்ள தேர்ச்சிகளில் எத்தேர்ச்சிகளை மாணவர்கள் எந்தமட்டத்தில் அடைந்துள்ளனர் என்பதை அறிவதன் மூலம் இனங்காணப்படுகின்றது. கற்றல் - கற்பித்தல் செய்கையின் போது மாணவர்கள் அடைந்த தேர்ச்சி மட்டங்களை அளவிடுவது எதிர்பார்க்கப்படுவதோடு, அடைந்த தேர்ச்சி மட்டங்கள் பற்றிய விபரங்களை பெற்றோர் உள்ளிட்ட மற்றும் உரிய நபர்களுக்கும் தொடர்பாடல் செய்வது ஆசிரியரின் பொறுப்பாகும்.

உங்களிடம் முன்வைக்கப்பட்டுள்ள இப்பாடத்திட்டம் மாணவர் மையமான (Student Centered), தேர்ச்சி மட்ட (Competency - Based), செயற்பாடு சார்ந்த (Activity - Oriented) பிரவேசத்தைக் கொண்டது. வாழ்வைக் கருத்துள்ளதாக்கிக் கொள்வதற்கு, செயற்பாட்டினூடாகக் கற்றல் என்பது ஆசிரியரின் உருமாற்றப் பங்களிப்பில் காணப்படும் பிரதான அம்சமாகும்.

ஏற்கனவே தயாரிக்கப்பட்ட செயற்பாடுகளின் தொடரகத்தின் ஊடாகச் செயற்படுத்தப்படும் இப்பாடத்திட்டமானது, கற்றல் - கற்பித்தலை கணிப்பீடு - மதிப்பீடு என்பவற்றோடு ஒன்றிணைப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு செயற்பாட்டிலும் அதன் இரண்டாம் படியில் மாணவர்கள், குழுவாக ஆய்வில் ஈடுபடும் போது அவர்களைக் கணிப்பீடு செய்வதற்கும் செயற்பாட்டின் மூன்றாம் படியில் மாணவர்கள் தமது கண்டுபிடிப்புக்கள், முடிவுகள் என்பவற்றைச் சமர்ப்பிக்கும் போது மாணவர்களை மதிப்பீடு செய்வதற்கும் ஆசிரியருக்கு முடியுமாகின்றது. மாணவர்கள் குழுவாக ஆய்வில் ஈடுபட்டிருக்கும் போது அவர்களினூடே சென்று அவர்களது வேலைகளை அவதானிப்பதன் மூலம், மாணவர்கள் முகங்கொடுக்கும் பிரசினைகளை வகுப்பறையில் தீர்ப்பதற்குரிய வசதிகளையும், வழிகாட்டல்களையும் வழங்குவது ஆசிரியரிடம் எதிர்பார்க்கப்படுகின்றது.

கணிப்பீடு, மதிப்பீடு என்பற்றை இலகுவாகச் செய்து கொள்வதற்கு ஐந்து பொது நியதிகள் முன்வைக்கப்படுகின்றன. இந்நியதிகளில் முதன் மூன்று நியதிகளும் உரிய தேர்ச்சி மட்டத்தோடு தொடர்பான அறிவு, மனப்பாங்கு, திறன்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டதாகவும், அடுத்த இரண்டு நியதிகளும் வாழ்க்கைக்குத் தேவைப்படும் முக்கியமான இரண்டு திறன்களை விருத்தி செய்து கொள்வதற்கானதாகவும் இருத்தல் வேண்டும். இந்த ஐந்து நியதிகளுடன் இணைந்ததான நடத்தை மாற்றங்கள் வகுப்பறையில் மாணவர்களிடம் காணப்படுகின்றதா என்பதைக் கண்டுகொள்வதற்கு ஆசிரியர் முயற்சி எடுக்க வேண்டியதோடு கணிப்பீட்டின் மூலம் கண்டு கொள்ளப்படும் மாணவர்கள் பெற்றுள்ள இத்திறன்களின் அளவை மதிப்பீட்டின் மூலம் ஆசிரியர் அளந்து கொள்ள வேண்டும்.

கணிப்பீடு தொடர்பான வேலைத்திட்டங்களை அபிவிருத்தி செய்து கொள்வதன் மூலம் கற்றல் - கற்பித்தற் செய்கையை விரிவுபடுத்திக் கொள்ளலாம். இதற்காக முதலில் செயற்பாட்டுத் தொடரகத்தில் வழங்கப்பட்டுள்ள செயற்பாடுகளை கணிப்பீட்டு வகைகளை அடிப்படையாகக் கொண்டதான தொகுதிகளாக வேறாக்கிக் கொள்ள வேண்டும்.

மாணவர்களின் கற்றலை மலரச் செய்யக்கூடியதாக, உரிய பாடவிடயத்துடன் தொடர்பான செயற்பாட்டைத் தெரிவு செய்தபின் இனி, உரிய கற்றல் - கற்பித்தல், செய்கைக்கான சாதனங்களைத் தயாரித்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு செயற்பாட்டின் ஆரம்பத்திலும் உரிய உபகரணங்களைக் குழுக்களுக்கு வழங்க வேண்டும். கற்றல் - கற்பித்தல் செய்கையை விரிவாக்கும் போது அவை அமையக்கூடிய வகைகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

- எண்ணக்கருப்படம் (Concept Maps)
- சுவர்ச் செய்தித்தாள் (Wall News Papers)
- புதிர்ப்போட்டி (Quizzes)
- வினாவிடைப் புத்தகம் (Question and Answer Books)
- மாணவர் செயற்பாட்டுக் கோவை (Portfolios)
- கண்காட்சி (Exhibitions)
- விவாதம் (Debates)
- குழுக் கலந்துரையாடல் (Panel Discussion)
- கருத்தரங்கு (Seminars)
- சமயோசிதப் பேச்சு (Impromptu Speeches)
- நாடகப் பாத்திரம் (Role Plays)
- இலக்கியக் கருத்துக்களையும், விமர்சனங்களையும் முன்வைத்தல் ( Presentation of Literature Reviews)
- வெளிக்களப் புத்தகம் / தினக் குறிப்புப் புத்தகம் / வேலைப் புத்தகம் (Field / Nature Diaries)
- செய்முறைச் சோதனை (Practial Tests)

பாட வழிகாட்டியின் மூன்றாம் பகுதி, உத்தேச கற்றல் - கற்பித்தற் செய்கைகளை விரிவாக்கும் வகைகளைக் கொண்டே செயற்பாடுகளையும் அதற்கான - கற்பித்தல் சாதனங்களையும் அறிமுகஞ் செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறான செயற்பாடுகளினுள் கணிப்பீடும், அதனோடு தொடர்பான மதிப்பீடும் இணைக்கப்பட்டுள்ளதால் கற்றல் - கற்பித்தற் செய்கை மேலும் விரிவாக்கப் பட்டுள்ளதோடு மாணவர்கள் ஆர்வத்தோடும் மகிழ்ச்சியோடும் கற்றலில் ஈடுபடுவதற்கு முடியுமாகின்றது.

## 6.3.2 கற்றல் கற்பித்தல் பாவனை உபகரணங்கள்

**01. பாடசாலைத் தவணை - உபகரண இல :** முதலாந்தவணை - 01

**02. தேர்ச்சி மட்டம் :** 12, 13, 14

**03. விடய உள்ளடக்கம் :**

- இறைவனது படைப்பின் அழகு
- இறைவனது வியப்புக்குரிய திட்டம்
- படைப்பின் பல்வகைத் தன்மை

**04. உபகரணத்தின் இயல்பு :**

- இறைவனது படைப்பினைக் கண்டு ணரும் வகையில் மாணவரால் ஆக்கப் பட்ட கண்காட்சி

**05. உபகரணத்தின் நோக்கம் :**

- இறைபடைப்பின் அழகினைத் தெரிந்து கொள்வர்.
- இறைவன் படைப்பு வியப்புக்குரிய திட்டம் என்பதை சித்திரங்கள் ஊடாகக் கண்டுணர்வர்.
- படைப்பின் வேறுபட்ட தன்மைகளைக் கண்டுணருவதற்காகப் பல்வேறு சித்திரங்களை முன்வைப்பர்.
- பல்வேறுபட்ட தன்மைகளைக் கொண்ட சித்திரங்களைக் காட்சிப் படுத்துவதன் வாயிலாகப் பாடசாலை யில் கண்காட்சி ஒன்றினை ஒழுங்கு செய்வர்.

**06. சாதனங்களின் நடைமுறைப்படுத்தல் தொடர்பாக ஆசிரியர்களுக்கு ஆலோசனை:**

- செயற்பாட்டு நடவடிக்கையின் போது செயற்பாடு 1.2 ஆரம்பிக்க முன்னர் சாதனத்தை வகுப்பறைக்கு அறிமுகப் படுத்துங்கள்.
- இந்நிகழ்வு சித்திரம் வரைதலில் ஆரம்பமாகிக் கண்காட்சியில் முடி வடையும் என்பதை மாணவருக்கு அறிவுறுத்துங்கள்.
- சித்திரம் வரைதலுக்கு அயற்சூழலை அவதானிக்க வேண்டும் என்பதை மாணவருக்கு அறிவுறுத்துங்கள்.

- குறித்த நேரத்திற்குள் சித்திரம் வரைவதற்கு அல்லது ஆக்கங்களை நிர்மாணிப்பதற்கு மாணவரை வழிப்படுத்துங்கள்.
- சித்திர கண்காட்சி நடைபெறும் தினம் பற்றி மாணவருக்கு அறிவுறுத்துங்கள்.

**07. மாணவருக்கான ஆலோசனைகள்:**

- ஆசிரியர் / ஆசிரியை வழங்கும் அறிவுரைகளுக்கு செவிசாயுங்கள்.
- பாடசாலை வளாகத்துள் சுற்றாடலை அவதானிக்கும் களப்பயணம் ஒன்றில் ஈடுபடுங்கள்.
- சுற்றாடலின் பல்விதம், அலங்காரம் மற்றும் எழில் என்பவற்றைக் கண்டுணர்வதற்காக சித்திரம் ஒன்றை உருவாக்குங்கள்.
- இதற்காக பெஸ்டல் / நீர் வர்ணம் அல்லது சுற்றாடலில் உள்ள இலை, பூ, தோல் என்பவற்றையும் உபயோகிக்கலாம்.
- கண்காட்சிக்கான வெளியீடுகளை இறுதி நிறைவுக்காக முன்வையுங்கள்.

### கணிப்பீட்டு நியதி

| ஆக்கம் / பெயர் | நோக்கம் தெளிவாக இருத்தல் | செயலாற்றுகையும் பொறுப்பும் | அறிவுரைகளை ஏற்றல் | தலைமைத்துவ பண்புகளை வெளிப்படுத்தல் | சித்திரத்தின் கலையம்சம் நிறைவு | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

### புள்ளி விபரங்கள்

மிக நன்று - 04
நன்று - 03
சாதாரணம் - 02
விருத்தியடைய வேண்டியுள்ளது - 01

**01. பாடசாலைத் தவணை - உபகரண இல** : இரண்டாந்தவணை - 02

**02. தேர்ச்சி மட்டம்** : 2.1, 2.2

**03. விடய உள்ளடக்கம்** :
- குலமுதுவர்
- மோயீசனின் அழைப்பு

**04. உபகரணத்தின் இயல்பு** :
- இறைவாழ்வு தேவகட்டளையின் வழி காட்டல் பற்றிய காட்சி அடங்கிய சுவர்ப்பத்திரிகை

**05. உபகரணத்தின் நோக்கம்** :
- தேவகட்டளை எமக்குக் கிடைத்த விதம் பற்றிக் கண்டறிதல்.
- தேவ கட்டளைக்கு அமைய எமது வாழ்வை மாற்றியமைத்துக் கொள்ளும் முறையைக் கண்டறிவதற்கான காரணிகளை முன்வைத்தல்.
- அக்காரணிகளைச் சரியான முறையில் அறிக்கைப்படுத்தல்.
- அறிக்கைப்படுத்தப்பட்ட தகவல்களை செய்தித்தாள் வாயிலாக வெளிப் படுத்தல்.

**06. உபகரண பாவனை தொடர்பாக ஆசிரியருக்கு அறிவுறுத்தல்:**
- செயற்பாடுகளின் போது செயற்பாடு 2.1 இற்கு முன்னர் உபகரணத்தை அறிமுகம் செய்க.
- இது தொடர்பான சித்திரம், ஆக்கங் கள், அறிக்கை, கடிதங்கள் என்பவற் றைப் பத்திரிகைக்கு வழங்குவதோடு மூலம் செயற்பாடு நிறைவுபெறும் என்பதை மாணவருக்கு அறிவுறுத்தல்.
- மாணவரை மூன்று குழுக்களாக பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்கும் சுவர்ப் பத்திரி கைக்கு முன்வைக்கக்கூடிய அம்சங் களைக் கூறுங்கள்.
- சித்திர ஆக்கங்கள் இரண்டு, கடிதங்கள் இரண்டு, மற்றும் அறிக்கை என்பவற்றைச் சுவர்ப்பத்திரிகையில் முன்வைப்பதற்கு மாணவரை வழிப் படுத்துங்கள்.
- இதற்கான இறுதியான தினத்தை அறிவியுங்கள்.

**07. மாணவருக்கான அறிவுறுத்தல்:**

- ஆசிரியர் அல்லது ஆசிரியை வழங்கும் அறிவுறுத்தல்களைக் குறித்துக் கொள்ளுங்கள்.
- அவற்றைப் பின்பற்றி, குழுவாகச் சுவர்ப்பத்திரிகைக்கான ஆக்கங்களைத் தயார்படுத்துங்கள்.
- தயாரிக்கப்பட்ட ஆக்கங்களைக் குழு நிலையில் முன்வைத்துக் கலந்துரையாடி சிறந்த ஆக்கங்களைத் தெரிவு செய்யுங்கள்.
- ஆசிரியர்/ஆசிரியை வழங்கும் அறிவுரைகளுக்கு செவிசாயுங்கள்.
- பாடசாலை வளாகத்துள் சுற்றாடலை அவதானிக்கும் களப்பயணம் ஒன்றில் ஈடுபடுங்கள்.
- அவற்றைச் சுவர்ப்பத்திரிகைக்கு முன் வையுங்கள்.

**கணிப்பீட்டு நியதி**

| ஆக்கம் / பெயர் | நோக்கம் தெளிவாக இருத்தல் | செயலாற்றுகையும் பொறுப்பும் | அறிவுரைகளை ஏற்றல் | தலைமைத்துவ பண்புகளை வெளிப்படுத்தல் | சித்திரத்தின் கலையம்சம் நிறைவு | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

**புள்ளி விபரங்கள்**

மிக நன்று - 04
நன்று - 03
சாதாரணம் - 02
விருத்தியடைய வேண்டியுள்ளது - 01

කතෝලික ධර්මය 6 ශ්‍රේණිය (T)
ගුරු මාර්ගෝපදේශ සංග්‍රහය

2010/T/6/TIM/2750